
# கல்கி

KALKI 7.7.91


ரூ. 2.50







அரசு அடகு வைத்த
தங்கத்தை
மீட்க முடியுமா?




# மிருதுவான போஷாக்கு

**உங்கள் குழந்தைக்கு 4 மாதங்களாகும் சமயத்தில் அவனது இயற்கை உணவான பாலுடன் எளிதில் ஜீரணிக்க உகந்த போஷாக்கு உணவான நெஸ்டத்தையும் கொடுங்கள்.**

பாலுடன் கலந்து தயாரிக்கப்பட்ட நெஸ்டம் உங்கள் குழந்தையின் மிருதுவான முதல் திட உணவாகும். ஏனெனில் இதில் குழந்தை ஆரோக்கியமாய் வளர்வதற்குரிய எல்லா போஷாக்குகளும் சமச்சீர் அளவில் அடங்கியுள்ளன. உங்கள் குழந்தையின் உணவில் வெவ்வேறு சுவையைக் கூட்ட விரும்பினால், அவ்வகை உணவுடன் நெஸ்டத்தை கலந்து கொடுங்கள். உதாரணமாய் வேக வைத்த பழங்கள், வேகவைத்து மசிய வைத்த காய்கறிகள் மற்றும் பருப்பு வகைகள்.

அரிசி சேர்த்த நெஸ்டம் போஷாக்கு நிறைந்த ஸீரியல் ஆகும். உங்கள் குழந்தை இதை எளிதில் ஜீரணிக்கும். உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு மருத்துவர்கள் சிபாரிசு செய்யும் எல்லாவித போஷாக்கும் இதில் உள்ளன. உறுதியான எலும்புகளுக்கும் பற்களுக்கும் தேவையான கால்ஷியம்; ஆரோக்கியமான ரத்தத்திற்கு தேவையான இரும்பு சத்து; பட்டு போல் பளபளக்கும் சருமத்திற்கும், ஒளிவீசும் கண்களுக்கும், நோய் எதிர்ப்பு சக்திக்கும் தேவையான வைட்டமின்களும் இதில் அடங்கியுள்ளன.

உங்கள் செல்லக் குழந்தை நெஸ்டத்துடன் சேர்ந்து வளர்வதை கவனியுங்கள்.

இலவச நெஸ்டம் செய்முறை புத்தகத்திற்கு எழுதுங்கள். போஸ்ட் பேக் 25, புது டில்லி-

எளிதில் ஜீரணிக்க வல்ல பேபி

**நெஸ்ட**

# புதிய பிரதமர்:
# பழைய கதைகள்

சுவாமி ராமானந்த தீர்த்தர் ஓர் ஆன்மீகவாதி. சுதந்திரப் போராட்ட வீரர். ஆந்திரப் பிரதேசத்தில், காங்கிரஸில் முன்னணித் தலைவர். அவருக்கு மூன்று சிஷ்யர்கள். அவருடனே இருந்து, அரசியல் புரிந்து, சுதந்திர போராட்டத்தில் பங்கு பெற்றார்கள். வீரேந்திர பாட்டீல், எஸ். பி. சவான், பாலமூரி வெங்கிட நரசிம்மராவ்!

மூவரும் கர்நாடகம், மஹாராஷ்டிரம், ஆந்திரம் என்று வேறு வேறு மாநிலங்களின் முதல்வர், உள்துறை மந்திரி எனப் பிரகாசிக்க, அவர்களிலும் சிறந்த சாதனையாக பி. வி. நரசிம்மராவ் இன்று பிரதமராகப் பொறுப்பேற்றிருக்கிறார்.

தில்லியில் இவரைச் சந்திக்கிறவர்கள் ஒரு தர்மசங்கடத்தையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். நரசிம்மராவைச் சந்திக்க அனுமதி பெறுவதில் கஷ்டமில்லை. ஆனால், இந்தியன் பங்க்சுவாலிட்டிக்கு இவர் கடும் எதிரி. குறித்த நேரத்திற்குப் பத்து நிமிடம் தாமதமானாலும் ''நோ'' - என்கிற பதில் வந்து விடும். ''மற்றொரு முறை நேரம் குறித்துக் கொண்டு சந்திப்போம். இந்த இடைவெளியில் வேறு வேலையைச் செய்ய நான் தீர்மானித்து விட்டேன்!''

இளமைக் காலத்தில் 'வெள்ளையனே வெளியேறு' போன்ற பற்பல போராட்டங்களைச் சந்தித்தவர் என்றாலும் நாக்பூரில் பட்டப் படிப்பு, புனேயில் சட்டம் என்று படித்துத் தேறினார். படிப்பைக் கொண்டு பதவி தேடாமல் பொது வாழ்வுக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்.



ஆந்திர மாநிலத்தில் 1957 ம் வருடம் ஆந்திர சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டதும் அப்போதைய சஞ்சீவ ரெட்டி அமைச்சரவையில் அமைச்சர் பொறுப்புக் கிடைக்க, 1964ல் பிரம்மானந்த ரெட்டி தலைமையில் அமைந்த அமைச்சரவையிலும் அமைச்சர் பொறுப்புத் தொடர்ந்தது.

காரணம்?

ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை கோஷ்டி சேராமை; கோஷ்டி சேர்க்காமை என்ற கொள்கையை இவர் கடைப்பிடித்து வருவதே. இந்தச் சுபாவத்தைக் கவனித்துக் கவரப் பெற்ற இவரின் அப்போதைய 'ஹை கமாண்ட்' திருமதி இந்திரா காந்தி அதற்குப் பரிசாய் முதல்வர் நாற்காலியை அளித்தார்.

அப்போது, மாநிலத்தில் தெலுங்கானாப் போராட்டம் உச்சகட்டத்தை அடைந்திருந்தது. இந்திரா காந்தி இவரிடம் வைத்த நம்பிக்கை வீண் போகவில்லை. திறம்படப் போராட்டத்தைக் கட்டுப்படுத்தி, சமாதானப்படுத்தி, 'தனித் தெலுங்கானா' கோஷத்தை மறையச் செய்தார்.

இருப்பினும், ஆந்திர மாநில கோஷ்டி அரசியல் இரண்டு மூன்று வருடங்களில் வேறு ரூபத்தில் வெடித்தது. நெருப்புக் குழம்பு வீசிற்று. சென்னா ரெட்டிக்கு எதிராகப் பிருமானந்த ரெட்டியின் ''ஜெய ஆந்திரா'' போராட்டம். அதன் காரணமாக மூன்றில் இரு பங்கு மெஜாரிட்டியுடனிருந்தாலும் காங்கிரஸ் மந்திரி சபை கலைக்கப்பட்டு பி. வி. நரசிம்மராவ் மத்திய அரசியலுக்கு இழுக்கப்பட்டார். அகில இந்தியக் காங்கிரஸின் பொதுச் செயலாளரானார்.

எளிமை இவரது இன்னொரு சொத்து. கதரில் பஞ்சகச்சம், ஜிப்பா போன்ற மேலுடை, கலபத்தில் அணியும் விதமாகக் கட்ஷூ என்று தோற்றத்தில் மட்டுமின்றிச் சுபாவத்திலும் எளியவர்.

கட்சியின் மீது/ மிகக் கடுமையாகக்



குற்றச்சாட்டு வந்த எமர்ஜென்ஸியின் போது, இவர் காங்கிரஸின் மிக முக்கிய பொறுப்பில் இருந்திருந்தாலும் எந்த ஓர் அரசு அதிகாரியோ, எதிர்க் கட்சியோ, பாதிக்கப்பட்ட பொது ஜனமோ குற்றம் சாட்டி இவர் புறம் தம் சுட்டு விரலை நீட்டியதில்லை.

மத்திய அரசில் வெளி விவகார அமைச்சரிலிருந்து தொடங்கி, உள்துறை, பாதுகாப்பு, மனித வள மேம்பாடு என பற்பல முக்கிய துறைகளை வெகு நேர்த்தியாக நடத்திக் காட்டினார்.

தில்லியில் இவரது பழைய வெல்லிங்டன் கிரஸன்ட் வீட்டிலும் சரி, இப்போதிருக்கும் வீட்டிலும் சரி, வரவேற்பறையில் இந்தியாவின் அத்தனை மாநிலத் தினசரிகளும், பத்திரிக்கைகளும் நிரம்பி வழியும். வெறும் அலங்காரமாக இல்லாமல் அத்தனையையும் புரட்டிப் பார்த்து முக்கியமானவற்றைப் படித்து விடும் பழக்கம் உடையவர்.

இவருக்கு ஆங்கிலம், ஹிந்தி, மராத்தி, சமஸ்கிருதம், உருது, பாரசீகம், அரபிக், ஸ்பானிஷ், பிரெஞ்ச், தாய்மொழியான தெலுங்கு என்று பத்து மொழிகள் எழுதப் படிக்கத் தெரியும்.

இவருடைய மொழி ஆர்வத்திற்குக் காரணம் - இலக்கிய ஈடுபாடு. தம்மைச் சந்திக்க வரும் நிருபர்களிடம் அந்தந்த மாநிலத்தின் சமீபத்திய படைப்பிலக்கியங்களைப் பற்றி நிறையப் பேசி, உற்சாகம் காட்டுவதுண்டு. கேள்விப் படும் சிறப்பான நூல்களை வரவழைத்துப் படித்து, அவற்றைப் பிற மொழிகளில் மொழி மாற்றம் செய்வது இவருக்குப் பிடித்தமான பணி. இப்படி மொழி மாற்றம் செய்த நூல்களும், தாமாகவே எழுதிய நூல்களும், சேகரித்து வைத்திருக்கும் நூல்களுமாக இவர் வீடு முழுக்க நிரம்பி வழியும்.

ஞானபீட நடுவர் குழுவின் தலைவராக மூன்று வருடங்கள் இடம்பெற்றவர். இவர் தேர்ந்தெடுத்து ஞானபீடப் பரிசு பெற்றவர்தான் தகழி.

சுவாரஸ்யமான ஒரு சம்பவத்தைத் தெரிவித்தார் இவரை அறிந்த ஒரு பத்திரிகையாளர்.

இவர் வீட்டிற்கு வந்து, தன் கணவரைப் பற்றிப் புகார் செய்தாள் ஒரு மனைவி!

''எந்த நேரமும் கட்சி வேலையின்னு போயிடறார் அய்யா. மனைவி, குடும்பம், குழந்தைகள் பற்றிக் கவலைப்படுவதில்லை.''

கணவனை அழைத்து வரச் செய்து அட்வைஸ் செய்தார் ராவ்: ''முதலில் உன் குடும்பத்திற்கு நல்ல கணவனாக, நல்ல தந்தையாக இரு. அதற்குப் போக, மிகுந்த நேரத்தைக் கட்சிக்குச் செலவிட்டால் போதும். கட்சிக்காக முழு நேரத்தையும் செலவழிக்கத்தான் என்னைப் போன்ற வயதானவர்கள் இருக்கிறோமே!''

ஒரு மோதல், அறிவுரையில் சமாதானமாகிப் போனது.

உட்கட்சிப் போட்டி, மோதல் இவையெல்லாம் இவர் முன்நிற்கும் இன்றைய இடர்ப்பாடு. இப்போது சாம்பல் பூத்திருந்தாலும் பின் காற்றடித்தால் கனன்று சிவக்கும் ஆபத்து. இதை இவர் எப்படிச் சமாளிக்கப் போகிறார்? திருமதி காந்தி, ராஜீவ் ஆகியோர் அமைச்சரவையில் இரண்டாம் இடம் வகித்து, இவர் பெற்றிருக்கும் அனுபவம் கைகொடுக்குமா?

ஓர் உதாரணம். செவி வழிச் செய்தி:

''நூற்றுக்கு நூறு சீட் பெற்ற தமிழகத்திற்கு காபினட் மந்திரி இல்லாதது பெரிய குறையாக மனத்தை உறுத்துகிறது'' என்று கைகட்டி வருத்தப்பட்டிருக்கிறார் நம் ஊர் அரசியல்வாதி ஒருவர்.


நரசிம்மராவ் புன்னகையுடன் தெரிவித்த பதில் : ''அப்படியா? இல்லையே? நம் மாநிலத்திற்கு காபினட் மந்திரி பதவி கொடுக்கவில்லைதான். ஆனால் பிரதமர் பதவியே கொடுத்திருக்கிறேனே!''

வந்தவருக்குச் சில விநாடி அதிர்ச்சி. தொடர்கிறார் ராவ் : ''என்னை ஏன் வேற்று மாநிலத்தவராகப் பார்க்கிறீர்கள்?''

- சுந்தர்ஜி

படங்கள் : கே. வி. ஆனந்த்

அட்டை வண்ணப்படம் : பி. ஐ. பி.




# அடகு வைத்த தங்கத்தை மீட்க முடியுமா?

நமது நாட்டைச் சேர்ந்த இருபது டன் தங்கத்தைச் சந்திரசேகர் அரசு அடகு வைத்து, ஸ்விஸ் வங்கி ஒன்றில் 200 மிலியன் அமெரிக்க டாலர் கடன் வாங்கியது. சந்திரசேகர் அரசு கடைசியாகச் செய்த காரியங்களுள் ஒன்றான இது, கடுமையான விமர்சனத்துக்கு உள்ளானது. ஆனால் நமது ரிஸர்வ் வங்கி இப்படி கடன் வாங்கியதில் நமக்குப் பெரிய அளவில் பின்னடைவு ஏதுமில்லை. காரணங்களை ஆராய்வோம்.

இதற்கு வட்டி விகிதம் 6.3 சதம். 'ஆறு மாதங்களில் கடன் திருப்பித் தரப்படும்; தங்கம் மீட்கப்படும்' என்றும், 'தவறினால், மேலும் ஆறுமாதங்களுக்குக் கடன் வசதி நீடிக்க வேண்டும்' என்றும் ஒப்பந்தம்.

பொதுவாக இந்தியாவுக்குக் கடன் தர மேல் நாடுகள் இப்போதெல்லாம் தயங்குகின்றன என்பது உண்மையானாலும் இன்று வரை இந்தியா கடன் தவணைகளைத் திருப்பித் தருவதில் ஒரு தடவை கூடப் பிசகியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஓர் இக்கட்டான காலகட்டத்தில் ரிஸர்வ் வங்கி சரியான முடிவெடுத்து, தங்கத்தை அடகு வைத்துக் கடன் வாங்கியது. இப்படிச் செய்திருக்கவில்லையானால் நாம் திருப்பித் தர வேண்டிய தவணைக் கடன்களைக் குறித்த காலத்தில் திருப்பித் தர முடியாமல் திணறி இருப்போம். இது இந்தியாவின் கௌரவத்தை வெகுவாகப் பாதித்திருக்கும்.

'தங்கத்தை அடகு வைக்காமலேயே கடன் வாங்கியிருக்க முடியாதா?' என்ற கேள்வி எழும். கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தியாவின் பொருளாதார முன்னேற்றம் எதிர்பார்த்த அளவில் இல்லை. மேலும் நாட்டில் ஓர் நிலையான அரசு இல்லாமல் நிச்சயமற்ற நிலை தோன்றியிருந்தது. ஆனால் உருப்படியான ஓர் அரசு தற்போது அமையப் பெற்றிருப்பதால் சர்வதேச நிதி அமைப்பு (IMF) பெரிய அளவில் கடன் கொடுத்து உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடகு வைக்கப்பட்ட தங்கத்துக்குத் திரும்பவும் வருவோம். இவையெல்லாம் அரசால் கைப்பற்றப்பட்ட தங்கமே. அதாவது கள்ளத்தனமாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதால் ப றி மு த ல ா ன தங்கம். பெரும்பாலும் வளைகுடா நாடுகளிலிருந்து வந்தவை. இதனை அடகு வைத்துக் கடன் பெறுவதில் தவறு ஏதும் இல்லை. இவ்வாறு கைப்பற்றப்பட்ட தங்கம் நம் அரசிடம் 80 முதல் 90 டன் வரை உள்ளது. இதில் இருபது டன் அடகு வைப்பதால் நாட்டின் தங்கக் கையிருப்புக் குறைந்து போய்விடாது.

ரிஸர்வ் வங்கியிடம் அதிகாரபூர்வமாக உள்ள தங்கக் கையிருப்பு (கடத்தல் தங்கம் நீங்கலாக) 340 டன் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய மக்கள் தங்க ஆபரணங்கள் அணிய மிகவும் விரும்புகிறார்கள். இவ்வாறு நம் மக்களிடம் ஆபரணங்களாக உள்ள தங்கம் 6,500 முதல் 7,000 டன் வரை இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ஜி. கோபாலன்

சர்வதேச மார்க்கெட்டில் தங்கத்தின் அதிகாரபூர்வமான விலை ஒரு கிராமுக்கு ரூ. 200. இந்தியாவில் அதன் விலை ஒரு கிராமுக்கு ரூ. 362. நமது இந்திய அரசிடம் அதாவது ரிஸர்வ் வங்கியிடம் உள்ள கையிருப்புத் தங்கமானது நமது ரூபாய்க்கு மதிப்பு அளிக்கவும், ஏதேனும் ஒரு நெருக்கடியில் கைகொடுக்கவும் போதுமானது.

சில ஆண்டுகளுக்கு முன் சீனா தன்னிடம் இருந்த தங்கத்தில் 200 டன்னை விற்றுவிட்டது. கடன் தவணைகளைத் திருப்பித் தருவதில் தாமதமாகக் கூடாது என்பதற்காகவே இவ்வாறு செய்தது. இதிலிருந்து ஒரு நாடு, ஓர் அவசரத்துக்குத் தங்கத்தை விற்பதிலோ அடகு வைத்துக் கடன் பெறுவதிலோ தவறு இல்லை என்று தெரிய வரும்.

சராசரி குடும்பத் தலைவன் ஒருவனை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு நெருக்கடியில் அவன் தன் மனைவியின் ஆபரணத்தை அடகு வைத்துக் கடன் வாங்குவான். பின்னர் சாமர்த்தியமாகப் பணம் திரட்டி, அல்லது சேமித்து, கடனைத் திருப்பித் தந்து நகையை மீட்பான். அதே போல்தான் பல்வேறு காரணங்களால் நமது நாட்டின் அந்நியக் கடன் நிலவரம் ஓர் இக்கட்டில் சிக்கியபோது, பறிமுதலான கடத்தல் தங்கத்தை அடகு வைத்துக் கடன் பெற்றுள்ளோம்.

பல்வேறு காரணங்கள் என்று குறிப்பிட்டதில் முக்கியமானவை, இறக்குமதியாகும் பெட்ரோலியம் விலை உயர்வும், நமது ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகத்தில், ஏற்றுமதியை விட இறக்குமதி மிகவும் அதிகரித்துவிட்டதும் ஆகும்.

இவ்வாறு ஏற்றுமதிப் பொருள்களின் மதிப்புக்கும் இறக்குமதிப் பொருள்களின் மதிப்புக்கும் இடையே அதிக வித்தியாசம் இருப்பதை நீண்ட காலத்துக்கு நாம் அனுமதிக்க முடியாது. எனவே புதிய அரசு வெகு சீக்கிரம் இறக்குமதிக்கு ஏற்ப நமது ஏற்றுமதி வர்த்தகமும் அதிகரிக்கத்தக்க கொள்கைகளை வகுத்து, அமுல்படுத்தி, நிலைமையைச் சீராக்க வேண்டும். இதனைச் செய்தால்தான் உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம் போன்றவை வழங்கும் கடன்களும் அயல் நாடுகளில் வாழும் இந்தியர் இங்கே அனுப்பும் பணமும் அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயனாக முடியும்.

சரியான தொழில், பொருளாதாரக் கொள்கைகள், அடகு வைத்த தங்கத்தை மீட்பது மட்டுமல்ல, நமது நாட்டையும் வளமுறச் செய்யும்.

ஒரு டாக்டர் நோய் என்ன என்பதைப் புரிந்து கொண்ட பிறகுதான் சரியான மருந்து தரமுடியும். நமது புதிய நிதி அமைச்சரும் நோயுற்றிருக்கும் நமது பொருளாதாரத்தை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார். ச ரி ய ா ன மருந்தும் வைத்திருப்பார் என நம்புவோம்.

## அடுத்த இதழில்...

**OO வாக்கிங் போகலாம் ; நோயின்றி வாழலாம் !**

- மருத்துவக் கட்டுரை

**OO இலங்கைத் தீவிரவாதிகள் எப்படி வளர்ந்தனர்?**

- சிறப்புக் கட்டுரை

---

''லஞ்சக் கவர் கொடுத்தேன். வாங்க மாட்டேன்னு சொல்லிட்டாரு!''

''பரவாயில்லையே.. இந்தக் காலத்துல கூட இப்படிப்பட்ட நல்லவரா?''

''அட நீங்க ஒன்னு! 'கவர்ல குறைச்சு வச்சு ஏமாத்திடுவே. எண்ணி, கையில கொடு'ன்னு கேட்டு வாங்கிட்டாரு!''

- திருத்துறைப்பூண்டி
எஸ். கந்தசாமி.



# 'தேர்தலில் நிற்காதே' என்று மிரட்டினார்கள்!



தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட 248 வேட்பாளர்களில் 247 பேரின் டெபாஸிட்டு களை இழக்கச் செய்து, இருபதாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில், தி.மு.க. வேட்பாளரைத் தோற்கடித்து, அரவக் குறிச்சித் தொகுதியில் வெற்றிக்கொடி நாட்டியிருப்பவர் பேராசிரியை மரியம் - உல் - ஆசியா.

''நாளிதழ் அளவில் இருந்த வாக்குச் சீட்டில், 171-ம் வரிசையிலிருந்த என் பெயரையும், இரட்டை இலைச் சின்னத்தையும் பார்த்து முத்திரையிட்டு, மக்கள் என்னை வெற்றி பெறச் செய்ததற்குக் காரணம், புரட்சித் தலைவரின் புகழும், அவரது வாரிசாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் புரட்சித் தலைவியின் மேல், மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையும்தான்'' என்று அடக்கத்துடன் சொல்கிறார் இவர்!

மரியமுல் ஆசியா என்ற பெயரை மரியம் - உல் - ஆசியா என்று ஒன்பதெழுத்து வரும்படி மாற்றியவர் ஜெயலலிதாதானாம். முஸ்லீம் சமுதாயத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு முதன் முதலாகச் சட்டமன்றத்திற்கு வந்திருக்கும் பெண்மணியும் இவர்தான்.

''நான் அ. தி. மு. க. வில் 1989-ல்தான் சேர்ந்தாலும், என் கணவர் ஜெய்லானி, 1972-ல் இருந்தே கழக ஊழியராக இருந்து வருகிறார். புரட்சித் தலைவருக்கு மிகவும் அறிமுகமானவர். அரவக்குறிச்சி தொகுதியில் கழகத்தை வளர்த்தவர்'' என்று குறிப்பிடும் மரியத்தின் சொந்த ஊர் தஞ்சை மாவட்டம் குடவாசல். அப்பா சிங்கப்பூரில் வியாபாரம் செய்து வருகிறார். புகுந்த ஊர்தான் அரவக்குறிச்சி.

சமுதாயத்தில் பெண்களின் - அதிலும் குறிப்பாக முஸ்லீம் பெண்களின் மேம்பாடு குறித்து மிகவும் ஆர்வம் கொண்டிருக்கிறார் மரியம். பெண்களுக்கான தொழிற்கல்விப் பள்ளி, ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி போன்றவற்றையும் நடத்தி வருகிறார்.

''எங்கள் சமூகத்தில் பெண்கள் இன்னமும் வீட்டிற்குள்தான் அடைந்து கிடக்கிறார்கள். கல்வி ஒன்றுதான் இவர்களை வெளியே கொண்டு வர முடியும். ஆனால் பழைமைவாதிகளின் பிடி அவர்கள் மீது இறுக்கமாகவே இருக்கிறது'' என்று வருத்தப்படுகிறார் மரியம். இவர் தேர்தலில் நின்ற போது, 'தேர்தலில் நிற்காதே' என்று பல முஸ்லீம் பழைமைவாதிகளிடமிருந்து மிரட்டல் கடிதங்கள் வந்தனவாம்!

கோவை, பாரதியார் பல்கலைக் கழகத்தில், காயிதே மில்லத் பற்றி ஆராய்ச்சி செய்து எம்.ஃபில் பட்டம் வாங்கிய இவர், இப்போது 'சுதந்திரத்துக்குப் பின் அரசியலில் பெண்கள்' என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார். தவிர 'இஸ்லாம் மதத்தில் பெண்கள்' என்ற ஆராய்ச்சிக் கட்டுரைக்காக வாஷிங்டனில் உள்ள சர்வதேச இஸ்லாமிய மையத்திடமிருந்து மெடல் வாங்கியிருக்கிறார்.


''இந்தியத் தலைவர்களும் அவர்களின் பத்திரிகைப் பணியும்'' என்ற தலைப்பில் ரங்கனாதன் என்பவரோடு கூட்டாகப் புத்தகம் ஒன்றும் எழுதியிருக்கும் மரியத்துக்குப் பிடித்த தலைவர்களில் ஒருவர் ராஜாஜி. மணிசங்கர் அய்யரின் Society for Secularism அமைப்பிலும் முக்கிய பங்கு இவருக்கு உண்டு.


''என்னுடைய சமூகப் பணிக்கும், கல்விப் பணிக்கும் காரணமானவர்கள் என்னுடைய கணவரும், அவரது குடும்பத்தாரும்தான். நான் மேலும் மேலும் படிக்க அனுமதித்து, அரசியலிலும், நான் நுழையக் காரணமாக இருந்தவர்கள் அவர்கள்தான்'' என்று பெருமிதமாகக் குறிப்பிடுகிற மரியத்தின் முதல் பணி, தொகுதியில் குடிதண்ணீர் வசதியில்லாத கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வசதி செய்து தருவதும் சாலைகள் மேம்படுத்துவதும் தானாம்.

சந்திப்பு : கௌசல்யா

படம் : ராஜன்

10 : 1610 : TM


பண வீக்கம்
விலைவாசி உயர்வு
இந்தியக் குடிமகன்
பொறுத்துக்க...
நடக்குமாம்!


தேர்தலுக்கு முன்...
புரட்சித் தலைவி ஒழிக, ஒழிக...
தேர்தலுக்குப் பின்...
புரட்சித் தலைவியே சரணம், சரணம்...


முப்படைத் தளபதிகளும் சல்யூட் அடிச்சி வரவேற்புக் கொடுப்பாங்கன்னு பார்த்தாக்க....
நீர்மூழ்கி ஊழல்
போபர்ஸ் ஊழல்



கல்கி

1991 ஜூலை 7
மலர் : 49 இதழ் : 49
பிரஜோத்பத்தி ஆனி 23



# முதல் தவறுகள் மூன்று!

மலிவு விலை மது ஒழிப்புக்குத் தேதி குறிப்பிட்டு, அ. இ. அ. தி. மு. க. ஆட்சி நல்லவிதமாகவே ஆரம்பமாகியுள்ளது. இதனால் ஏற்படும் வருவாய் இழப்புக்கு முற்றிலுமாக வரி விதிக்காமல், சிக்கன நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் மக்களுக்கு அதிக வரிச்சுமை இராது என்றும் நம்புவோம். கள்ளச் சாராயத்தைக் கட்டுப்படுத்துவது பெரும்பாடாக இருக்கும். ஆனால் கள்ளச் சாராய விற்பனை, மது விலக்கு ரத்துக்குத் தக்க காரணம் ஆகாது. ஆளும் கட்சியினர் ஆதரவுடன் கள்ளச் சாராயத் தயாரிப்பு - விநியோகம் நடக்காமல் முதல்வர் கவனித்துக் கொண்டாலே போதும். அதுவே பெரிய சாதனையாக விளங்கும்!

மதுவிலக்கு பற்றிய அறிவிப்புக்கு முன்னதாகவே ம.வி. பேட்டியில் முதல்வர், ''விடுதலைப் புலிகளை ஒடுக்குவோம்'' என்று வீராவேசத்துடன் முழக்கியிருக்கிறார். இது யதார்த்த நிலையை உணராத பேச்சு. விடுதலைப் புலிகளை நமது போலீஸ் (அவர்கள் எவ்வளவுதான் திறமை மிக்கவர்கள் என்றாலும்) கட்டுப்படுத்துவது என்பது சினிமா ஸ்டண்ட் போல அத்தனை சுலபமல்ல. ஓரிடத்தில் சிலரைச் சுற்றி வளைத்தால் வேறு இடத்தில் மற்றும் பலர் முளைப்பார்கள். கள்ளத் தோணியில் வருவார்கள். தமிழகத்தில் கால் ஊன்றாமல் அவர்களால் ஈழத்தில் போராட முடியாது. கடற்கரை முழுவதும் பாதுகாப்புக்குக் காவலரை நிறுத்த முடியாது. முதல்வருக்கு வேணுமானால் கறுப்புப் பூனைப் பாதுகாப்புக் கிடைக்கலாம். மக்கள் அனைவருக்கும் அத்தகைய பாதுகாப்பு வழங்குவது சாத்தியமல்ல. விடுதலைப் புலிகளை உசுப்பி விட்டால், தலைவர்களைத் தாக்க முடியாத போது, வெறுப்பில் அவர்கள் மக்களைத் தாக்க ஆரம்பிக்கலாம். ரயில் நிலையம், விமான நிலையம் என்று குண்டுகள் வெடிக்க ஆரம்பிக்கலாம். கொரில்லாக்களிடம் அமெரிக்க, பிரிட்டிஷ் வல்லரசுகளே திணறியது - திணறுவது கண் கூடு. பிரச்னைக்கு அரசியல் தீர்வுதான் நிரந்தரப் பரிகாரம். இதற்கு மத்திய அரசின் ஒத்துழைப்புத் தேவை. ஒரு பக்கம் அரசியல் தீர்வுக்கு முயற்சியும் மறுபக்கம் போலீஸ் விழிப்புணர்ச்சியும் செயல்பட வேண்டும்.

மத்திய நிதி அமைச்சரைப் பாருங்கள். 'வானை வில்லாக வளைப்பேன்' என்று அவர் பேசவில்லை. 'பொருளாதாரம் சீர் கெட்டிருக்கிறது; சரிப்படுத்தவே இரண்டு வருஷமாகும்; பிறகு முன்னேற்றம்' என்று யதார்த்தமாகக் கூறுகிறார். தன்னம்பிக்கை தேவைதான்; ஆனால் 'மணலைக் கயிறாகத் திரிக்க முடியாது' என்ற யதார்த்த அறிவும் தேவை.

பஞ்சாப் தேர்தல் ஒத்திப் போடப்பட்டது, சேஷன் தாமாகவே எடுத்த முடிவாக இருக்க முடியாது. புதிய அரசின் ஒப்புதல் அல்லது கோரிக்கை, மறைமுகமாகவேனும் நிச்சயம் இருந்திருக்கும். எவ்வாறாயினும் இது தவறான முடிவு. தேர்தல் ஒத்திவைப்பு பயங்கரவாதிகளுக்கு மாபெரும் வெற்றியாகக் கருதப்படும். அரசு பயந்து விட்டதாக மக்கள் எண்ணிக் கலக்கமடைவர். எப்படியும் தேர்தல் நடந்தே ஆக வேண்டும். சில மாதங்கள் கழித்து நடந்தால் அப்போது மட்டும் வன்முறை இராதா? மறுபடி வேதனையை ஆரம்பத்திலிருந்து அனுபவிப்பதற்குப் பதில் சட்டுப்புட்டென்று இப்போதே தேர்தலை நடத்தி முடித்திருக்கலாம்.

கருணாநிதியின் ராஜினாமா மூன்று தவறுகளுள் மகத்தான தவறு. தேர்தல் தோல்விக்கு அவர் பொறுப்பு ஏற்பது எனில், கட்சித் தலைமையை ராஜினாமா செய்திருக்க வேண்டும். அப்போது பாராட்டலாம். எம். எல். ஏ. பதவியைத் துறந்ததன் மூலம், தி. மு. க. மானம் ஹார்பரில் கப்பலேறாமல் காத்த தமது தொகுதி மக்களுக்கு மட்டுமின்றி, தமிழகமெங்கும் தி. மு. க. வுக்கு வாக்களித்த லட்சக்கணக்கான வாக்காளர்களுக்கும் துரோகம் இழைத்து விட்டார். தமிழக சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி என்று குறிப்பிட்டுச் சொல்ல ஏதுமில்லாத போது, 'நான் ஒருவனேயானாலும் சிறப்புப் பணியாற்றுவேன்' என்று கூறி, அவர் ஜனநாயகக் கடமையாற்றியிருக்க வேண்டும். இப்போது நகைப்புக்கு இடமளித்து விட்டார். பொது வாழ்வில் இரவும் பகலும் மாறி மாறி வரும். இருட்டில் விளக்கு ஏற்ற வேண்டுமேயன்றி, இருக்கும் விளக்கையும் அணைப்பதா விவேகம்?

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

## சாதனைகளாக மாறிய

# சோதனைகள்!



கல்லூரி மாணவர்
கட்டுரைப் போட்டி

**ரூ. 50 பரிசு பெறும் கட்டுரை**

1983 ஆம் ஆண்டு +2 தேர்வில் தோல்வி முகத்தோடு வீட்டில் நுழைந்த என்னை வ ர வே ற் ற து கொட்டடியில் கட்டிக் கிடந்த இரண்டு எருமை மாடுகள் தான். எருமைகள் என்னை எஜமானனாய் ஏற்றுக் கொண்டன. படிப்பு?

ஏர் ஓட்டினேன், மண்வெட்டி பிடித்துக் கொத்தினேன்; நாற்று நடவும் களை பறிக்கவும் கற்றுக் கொண்டேன். காலை நேரத்தில் வயல். மாலை நேரத்தை டைப் ரைட்டிங் செல்லவும், நூலகம் செல்லவும் ஒதுக்கிக் கொண்டேன். டைப்ரைட்டிங்கில் என்னை விடச் சீனியர் மாணவர்கள், ''நீ இன்னும் பத்து வருடங்கள் தொடர்ந்து டைப் செய்தாலும் நோ யூஸ்'' என்று சர்டிபிகேட் வழங்க, அதை நிரூபிப்பது போல் மாதிரித் தேர்வில் பயிலகத்தில் தோல்வி. அதைச் சாதனையாக்க வேண்டு மென்ற வெறி. கீழ்நிலையில் முதல் சிட்டிங்கிலேயே பாஸ் செய்தேன்.

''டைப் பாஸ் செய்து என்ன பலன்? +2 வை முதலில் பாஸ் பண்ணு'' என்று நண்பர்கள் கேலி செய்ய, ஒரு ட்யூசன் ஆசிரியரிடம் செல்ல, அவரோ, ''உனக்கு இனிமேல் படிப்பே ஏறாது'' என்று ''சாபம்''. கொடுக்க, வீட்டிற்கு வந்து புத்தகங்களை எடுத்துத் திரும்பத் திரும்ப நானாகவே படித்தும் எழுதியும் பார்த்து 104 மதிப்பெண் பெற்று வெற்றி பெற்றேன்.

கல்லூரியில் சேர பி.ஏ. ஆங்கிலம் கேட்டு இரண்டு கல்லூரிகளுக்கு மனுச் செய்தேன். இரண்டு கல்லூரிகளும் சொல்லி வைத்தது போல் பி.ஏ. எக்னாமிக்ஸை சிபாரிசு செய்தன. ஒரு கல்லூரியை நேரில் அணுகி பி.காம்., கேட்டேன். அவர்கள் இடிஇடியெனச் சிரித்து எனக்கும் பி.காமுக் கும் என்ன சம்பந்தம் என்று கேட்டார்கள். தர மறுத்து விட்டார்கள். விளைவு மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் அஞ்சல் வழிக் கல்வியில் பி.காம். எடுத்து ட்யூசன் இல்லாமலே வெற்றி பெற்றேன்.

இடையில் சென்னை வந்து ஒரு பெரிய கம்பெனியில் டைப்பிஸ்ட் வேலையில் சேர்ந்தேன். தினம் இருபது ரூபாய்க்குக் காலை முதல் இரவு நெடுநேரம் வரை உழைக்க வேண்டும். பலன் இன்னொரு கம்பெனியில் மாதச் சம்பளத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டேன்.

கல்கி நினைவுச் சிறுகதைப் போட் டிக்கு நான் எழுதுவதும் திரும்பி வருவதும் வாடிக்கை. எனது நண்பர்கள் கல்கியில் உனது சிறுகதை வெளிவர ''சான்ஸ்'' இல்லை என்று சத்தியம் செய்தார்கள். சென்ற ஆண்டு பிரசுரத்திற்குத் தேர்ந் தெடுக்கப்பட்ட பதினைந்து சிறுகதைகளில் ''கருவறைச் சாபங்கள்'' என்ற என் சிறுகதையும் ஒன்று!

- எம். கிருடேஷ்ராஜ்
வணிகவியல் (முதுநிலை) இரண்டா மாண்டு,
அஞ்சல் வழிக் கல்வி,
மதுரை காமராஜ் பல்கலைக் கழகம்,
மதுரை - 25.



'நோ யூஸ்' சர்டிபிகேட்!

**ஐந்து மார்க் சோதனை!**

என்னைப் போன்ற ''உயர் ஜாதி''


மாணவர்களுக்கு இஞ்சினியரிங், மருத்துவம் போன்ற துறைகளில் சேர்ந்து படிப்பது தமிழ்நாட்டிற்குள் எட்டாக் கனியாகி விட்டது. 93.6 சதவீதமும் கணிதத்தில் 195/200 எடுத்து இருந்தும் கலைஞரின் வினோத அறிவிப்பினால் (இதுவரை கல்லூரிப் படிப்பை எட்டாத குடும்பத்திலிருந்து வந்த முதல் மாணவருக்கு 5 மார்க்கு அதிகம் கூட்டிக் கொண்டது) பாதிக்கப்பட்டவன் நான்.

பிராந்திய இஞ்சினியரிங் கல்லூரியில் வெளி மாநிலத்திற்கான ஒதுக்கீட்டில் பஞ்சாப், ஜலந்தரில் மூன்று இடங்களுக்கு மட்டும் யாருமே செல்ல விரும்பவில்லை. எனக்கோ பஞ்சாப் கண நேரத்தில் வாழ்வளித்தது. எனது துணிச்சலைப் பாராட்டி வேறு ஒரு மாணவரும் ஒரு மாணவியும் பின்னர் வந்து சேர்ந்தனர். வன்முறை எங்கு இல்லை? பயந்தால் முன்னேறுவது எப்படி?

ஜலந்தரில் ஆகஸ்டு 9ந் தேதி சேரும் போது கல்லூரி ஹாஸ்டல் தயாராக இல்லாததால் சேர்ந்து விட்டு அன்றே டெல்லி திரும்பினேன். எனது உறவினர் வீட்டில் கட்டாயமாகப் பத்து நாள் தங்கும் படி ஏற்பட்டது. அந்த நேரத்தில் உபயோகமான காரியம் செய்தேன். பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு அந்த ஆண்டு புதிய பாடத் திட்டத்தில் வெளியாகும் புத்தகங்களைப் பத்து செட் வாங்கினேன். எனது தந்தை என் கைச் செலவுக்காகக் கொடுத்து இருந்த 1500 ரூபாயும் புத்தகங்களாக மாற, அவை நான் படித்த நெய்வேலி பள்ளியில் விநியோகமான போது பல பெற்றோர்கள் வாழ்த்தினர். பள்ளி நிர்வாகமும் பாராட்டியது.


ஐந்து மார்க் சோதனை என்னைத் தமிழ்நாட்டிலிருந்து துரத்தினாலும் நாலு ஆண்டுகளுக்குப் பிறகு பாஞ்சாலத்தின் ஒரு சாதனையாக வெளிவர இருக்கும் நான், கட்டாயமாகத் தொழில் நுட்பத்தில் தமிழகத்துக்கே உதவுவேன்!

- கோ. இரமேஷ்,
அறை 309, ஆண்கள் ஹாஸ்டல்,
பிராந்திய பொறி இயல் கல்லூரி,
ஜலந்தர் - 144 004.



..புத்தகங்களாக மாறின!

..வரைந்து பார்த்தேன்!



## பயண நேரமும் பயன் தரும்

'நான் +2 தேர்வு எழுதி விட்டு வீட்டில் வேலையில்லாமல் இருந்த சமயத்தில் எங்கள் வீட்டிற்குப் பக்கத்தில் புத்தகம் பைண்டிங் செய்யத் தெரிந்த நண்பர் ஒருவர் இருந்தார். நான் அவரை நாடி 'பைண்டிங்' செய்யப் பழகிக் கொண்டேன். அது இப்பொழுது எனக்கும் மற்றவர்களுக்கும் பயன் தருகிறது.

தினமும் கல்லூரிக்குப் 'பஸ்'ஸில்தான் செல்ல வேண்டும். போக வர ஒரு மணி நேரம் ஆகும். அந்த நேரத்தைப் பயனுள்ளதாக மாற்ற விரும்பி, மனத்தை ஒருமுகப்படுத்தி குறிப்பிட்ட ஒரு மந்திரச் சொல்லை ஜபித்து தியானம் செய்வேன். அங்ஙனம் செய்ததில் எனக்கு மனத்தை ஒருமுகப்படுத்தும் ஆற்றல் வளர்ந்தது. பஸ் நிலையத்திலிருந்து கல்லூரிக்கு நடந்து செல்லும் போது, முந்தைய தினம் பேராசிரியர்கள் வகுப்பில் நடத்திய பாடத்தின் கருத்துக்களை நினைவுபடுத்திக் கொண்டே செல்வேன். பேருந்துக்காகக் காத்திருக்கும் வேளைகளிலும் அப்படியே. இது என் நினைவாற்றலை அதிகமாக்கியது.

கல்லூரி விடுமுறை நாட்களில் சிறந்த ஓவியங்கள் எந்த இதழ்களில் வெளிவந்தாலும் அவற்றைத் திரும்ப வரைந்து பார்ப்பேன். இந்தப் பொழுதுபோக்கு, வகுப்பு 'ரிக்கார்டு' நோட்டுகளில் படம்

வரைவதை எளிதாக்கியது.

- வி. ராஜன் பாபு,
இரண்டாமாண்டு விலங்கியல் துறை,
ந. க. ம. கல்லூரி,
பொள்ளாச்சி.

## ராகிங் வளர்த்த கலை ஆர்வம் !

''ராகிங்'' - இந்தச் சோதனைக்கு ஒருவரும் விதிவிலக்கல்ல. ''ஒரு திரைப் படப் பாடலைப் பாடிக் கொண்டு ஆடி விட்டுத்தான் போக வேண்டும்'' என்றனர். கர்நாடக இசையில் எனக்குத் தெரிந்த ஒரு தமிழ்ப் பாடலை கண்ணீர் மல்கப் பாடிப் பரதத்தில் எனக்குத் தெரிந்த சில அபி நயங்களைச் செய்து காண்பிக்கும் போது ஒரே நிசப்தம்! முடிந்த பிறகு ஒரே கைத்தட்டல், பா ரா ட் டு! இத்தனைக்கும் நான் முறையாக ஆடவே இல்லை. ஆனால் அக் கூட்டத்தில் Fine arts குழு உறுப்பினர்கள் இருந்ததைத் தெரிந்து கொண்டேன். கல்லூரி விழாக்களில் பங் கேற்க அ ழை க் க ப் ப ட லா ம் என்று தோன்றவே பரதம், சாஸ்திரிய இசை இவற்றை ஓரளவு முறையாகக் கற்றுக் கொண்டேன். பல்வேறு கல்லூரி மாண வரிடையே என் பெயர் பிரபலமாகியது.

- கே. சுவாமிநாதன்,
பயிற்சி மருத்துவர்,
அரசினர் ராசாசி மருத்துவமனை,
மதுரை மருத்துவக் கல்லூரி,
மதுரை.

## ஆங்கிலமும் ஆல்வா எடிசனும்!

''தாமஸ் ஆல்வா எடிசன் பல்பைச் செய்யும் போது 1,400 முறை தோல்வி கண்டார்.'' - இச் செய்தியைப் படித்த வுடன், 'முயன்றால் முடியாதது உலகில் எதுவும் கிடையாது' என்று உணர்ந்தேன். நான் ஆங்கிலத்தில் 'அடி மக்கு' என்று பெயர் பெற்றவன். தினமும் ஹிந்து நாளிதழை மேய்ந்தேன். ஆங்கில வார்த்தை களைத் தாளில் குறித்துக் கொண்டு, அகராதியில் அர்த்தம் பார்த்து நானே சொந்தமாக வாக்கியத்தில் அமைத்தேன். தினம் ஒரு மணி நேரம் செலவழித்தேன். ஆங்கிலம் தண்ணீர்பட்ட பாடாக மாறியது. நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஆங்கில நூல்களை விரும்பிப் படித்தேன். 'நம்ம மரமண்டைக்கு ஒண்ணுமே ஏறாது என்று வாத்தியாரே சொல்லிட்டாரே' எனச் சும்மா இருந்திருந்தால் தற்போது முதுநிலைப் பட்டம் வாங்குமளவிற்கு நிச்சயம் வளர்ந் திருக்கவே முடியாது.

- எல். காந்திராஜ்,
இரண்டாமாண்டு அஞ்சல் வழி
முதுநிலை இயற்பியல்,
அண்ணாமலை பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர்.

## மும்முறை முதல் பரிசு !

ஆங்கில மீடியத்திலேயே ஆறாம் வகுப்பு வரை படித்தேன். பின்னர் ராசிபுரத்தில் பாட்டி வீட்டில் தங்கியிருந்து படிக்க நேர்ந்தது. அங்கு ஆங்கிலப் பிரிவில் எந்தப் பள்ளியிலும் இடம் கிடைக்க வில்லை. திடீரென்று அனைத்துப் பாடங்களும் தமிழில் படிக்க வேண்டு மென்றால் பயமாக இருந்தது. துணிந்து தமிழ்ப் பிரிவிலேயே சேர்ந்தேன். முதலில் ஒன்றும் புரியாதது போல் மலைப்பாக இருந்தது. க ஷ் ட ப் ப ட் டு ப் படித்தேன். இரண்டு மாதத்தில் சரளமாக எழுத வந்தது. காலாண்டுத் தேர்விலேயே வகுப்பில் முதல் மாணவனாக வந்தேன். விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும் இருந்தால் எப்படியும் வெற்றி பெறலாம் என்றுணர்ந்தேன்.

எட்டாம் வகுப்பு முதல் மீண்டும் ஆங்கிலப் பிரிவுக்கு வந்து விட்டேன். எனக்கு மொழி ஒரு பிரச்சனையாகத் தோன்றவில்லை. ஹிந்தியும் கற்றுக் கொள்ள வேண்டுமென ஆர்வம் ஏற் பட்டது. மாலையில் தனிப்பட்ட முறை யில் ஹிந்தி கற்றுக் கொண்டு, எட்டுப் பரீட்சைகள் தேறி, பண்டிட் பட்டமும் பெற்று விட்டேன்.

ஏழாம் வகுப்பில் சேரும் போது ஏற்பட்ட ஒரு சோதனைதான் தமிழிலும் ஹிந்தியிலும் என்னைத் தேர்ச்சி பெற வைத்தது. தமிழ் மேல் பற்று வளரக் காரணமாக அமைந்தது. கல்கி நடத்தும் மாணவர் போட்டியில் மும்முறை முதல் பரிசு பெறும் சாதனைக்கும் அடிகோலியது.

- வ. செந்தில்குமார்,
இரண்டாம் ஆண்டு,
மதுரை மருத்துவக் கல்லூரி,
மதுரை.

# பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கை எனக்குப் பிடிக்கும்!



இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அ. இ. அ. தி. மு. க. எம். எல். ஏக்களில் அனைவரின் கவனத்தையும் கவர்ந்திருப்பவர் கும்பகோணம் தொகுதி எம். எல். ஏ. ராமநாதன். பொதுவாக திராவிடர் இயக்கங்கள் என்றாலே பிராமணர் எதிர்ப்பு என்ற கருத்துப் பரவி விட்ட சூழ்நிலையில், நெற்றியில் விபூதிப் பட்டையும் குடுமியுமாக ராமநாதன் காட்சியளித்தால் கும்மாவா!

சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலுள்ள அவரது அறையில் ராமநாதனைச் சந்தித்தோம். தரையில் உட்கார்ந்து, மடியில் தலையணையை வைத்துக் கொண்டு, ரொம்பவும் ரிலாக்ஸ்டாக, அவரது தொகுதித் தோழர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார். அவ்வப்போது வந்தவர்களை 'வாங்கண்ணே', 'வா தலைவா' என்று அந்நியோன்யமாக வரவேற்றார்.

இருபத்தியேழே வயதான ராமநாதனின் சொந்த ஊர் மாயவரம் அருகில் உள்ள கூடலூர் கிராமம். ஆனால், பெற்றோர் ராமேஸ்வரத்துக்குக் குடிபெயர்ந்தபடியால் ராமநாதனின் பள்ளிப் படிப்பெல்லாம் அங்கேதான். கல்லூரிப் படிப்பு திருச்சியில். அப்பா வேதவித்தகர்.

''எங்கள் குடும்ப வழக்கப்படி நான் மிகச் சிறிய வயதிலிருந்தே வேதம் கற்று வருகிறேன். சங்கீத ஞானமும் உண்டு. எம். ஜி. ஆரின் ரசிகன். வீட்டிற்குத் தெரியாமல் வாத்தியார் படங்களைப் பார்த்து விட்டு வருவேன். எம். ஜி. ஆர். மேலுள்ள ஈடுபாட்டால்தான் கழகத்தில் என்னை இணைத்துக் கொண்டேன்!'' என்ற ராமநாதன் ''எம். ஜி. ஆரைச் சந்தித்த அனுபவத்தை மறக்கவே முடியாது'' என்கிறார்.

''கழகத்தின் பால் ஈர்ப்பு ஏற்பட்டுச் செயல்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் புரட்சித் தலைவரைப் பார்க்கச் சென்றிருந்தேன். நான் அறைக்குள் நுழைந்தவுடன் என்னை ஒரு மாதிரியாகத் தலை முதல்,

கால் வரை பார்த்தார். நான் கழகத்தில் எனக்குள்ள பிடிப்பை அவரிடம் சொல்லி, பல தோழர்கள் என்னுடன் சரியாக ஒட்டிப் பழகாத நிலைமையையும் எடுத்துச் சொன்னேன். உடனே தலைவர், 'அதெல்லாம் கவலைப்படாதே; நல்லாச் செய். போயிட்டு வா!' என்று அனுப்பி வைத்தார். அவர் சொல்லிப் பல வருடங்கள் உருண்டு விட்டபோதிலும் இன்னமும் அந்தக் குரல் என் காதுகளில் ஒலித்து, என்னை உற்சாகமாகக் கழகப் பணி ஆற்ற வைத்துக் கொண்டிருக்கிறது!''

ராமநாதன் தீவிர அரசியலில் ஈடுபட்டிருப்பது பற்றிக் குடும்பத்தாருக்குக் கொஞ்சம் கவலைதானாம். ஆனால் குடும்பத்தினர் எல்லோருமே எம். ஜி. ஆர். அனுதாபிகள்.

காலையில் நேரம் கிடைக்கும் போது கர்லா கட்டை சுழற்றி உடற்பயிற்சியில் இறங்கி விடுவார். அதே போல் சந்தியா வந்தனம் போன்ற நியம-நிஷ்டைகளையும் தவறாமல் செய்து விடுவார். ராமநாதனுக்குப் பெரியார் கொள்கைகளிலும் ஈடுபாடு உண்டு.

''பெரியார் கொள்கை என்றவுடன் 'கடவுள் இல்லை' என்ற கொள்கைதான் முதலில் எல்லோருடைய ஞாபகத்துக்கும் வருகிறது. அதை விட்டு விடுங்கள். பகுத்தறிவு, பெண்கள் மேம்பாடு என்று பெரியார் நிறையவே சொல்லி விட்டுப் போயிருக்கிறார். அதுவும் குறிப்பாகப் 'பகுத்தறிவு - எதையும் கேள்வி கேட்டுத் தெரிந்து கொண்டு செயல்படும் நிலை - எனக்கு மிகவும் பிடிக்கும். என் அப்பாவிடம், ''விபூதி ஏன் வைத்துக் கொள்ள வேண்டும்?'' என்று கேட்டு, எனக்குத் திருப்தியான பதிலைப் பெற்றவன் நான். கடவுள் எ தி ர் ப் பு க் கொள்கையைப் பொறுத்தமட்டில் எங்கள் அ. தி. மு. க. வில் யாருக்கும் உடன்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. புரட்சித் தலைவர் மூகாம்பிகை அம்மனை வழிபட்டு வந்தவர். மேலும் இதுபோன்ற விஷயங்களெல்லாம் தனி மனித உரிமை சம்பந்தப்பட்டவை!'' என்று சொல்லும் ராமநாதனுக்கு இன்னமும் கல்யாணம் ஆகவில்லை. ''ஐந்து வருடங்கள் போகட்டும் பார்க்கலாம்'' என்கிறார். அதைவிட முக்கியமாகத் தொகுதியில், சாலைகளை அகலப்படுத்துவது, கழிவுநீர் வசதி செய்து தருவது, பஸ் ஸ்டாண்டை அபிவிருத்தி செய்வது என்று பல பணிகள் காத்திருக்கின்றனவாம்!

சந்திப்பு : ப்ரியன்


படம் : ராஜன்

# வட்டமேஜை

O தி. மு. க. வின் இன்றைய படுதோல்விக்கு அதன் ஆட்சியில் மக்கள் கண்ட குறைபாடுகளே காரணம் என்று தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இதனை இன்றல்ல, 1989 லேயே கல்கி சுட்டிக்காட்டி எச்சரித்திருப்பதை அந்த ஆண்டு ஏப்ரல் 2 இதழில் வெளியான கார்ட்டூன் உறுதிப்படுத்துகிறது.
திருப்பதி,
எஸ். என். விஜயராகவன்.

O கவர்ச்சி, அனுதாப அலை, திட்டமிட்டுப் பரப்பப்பட்ட வதந்தி இவைதான் ஜெயலலிதாவின் வெற்றிக்குக் காரணமாக அமைந்திருக்கிறது. ஜனநாயக முறையில் உறுதியான அரசாங்கம் அமைய வேண்டும் என்பது எவ்வளவு முக்கியமோ, அதுபோலவே உறுதியான எதிர்க்கட்சியும் முக்கியம். எதிர்க்கட்சி பலமாக அமையாததின் அபாயத்தை விரைவிலேயே தமிழக மக்கள் உணர்ந்து கொள்வார்கள்.
கொச்சி - 11,
ஷே. ஹாஜா நஜீமுதீன்.

O தலையங்கத்தின் முற்பகுதியில் இந்திரா காந்தியை எமர்ஜென்சிக்காக மக்கள் தண்டித்தார்கள். பின்னர் ஜனதாவிடம் ஏமாற்றம் அடைந்து மீண்டும் இந்திராவுக்கே வாய்ப்புத் தந்தார்கள். அதே போல் ஃபோஃபர்ஸுக்காக ராஜீவைத் தண்டித்த மக்கள் மீண்டும் தேசிய முன்னணியிடம் ஏமாற்றம் அடைந்து ராஜீவிற்கு வாய்ப்புத் தர எண்ணினார்கள் என்று நமது ஜனநாயகத்தில் தேர்தலில் மக்கள் முதிர்ச்சியைக் காட்டுவது போலச் சித்திரிக்கின்றீர்கள். ஆனால், அதே நேரத்தில் தலையங்கப் பிற்பகுதியில் தமிழ்நாட்டுமக்கள் எம். ஜி. ஆர். என்ற தனி நபருக்காகவும், அவருடன் சேர்ந்து நடித்ததற்காக ஜெயலலிதாவிற்காகவும் ஒரு தனி நபர் மாயையில் சிக்கி அறியாமையில் வாக்களித்துள்ளது போல் கூறியுள்ளீர்கள். இந்தக் கூற்று தமிழக மக்களின் சீர்தூக்கும் திறனைத் தாழ்த்தி எடை போடுவதாகவும் அவர்களின் ஜனநாயகத் தீர்ப்பை அவமதிப்பதாகவும் ஆகின்றது.
கோவை,
ம. அம்மை சபா நாயகம்



## அன்றே சொன்னது கல்கி!

O 'வெற்றிலைக்குள் இத்தனை விஷயங்களா!' என மூக்கில் விரல் வைக்க வைத்து விட்டது கட்டுரையும், பேட்டியும்!
நெய்வேலி - 3,
ப. உத்தண்டராமன்.

O வெற்றிலைச் செல்வம் பற்றிய உங்களின் கட்டுரையில் அதன் சாகுபடி முறைகள் பற்றி விரிவாக எழுதியிருந்தது என்னைப் போன்றோருக்குப் பயனுள்ளதாக இருந்தது. வெற்றிலை போடுபவர்களின் சுவையான அனுபவங்களையும் எழுதியிருந்தால் கட்டுரை இன்னும் சிறப்புற்றிருக்கும்!

மொரட்டுப்பாளையம்,

இராஜேஸ்வரன்.

O இளைய தலைமுறையின் வேர்களில் நல் உரமாய்ப் படிந்திருக்கிறார் ராஜீவ் என்பதை நன்கு உணர்த்தின மாணவர் ( என்னைக் கவர்ந்த ராஜீவ்) கட்டுரைகள்.
மடவாளம், சின்னி ராஜன்.

O டாக்டர்களின் நிலை பற்றி ஒரு டாக்டரே விவரித்திருக்கும் கட்டுரை ஒரு சுவையான வழக்காடு மன்றம் போல் இருந்தது.
குத்தாலம், எஸ். ராஜா.

O அரசியல்வாதிகள், டென்னிஸ் வீரர்கள் கடைப்பிடிக்கும் மரபுகளைப் போல் ஜனநாயக விதிகளை மீறாமல் செயல்பட்டால் நாட்டில், வன்முறை, ஆயுதக் கலாச்சாரம் ஒழிந்து அமைதி தழைத்தோங்கும் என்று உணர்த்திய ஆசிரியர் பக்கம் ஓர் அற்புதமான பக்கம்.
கும்பகோணம்,
எஸ். வி. ரவிகணேஷ்.

O ''சாபக் காக'' என் உள்ளத்தைத் தொட்டது. இதனைப் படித்து, ஒரு சில சூதாடிகளாவது திருந்த மாட்டார்களா?
மாப்பிள்ளைகுப்பம்,
அ. பரக்கத் அலி.

O தன்னைப் பெற்ற தாய்க்கும், தனக்கும் இடையில் வேண்டாமலே விளைந்திட்ட ஒரு மனப் போராட்டத்தின் விளைவு, தான் பெற்ற மகளின் பிஞ்சு மனத்தைப் பாதிக்க வேண்டாமே என ஒருவன் தவிக்க நேர்ந்த தவிப்பை, பின்னிப் பின்னிச் சொன்ன பாணியினால் ''மாயா'' சிறுகதையை மறக்க முடியாத ஒன்றாக ஆக்கி விட்டார் ''ஜெயபாரதி.''
தஞ்சாவூர் - 1,
ஆர். ராமச்சந்திரன்.

O குடும்பப்பாரத்தில் சிக்கித் தவிக்கும் ஒரு நடுத்தர வயதுப் பெண்ணின் ஆதங்கங்களை-தேடல்களை மிகவும் சிறப்பாக வெளிக்கொணர்ந்து காட்டியது ''தேவகியைத் தேடி'' சிறுகதை.
தஞ்சாவூர் - 1, தனலட்சுமிராம்.

O விலைமாது சரசுவின் கதையைக் கேட்டு, மனம் கசிந்து அவளை தப்பிச் செல்லுமாறு கூறும் போலீஸின் கையாளுக்கு இருந்த மனிதாபிமானம் சமுதாயத்தின் ஒவ்வொரு மனிதருக்கும் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!
தஞ்சாவூர் - 7,
வளர்மதி ஆசைத்தம்பி.

# துரோகம்

அந்தச் செய்தியைக் கேள்விப் பட்டதும் மிகவும் அதிர்ச்சியாய் இருந்தது எனக்கு.

இவரா...? இவரா இப்படி?

ஆனால் செய்தியைச் சொன்னவள் என் தங்கை சுதா என்பதால் நம்பாமலும் இருக்க முடியவில்லை.

''அக்கா, என் கண்ணாலேயே பார்த்தேன். அத்தானும், அவளும் சினிமாவுக்கு வந்திருந்ததை. அவ கொஞ்சலும், சிணுங்கலும் அத்தான் அதுக்கு வழியறதும்... போ! நம்ம அத்தானா இப்படி, ப்ச்!''

சுதா சொல்வது உண்மையாய்த்தான் இருக்க வேண்டும்.

அன்று அவர் சட்டைப் பையில் இரண்டு சினிமா டிக்கெட்டுகள் இருந்தன.

தானும், தன் நண்பனும் போனதாய்க் காரணம் சொன்னார். அப்போது நம்பும்படியாக இருந்தது.

ஆனால் இப்போது அது நண்பன் அல்ல, நண்பி; அதாவது தோழி என்பது புரிந்தது.

இருந்தாலும் நான் அவசரப்படவில்லை.

விஷயத்தை உறுதிப்படுத்திக் கொள்ளத் தயாரானேன்.

அந்தத் தோழியின் பெயர் சசிகலா என்பதும், அவர் அலுவலகத்தில் கிளார்க்காய் வேலை பார்ப்பதும், வேவு பார்த்ததில் தெரிய வந்தது. கணவனிடமிருந்து விவாகரத்துப் பெற்றவள். இப்போது என் கணவனைச் சுற்றி வருவதும் புரிந்தது.

கல்லுக்குண்டாய் நான் ஒருத்தி இருக்க, இவருக்கு ஏன் இப்படி புத்தி அலை பாய்கிறது.

மனம் கொந்தளித்தது.

ஆனால் வெளியில் காட்டிக் கொள்ளாமல் இறுகினேன். என் சுபாவம் அப்படி!

சிறு வயதிலிருந்தே என் உணர்ச்சிகளை அதிகம் வெளிக்காட்டிக் கொள்ள மாட்டேன்.

அம்மா கூடச் சொல்லுவாள்.

''இப்படி கடப்பாறையை முழுங்கின மாதிரி இருக்காதேடி. வாய் விட்டு அழு, இல்லை சொல்லு. உடம்புக்கு ஆகாது. பிரஷர் ஏறிடும்!'' என்பாள்.

ஆனால் நான் மாற்றிக் கொள்ளவில்லை.

நம் சோகத்தை - துக்கத்தை அடுத்தவரிடம் கொட்டினால் சோகம் இல்லையென்றா ஆகி விடும்.

ஓர் ஐந்து நிமிடம் வேண்டுமானால் குறையலாம். அந்த நபர் சென்ற பிறகு திரும்பி மனத்துக்குள் பிறாண்டுமே! தேவையில்லாத அவலாகி விடும் ஊருக்கு.

ஒருநாள் வேண்டுமென்றே பின் தொடர்ந்து சென்று, நேரடியாகவே ஹோட்டலில் சந்தித்தேன்.

திகைத்துப் போனார். முகம் வெளிறி விட்டது.

நான் காப்பி குடித்து விட்டு, எதுவும் பேசாமல் பில்லைக் கொடுத்து விட்டு வீட்டுக்குத் திரும்பினேன்.

சிறிது நேரத்தில் பின்னாலேயே வந்து விட்டார்.

''லதா... நான்... வந்து... அவ..'' என்று தடுமாறினார்.

நான் அவரை உறுத்துப் பார்த்தபடி நாற்காலியில் அமர்ந்திருந்தேன்.

''என்ன லதா பேச மாட்டேங்கறே?'' என்றார் மன உறுத்தலின் வலி தாங்காமல்.

அப்பா உள்ளே வந்தார். உள்ளூரிலேயே இருக்கிறார்.

''என்னம்மா லதா, போன் பண்ணினியே வரச் சொல்லி...'' என்றபடியே உள்ளே நுழைந்தார்.

ஹோட்டலிலிருந்து அப்பாவை வரச் சொல்லிப் போன் செய்து விட்டுத்தான் வந்தேன்.

நான் முடிவு செய்து விட்டேன்.

''அப்பா, ஓர் ஆட்டோ பிடிச்சிட்டு வாங்க...'' என்றேன் இறுகிய குரலில்.

அப்பாவுக்கும் விஷயம் எட்டியிருந்தது போலும்.

காச், மூச்சென்று கத்தினார் அவரிடம்.

தலையைத் தொங்கப் போட்டபடி அமர்ந்திருந்தார்.

''ஊரைக் கூட்டி அவமானப்படுத்தலேன்னா பாரு, உன்னை...'' என்று ஏகவசனத்தில் இறங்கினார் அப்பா.

''என்னய்யா பெரிய தப்புப்

இருஷ்ணா

பண்ணிட்டேன். ஊருல உலகத்துல யாரும் பண்ணாததையா செஞ்சிட்டேன். உன் பொண்ணை பட்டினி போட்டேனா இல்லை துணி, மணி வாங்கிக் கொடுக்காமல் பஞ்சை, பராரியா அலைய விட்டேனா?'' என்று தனது தவறை மறைக்கக் கோபமாய்க் கத்தினார்.

''அப்பா.. நான் போய் ஆட்டோ கூட்டி வரவா, இல்லை நீங்க போறீங்களா?'' என்றேன் நான் இடையில் புகுந்து.

இருவரும் திகைத்து நின்றனர் அவமானமாய்.

அப்பா விருட்டென்று வெளியே போனார்.

''லதா, வீட்டை விட்டுப் போறதுன்னு முடிவு பண்ணிட்டியா?''

நான் பதில் சொல்ல விரும்பவில்லை.

''வாழாவெட்டியா இருக்க உனக்கு ஆசைன்னா போயிக்கோ...'' என்றார் கோபத்துடன்.

தவறையும் செய்து விட்டு எனக்குத் தண்டனையாய்ப் பட்டத்தையும் கொடுக்கும் அவரது ஆண் என்ற ஈகோ என்னுள் கோபத்தை உண்டாக்கியது.

மௌனம்தான் என் பலம் என்பதால் அமைதி காத்தேன்.

அழுது, புலம்பி, சினிமா டயலாக் பேசுவதில் எனக்கு நம்பிக்கையில்லை.

அந்தப் பெண்ணுடன் அவருக்கு உள்ள தொடர்பை என் அழுகையால் நிறுத்த முடியாது என்பது புரிந்தது அவரது பேச்சு மூலம்.

சூட்கேஸைப் பிடித்தபடி அப்பாவுடன் ஆட்டோவில் ஏறினேன்.

பிறந்த வீட்டுக்கு வந்து ஆறு மாதம் ஓடி விட்டது.

---

அவள் : வழுக்கைத் தலை மாப்பிள்ளையைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு என் பெண் சொல்றா.

இவள் : ஏன்?

அவள் : அவர்தான் இவளை 'எலிவால் சடை' அப்படீன்னு கிண்டல் பண்ண மாட்டாராம்!

- ஆலத்தம்பாடி ராஜகோபால்.



அப்பாவின் சிபாரிசு மூலமும், என் பட்டப் படிப்பினாலும் ஒரு வேலை தேடிக் கொண்டேன்.

ஊரார் கொஞ்ச நாட்கள் என்னை அரைத்து விட்டுப் புதுப்புது வம்புகளில் தாவி, என்னை மறந்து போயினர்.

என் கணவர் அலுவலகத்தில் வேலை செய்யும் டைப்பிஸ்ட் லாவண்யாதான் இன்று சொன்னாள். என் பள்ளித் தோழி அவள். சனிக்கிழமை இருவருக்கும் விடுமுறையானதால் வீட்டுக்கு வந்தாள்.

''ஹேய் லதா, விஷயம் தெரியுமா? அந்தச் சசிகலா இப்பப் புது பாய் ஃப்ரெண்டை பிடிச்சிட்டா. புளியங்கொம்பு அது. இப்ப உன் புருஷனை அவ சட்டையே பண்றதில்லை.''

நான் அசுவாரசியமாய் இருந்தேன்.

''அவ குணமே அப்படித்தான் தெரியுமா? ஒருத்தனைப் பிடிச்சிக்க வேண்டியது. அவனிடமிருந்து பணத்தை எவ்வளவு முடியுமோ அவ்வளவு கறந்துட வேண்டியது. அப்புறம் அவனைக் கழட்டி விட்டுட்டு அடுத்த ஆளைப் பிடிச்சிப்பா. குரங்கு மாதிரி தாவிடுவா. த்தூ! இவ எல்லாம் ஒரு பொம்பளை. ஆபீசே நாறுது...''

''ஆம்பளைங்களுக்கு எங்கே போச்சு புத்தி?'' என்றேன் காட்டமாய்.

''கரெக்ட். அவ பிடிக்கற ஆளெல்லாம் கல்யாணம் ஆன ஆம்பளைங்களைத்தான். அவளால பல குடும்பத்துல ரகளை. உன் புருஷனிடமிருந்து கூட போனஸ், பி.எஃப். லோன் எல்லாத்தையும் கறந்துட்டாளாமே...''

''தெரியாது.''

''ஆமாம். உனக்கெப்படித் தெரியும். நீதான் இங்கே இருக்கியே. உன் புருஷன் சோகமா தாடி வளர்த்துக்கிட்டு அலையறார். அவ காட்டற அலட்சியத்துல கொஞ்ச நாள் அதிர்ச்சியாக் கூட இருந்தார்.''

லாவண்யா சொன்னதை உண்மையாக்கும் விதமாய் மாலை நேரம் வந்தது.

அப்பாவும், என் கணவரும் வீட்டுக்குள் வந்தனர்.

அம்மா எப்போதும் போல மாப்பிள்ளையை மரியாதையுடன் வரவேற்றாள்.

நான் விரித்த புத்தகத்திலிருந்து பார்வையைத் திருப்பவில்லை.

''லதா..'' என்றார் அப்பா தயக்கமாய்.

''என்ன?'' என்று பார்வையாலேயே கேட்டேன்.

''அவர் வந்திருக்காரும்மா.''



''எவர்?'' என்றேன் வேண்டுமென்றே.

''இதோ பாரு லதா. இவ்வளவு அலட்சியம் ஒரு பெண்ணுக்குக் கூடாது. மாப்பிள்ளை தப்பை உணர்ந்து திருந்தி வந்திருக்கார். தவறு செய்யறது சகஜம்.''

''நான் அப்படிச் செய்திருந்தால் இதே போல சகஜமா எடுத்துப்பாரா அப்பா?''

என் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் திணறினார்.

''அதான் தப்பை உணர்ந்து திருந்திட்டாரே அம்மா..''

''தப்பை உணர்ந்து திருந்தலே அப்பா. அந்தச் சசிகலா இவரை கைவிட்டதுனாலே திரும்பி வந்துட்டார்...'' என்றேன் அழுத்தமாய்.

''எது எப்படியோ, அம்மா...''

''அப்பா, இன்னிக்குச் சசிகலா மாதிரி நாளைக்கு ஒரு மேகலா கிடைச்சால் இவர் மறுபடி போக மாட்டார்ன்னு என்னப்பா நிச்சயம்?''

''லதா...'' என்று அப்பா அதட்டினார்.

''ஏனப்பா கோபம் வருது. அப்போதும் இவர் தவறு செய்யறது சகஜம்னு மறுபடியும் இவருக்காக நான் காத்திருக்கணுமா?''

''என்னம்மா இப்படியெல்லாம் பேசற? விட்டுக் கொடுத்துப் போறதுதானம்மா பெண்களோட லட்சணம்.''

''அதுக்கும் ஒரு அளவு இருக்குப்பா. பெண்களான நாங்கள் விட்டுக் கொடுத்துக்கிட்டே இருக்கணும். ஆண்களான நீங்க தவறு செய்துக்கிட்டே போகணுமா?''

''முடிவா நீ என்னம்மா சொல்றே?''

''எதை வேண்டுமானாலும் மன்னிக்கலாம். ஆனால் சபையறியக் கைப்பிடிச்சு, அக்னி சாட்சியாத் தாலி கட்டி, சத்தியப் பிரமாணம் எடுத்துக்கிட்டு, அப்புறம் மனைவிக்குத் துரோகம் பண்றாங்களே அந்த ஆண்களை மட்டும் எந்த மனைவியுமே மன்னிக்க முடியாதுப்பா. நீங்களும் ஓர் ஆண் என்பதால் உங்களுக்கு என்னோட மனகல பட்ட அவமானமும், பொங்கிய சீற்றமும் புரியலே. இவரோட துரோகத்தை நான் மன்னிக்கத் தயாராயில்லை.''

நிறுத்தி நிதானமாக வார்த்தைகளை உதிர்த்து விட்டு, அறைக்குள் சென்று கதவை மூடிக் கொண்டேன்.

# 13

# நேற்றுவரை

எத்தனை கும்பலில் இருந்தாலும் மங்களா பளிச்செனத் தெரிவாள். அப்படியிருக்கையில் கல்யாணத்தில், தான் எப்படி இவளைக் கவனிக்கத் தவறினோம் என்று மீரா யோசித்துப் பார்த்தாள்.

''என்ன பேசாம வர்றீங்க?''

''உம்... ஒண்ணுமில்லே. கல்யாணத்துல உன்னைப் பார்த்ததா ஞாபகமே இல்லே... அதான்...''

மங்களா மெள்ளச் சிரித்தாள்.

இதுநாள் வரையில் ஏற்படாத ஒருவிதமான பொறாமையுணர்வு மீராவினுள்...

மங்களா மஞ்சள் கலந்த வெளுப்பு. நடக்கும் போது புறாப் பாதங்கள் பார்வையைச் சுண்டிவிழுப்பதாய்... சராசரிக்குச் சற்று அதிகமான உயரமானதால் புடைவையின் நுனி கணுக்காலுக்கு மேலேயே நின்றது.

பிஞ்சு மூங்கில் போன்ற கால்கள்...

கொலுசு போட்டால் அழகாக இருக்கும்...

மீரா, தன்னையறியாமலேயே தன் புடைவையைத் தழைத்து விட்டுக் கொண்டாள்.

இயல்பிலேயே மீராவுக்கு நகைகளின் மீது அத்தனை ஆசை இல்லை; ஆனாலும் கொலுசு பிடிக்கும். நாலைந்து ஜோடி வைத்திருக்கிறாள்.

கல்யாணம் நிச்சயமானதும் கூட, புதுசாய் ஒரு கொலுசு வாங்கினாள்.

இன்னமும் ஞாபகமிருக்கிறது.

முகூர்த்தத்தின் போது, அவளது பாதத்தைத் தூக்கி, அம்மி மீது வைத்த கீர்த்தி, கொலுசு பளபளத்த அவளது காலை ஒரு கையால் 'கப்'பெனப் பிடித்தான். இன்னொரு கையால் மெட்டி அணிவித்தான்.

அதன் பிறகு சுவாமி மலையில் படியேறும் போது ஒருமுறை கேட்டான்.

''உனக்குக் கொலுசு பிடிக்குமா?''

''உம். உங்களுக்கு?''

''பிடிக்காது. கொலுசு, கண்ணாடி வளையல்... இது மாதிரி, சப்தம் போடற சமாச்சாரம் எதுவுமே பிடிக்காது. இந்த மாதிரி நகைங்களை மாட்டிட்டு, லேடீஸ் என்னத்துக்காக இவ்வளவு சிரமப்படறாங்கன்னு கூட நினைச்சுப்பேன். ஆனா, நீ போட்டுட்டு இருக்கற கொலுசு அழகா இருக்கு. அது கொலுசோட வேலைப்பாட்டினாலா இல்லே காலோட மகத்துவமான்னு தெரியல்லே...''

அவன் பேசி முடிக்கவில்லை. அவர்கள் பின்னாலேயே படியேறி வந்த சித்தப்பா, கிண்டலாய்க் கேட்டார்.

''என்ன, வர்ணனை பாதத்துலேயிருந்து ஆரம்பமாறதாக்கும்...''

''......''

''நடத்துடாப்பா. பொம்மனாட்டிகள் எல்லாருமே ஸ்தோத்திரப்ரியாக்கள்தான். ஆனா ஒண்ணு மட்டும் சொல்றேன் கேட்டுக்கோ. 'நீ பரபரன்னு பம்பரம் மாதிரி சுத்திச் சுழண்டு காரியம் செய்யறது நன்னாயிருக்குன்னு சொல்லு. உன் முன்னாலே அப்புறம் உட்காரவே மாட்டா. 'உன் சிரிப்புல மயங்கறேன்'னு சொல்லு... அதோட எஃபக்ட் தனிதான். ஆனா - 'நீ கோபத்துல கூட எத்தனை அழகா இருக்கே தெரியுமா'ன்னு மட்டும் புகழ்ந்துடாதே! அப்புறம் எப்பவும் கடுப்ஸ்தான்...''

அப்பொழுதும் கீர்த்தி விட்டுக் கொடுக்காமல் கூறினான் :

''நீங்க உடனே அட்வைஸ்ஸை ஆரம்பிச்சுடுவீங்களே... மீராவோட கொலுசு அழகா இருந்தது சித்தப்பா. அதைத்தான் சொல்லிட்டிருந்தேன்...''

''ட்டேய்... கொலுசைப் பத்தி உனக்கென்னடா தெரியும்? உன் ஆயுசுலேயே இப்பத்தான் ஒரு இளசைக் கொலுசோட பார்க்கறே.. அதுக்குள்ளே பல்டி அடிச்சா எப்படிடா.. என்னைச் சொல்லு... இது வரைக்கும் இருபத்தி நாலு விதமான கொலுசைப் பார்த்திருக்கேன்...''

இவரின் இந்த வார்த்தையினால் தாக்கப்பட்டவளாய்ச் சித்தி திரும்பிப் பார்க்க - அவர் 'கடகட'வெனச் சிரித்தார்.

''பாரு.. உங்க சித்திக்கு இத்தனை வருஷமாகியும் சந்தேகம் பாரு... இவளைக் கல்யாணம் செஞ்சிட்டு இருபது வருஷமாறது. வருஷா வருஷம் கொலுசு காலைப் பிடிக்கறது; சின்னதாய்ப் போச்சுன்னு சொல்லிச் சொல்லி இதுவரைக்கும் பதினெட்டு ஜோடி புதுக் கொலுசு வாங்கித் தந்திருக்கேன். மீதி அரை டஜன் - இவ பெத்த புத்திரிக்கு.. ஆரம்ப நாளுலே நான் கூட உன்னை மாதிரி - வர்ணனையைப் பாதத்துலேயிருந்துதான் ஆரம்பிச்சேன். கண்ட பலன் வெள்ளிக் கடை எத்திராஜுலுவுக்கு வருஷம் தவறாம மொய்...''

மீரா, தலையைக் குலுக்கி எண்ணங்களை உதறப் பார்த்தாள்.

# நந்தவனம்

மங்களா, அவளுடைய எண்ண ஓட்டம் புரியாமல் பேசினாள்:

''கல்யாணத்துக்கு வந்திருந்தேன். ஆனா, அப்பா அங்கே வந்து, அத்தனை அசிங்கமாச் சண்டை போடுவார்னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவே இல்லை. எனக்கு ரொம்பவும் அவமானமாப் போச்சு. அதான் நான், அதிகமா வெளில தலை காட்டவே இல்லே...''

''உங்கம்மாவைக் கூட நான் பார்க்கலே.. இங்கே, இவரோட பத்து நாள் தங்கியிருந்தப்பக் கூட நாகு மாமாதான் எங்க கூடவே எல்லா இடத்துக்கும் வந்தார். உன்னையோ, உங்க அம்மாவையோ நான் பார்க்கவே இல்லே!''

இதைக் கேட்டதும் மங்களா - 'தடக்' கென நின்றாள்.

''உங்களுக்கு விஷயமே தெரியாதா?''

''என்னது...''

''எனக்கு அம்மா கிடையாது. என்னோட அஞ்சாவது வயசுல எங்கம்மா ஒரு தீபாவளிக்கு பட்சணம் செய்யறப்ப, புடைவையில நெருப்புப் பிடிச்சு செத்துப் போயிட்டா. அந்த விபத்து எதேச்சையா ஏற்பட்டதுதான்னு அப்பாவும், அவரைச் சேர்ந்தவங்களும் சொல்லுவாங்க. இதே - என் அம்மாவோட தம்பி - அதாவது என்னோட மாமா, சித்தி, எல்லாரும் எங்கப்பா தான் ஏதோ மனக் கசப்புல எங்கம்மாவைக் கொன்னுட்டதாச் சொல்லுவாங்க. சில பேர் எங்க அப்பாவோட குடும்பம் நடத்த முடியாம, அம்மா தற்கொலை செஞ்சிட்டதாக் கூடச் சொல்லுவாங்க...''

மங்களா, விரக்தியுடன் சிரித்தாள்.


''எது எப்படியோ. என்னைப் பொறுத்தவரைக்கும் அவர் நல்ல மனுஷர்தான். சண்டையின்னு போயிட்டா, தன் பக்கம் ஜெயிக்காம திரும்பி வர மாட்டார். தெருக்காரங்க கூட - இவர்கிட்ட பேச்சு வார்த்தை வச்சுக்கப் பயப்படுவாங்க...''

மீரா, வியப்புடன் அவளைப் பார்த்தாள்.

''இந்த விபத்து நேர்ந்தப்ப, உங்க அப்பாதான் முதல்லே விஷயம் கேள்விப்பட்டு, ஓடி வந்தவர். அவராலேதான் நான் இன்னிக்கு எழுந்து நடமாடறேன். ஏதோ இசைகேடாப் பேசுவாரே தவிர, நல்ல மனுஷர்...''

மங்களா, எங்கோ தொலை தூரத்தில் பார்வையைச் செலுத்தியபடி சொன்னாள் :

''நான் மட்டும் இப்ப என்ன சொன்னேன்? நல்ல மனுஷர்தான். ஆனா, தனக்கு ஒன்னு கிடைக்கலையின்னா அதைப்



பிறத்தியாரும் அனுபவிக்கக் கூடாதுன்னு நினைக்கிற குணம் ஜாஸ்தி. ஒரு பேச்சுக்குச் சொல்றேனே.. எனக்கு எங்கம்மா வழிச் சொத்தா கொஞ்சம் நிலம் இருக்கு. ஆனா, எல்லாமே இன்னும் பாகம் போடாம பெரிய மாமா வசம்தான் இருக்கு. அவ ரானா... என் கல்யாண சமயத்துலதான் நிலத்தைத் தருவேன்னு பிடிவாதமாச் சொல்றார். எங்கப்பாவுக்கு இது ஆத்திரம்...''

''......''

''ஒவ்வொரு வருஷமும் அறுவடை சமயத்துல ஏதாவது தகராறு நடக்கும். களத்து மேட்டுல காயப்போட்டிருக்கற அத்தனை நெல்லையும் மொத்தமாக் கொளுத்தி, சூரசம்ஹாரம் செஞ்சார். நிலத்துல - ஏதோ தாமிரத் தகடு மந்திரிச்சுப் புதைச்சிட்டு வந்தார். பொழுது விடிஞ்சு பொழுது போனா - தினமும் வீட்டுல காளி பூஜை, மலையாள மாந்திரீகம், முட்டையில மந்திரிச்சு வைக்கிறது, மந்திரவாதிக்கு ஆயிரக்கணக்குல பணம் கொடுக்கறது...''

இந்த இடத்தில் சற்று நிறுத்தி, பெருமூச்சு விட்டாள் மங்களா.

''இதெல்லாம் எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கலை. எனக்கு மட்டுமில்லே. அத்தை, கீர்த்தி, யாருக்குமே இவரோட இந்தப் போக்கு பிடிக்காது. ஒருத்தரைப் பிடிச்சா அவரைத் தலைமேல தூக்கி வச்சுட்டுக் கொண்டாடுவார். பிடிக்கலையின்னா ஒட்டுமொத்தமா அவங்களை அடக்கம் பண்ணிட்டுத்தான் அடுத்த வாய்த் தண்ணி குடிப்பார். இது ரொம்பவும் கேவலமான புத்தி இல்லையோ?''

மீரா, திகைப்பிலிருந்து விடுபட முடியாதவளாய் அவளையே பார்த்தாள்.

மங்களாவோ, இவள் மனத்தில் அலை பாயும் நினைவைப் புரிந்து கொள்ளாம லேயே அப்பாவியாய்ச் சொல்லிக் கொண்டே போனாள்.

''இவர் இப்படி இருந்தா - இவர் வீட்டுல சம்பந்தம் பேச, யாருக்குத்தான் தைரியம் வரும், சொல்லுங்க. கூடப் பொறந்த அக்காவே, தம்பியைக் கண்டு பயப்படறா. கீர்த்தி, எங்கப்பா முகத்துக்கு நேரேயே சொல்லிட்டார். 'உம்ம உடம்புல பழிவாங்கற ரத்தம்தான் மாமா ஓடறது.. சாதாரணக் குழாய் ரிப்பேர்க்காரன் இட்டக் கூட வெட்டுப் பழி, குத்துப் பழியின்னு வேட்டியை வரிஞ்சு கட்டிண்டு ஓடறீங்க... உம்ம பொண்ணும் பின்னாலே இதே மாதிரி இருக்க மாட்டாளு என்ன நிச்சயம்? அட, அவளாவது அவ அம்மாவைக் கொண்டு சாதுவா இருப்பாள்னே வச்சுப் போம். நாளைக்குப் பிறக்கப் போற எங்க குழந்தை - தாத்தாவைக் கொண்டு பொறந்த துன்னா? நமக்கு இந்த ரிஸ்க் எல்லாம் வேண்டாம் மாமா, மங்களாவுக்கு வேற எடம் பாருங்கோ'ன்னு முகத்தில அடிச் சாப்பல சொல்லிட்டார்...''

''என்கிட்ட ரொம்பப் பிரியமா...''

மீராவின் குரல், அவளுக்கே கேட்க வில்லை.

''ஆமா. உங்களைப் பத்தி நிறையச் சொல்லுவார். அவருக்குக் கீர்த்தியைக் கண்டாத்தான் ஆகாதே தவிர, உங்களைப் பிடிக்கும். அத்தனை சின்ன வயசுல இப்படியொரு கஷ்டம் வந்திருக்கக் கூடாதுன்னு சொல்லுவார். நான் கூட, இந்த ஆக்ஸிடென்ட்லே கீர்த்தி போயிட்டதா நியூஸ் வந்தவுடனே அப்பாவோட நெஞ்சுலேயும், முகத்துலேயும் குத்தி அழுதேன். 'உங்க சாபம்தான் இப்படி ஆயிடுச்சு'ன்னு புலம்பினேன். அதுக்கு இவர் கொஞ்சம் கூட அசையலையே.. கல் மனசு.. இருங்கோ. இதான் வீடு...''

மங்களா, மீராவைத் திண்ணையில் உட்கார வைத்து விட்டுத் 'தடதட'வென உள்ளே ஓடினாள்.

அடுத்த ஓரிரு நிமிஷங்களில் முகமெல்லாம் சிரிப்பாய் நாகு வெளியே ஓடி வந்தார்.

''வாம்மா மீரா... வா, வா.. வர்றதா ஒரு லெட்டர் போட்டிருக்கக் கூடாதோ.. இப்படியா திடீர்னு... அம்மா, அப்பா எப்படியிருக்காப்பல.. எப்ப வந்தே?''

மீரா, கையிலிருந்த சிறு கைக் குட்டையால் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டே, அவரைப் பார்த்துச் சின்னதாய்ச் சிரித்தாள்.

அவரோ, ஒரு தந்தைக்கே உரிய பாசத்துடன், தரையில் அரை மண்டி போட்டு அமர்ந்து, அவளுடைய பாதங்களைப் பரிவாய் தொட்டுப் பார்த்தார்.

---

ஒருவர் : உங்க ஆபீசுக்கு வர்றவங்க சந்தோஷமா லஞ்சம் கொடுக்கறாங்களாமே, எப்படி?

நண்பர் : லஞ்சம் தர்றவங்களுக்கெல்லாம் ஒரு நம்பர் கொடுத்து மாசத்துக்கு ஒரு தடவை குலுக்கல் முறையில் பத்துப் பேருக்கு பம்பர் பரிசு கொடுக்கறோம், அதான்!

- எஸ். முகம்மது யூசுப்.



''புண் முழுக்க ஆறிடுச்சாம்மா?''

''வெளில ஆறிடுச்சு...''

அவர், மீராவின் பதிலில் பொதிந்திருந்த அர்த்தத்தைக் கவனியாமல் அவருக்கே உரிய படபடப்புடன் பேசினார்.

''வெளிக் காயம் ஆறினதே பெரிய விஷயமில்லையோ? உனக்கு மட்டும் கால் சரியாகி, நல்லபடியா நடக்க வந்தா மாரியம்மனுக்குப் பூப்பாவாடை வாங்கிச் சாத்தறேன்னு வேண்டிட்டிருக்கேன் தெரியுமோ...''

மீரா, மங்களாவைப் பார்த்துப் புன்னகை செய்தாள்; எனினும் கண்களில் நீர் ததும்பியது...

'என் கால் சரியாப் போனா பூப்பாவாடை வாங்கிச் சாத்தறதா வேண்டிட்ட நீங்க, என் புருஷன் கரியாப் போனா - அம்மனுக்கு என்ன வாங்கிச் சாத்தறதா வேண்டிட்டீங்க மாமா?'

கேட்க வேண்டும் போல நெஞ்சும், நாவும் பரபரத்ததை அவள், மிகச் சிரமப்பட்டு, தன்னை அடக்கிக் கொண்டாள்.

நாகு, மகளை விரட்டினார்.

''மசமசன்னு நிக்கறியே... தாகத்துக்கு ஜில்லுனு மோர் - இல்லையின்னா எலுமிச்சம்பழ ஜூஸ் பிழிஞ்சு கொண்டாயேன். எலுமிச்சம்பழம் கூட, சுவாமி அலமாரியில வச்சிருக்கேன் பாரு..''

மீரா 'விருட்'டென எழுந்து விட்டாள்.

''அதெல்லாம் வே ண் டா ம் மாமா. நான் கிளம்பிண்டே இருக்கேன். இங்கே ஒரு விஷயமா வந்தேன். மங்களா பிடிச்சு, வீட்டுக்கு இழுத்துட்டு வந்துட்டா...''

''உள்ளே வாயேன்...''

''இருக்கட்டும் மாமா. இன்னும் நாலு மாசம் இருக்கு...''

''அதுவும் சரிதான். நீ எங்கே தங்கியிருக்கேன்னு சொல்லு. நான், அக்காவையும் அழைச்சிட்டு வர்றேன். அவளும் உன்னைப் பார்க்கணும்னு சொல்லிட்டே இருக்கா.. பாவம்..''

மீரா, மௌனமாய்ப் படியிறங்கியபடி, தனக்குள் தான் தங்கியுள்ள விலாசத்தைச் சொல்லலாமா - வேண்டாமா என்று சீட்டுக் குலுக்கிப் போட்டுப் பார்த்தாள்.

பிறகு என்ன நினைத்தாளோ, வலிய ஒரு சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, நாகுவின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தவாறே சொன்னாள்.

''நான் இங்கேதான் மாமா, குமரன் வீட்டுலதான் தங்கியிருக்கேன்..''

நாகுவின் புருவம் ஒருமுறை ஏறியிறங்கியது.

''எந்தக் குமரன்?''

''அதான் மாமா.. ஆக்ஸிடன்ட்லே கீர்த்தியோட கூட செத்துப் போனாங்களே... எக்ஸ். எம். எல். ஏ. தருமராஜன், டாக்டர் தெய்வநாயகி.. இவங்களோட பிள்ளை- புருஷன் - இப்பக் கூட எலக்ஷன்லே நிக்கறாரே.. அதே குமரன் வீட்டுலதான். நீங்க எப்ப வேணுமானாலும் அங்கே வந்து பார்க்கலாம் மாமா... நான் வரட்டுமா..''

மங்களா, அவளை ஒட்டினாற் போல கடைசிப்படி வரை வந்தாள். நாகு, கல்லாக மாறுமாறு சபிக்கப்பட்டவர் மாதிரி நின்றார்.

மீரா, தன் கைப் பையைத் திறந்து, புதுக் கருக்கு அழியாத வெள்ளிக் கொலுசை எடுத்து, மங்களாவின் கையில் திணித்தாள்.

''எதுக்கு மீரா?''

''பரவாயில்லே. எனக்கு வேண்டாம். நீ வச்சுக்க...''

அவளது பதிலுக்குக் கூடக் காத்திராமல், அருகில் வந்து நின்ற ஞானமூர்த்தியின் ஆட்டோவில் ஏறினாள்.

''எங்கேம்மா?''

''வீட்டுக்குப் போ ஞானம்...''

மீரா, நெஞ்சின் மீது கல்லை வைத்து அழுத்தினாற் போல உணர்ந்தாள்.

(தொடரும்)

# முதல் காதல்

ஐந்தாம் வகுப்புப் படிக்கும் போது, வீட்டிற்கு அருகிலேயே பள்ளிக்கூடம் வந்து விட்டது. மணியடித்து ரீங்காரம் முடிவதற்குள்ளாகப் போய் விடலாம். விடுமுறையில் அவசரமாய்க் கட்டிய புதிய பள்ளிக் கட்டடம். சென்னையில் என் மாமா வீட்டில் கொட்டடங்கள் முடிந்து இன்றைக்குத் திறக்கிறது. காலரில் குங்குமம் தொட்டுப் புதுச் சீருடை. நீலநிற அரை டிராயர். மஞ்சள் வண்ணத்தில் சட்டை. வாசனைப் புத்தகங்களுடன் ஒரு புது வருடம் துவங்கவிருக்கிறது. அம்மா, தலையை அழுந்த வாரி விட்டாள். புடைவைத் தலைப்பில் டிபன் பாக்ஸ் துடைத்துப் பையில் திணித்தாள். சமையலறைக் குக்கர் பெரியதாகச் சப்தமிட்டது. பாத்ரூம் தாழ்ப்பாள் விலக்கி, அப்பா வெளிப்பட்டார். குக்கர் சப்தம் அதிகரித்தது.

பொதுவில் பிரஷர் இருப்பதால்
விட்டு விட்டுச் சப்தம் போடுவதால்
பாத்திரம் 'மூடி'யாக இருப்பதால்
தலையில் கொஞ்சம் வெயிட்
உடையதால்

அனைத்துக்கும் மேலே பிரஸ்டீஜ் கொண்டதால் அப்பாவும் குக்கரும் ஒன்று. அவர் இருக்கும் போது வேறு யாரும் சப்தம் போட்டு விட முடியாது. காற்றில் மைசூர்ச் சந்தனம். அலமாரியில் ஸ்நோ பாட்டில். ஜன்னல் வெளிச்சத்தில் பவுடர் பறந்தது. அப்பா சைக்கிள் ஓட்டினார். நான் பின் பக்கம் கேரியரில் சலனமில்லாமல் உட்கார்ந்திருந்தேன்.

மூன்றாம் பிளாக் பள்ளிக் கூடத்தில் சென்ற வருடம் சேர்ந்து படித்த செட் அப்படியே இங்கு வந்து விட்டது. ஸ்டான்லி, மணி, ராஜன், சுதாமன், சம்பத் என்று நிறையப் பழைய நண்பர்கள் தென்பட்டார்கள். சுண்ணாம்பு அடித்து, பெயிண்ட் மணக்கிற புதிய வகுப்பறையில் இருந்தேன். விசாலமான அறை. இரண்டு மின் விசிறிகள். மைதானத்தைப் பார்த்த மாதிரி பெரிய ஜன்னல்கள். மேலே காந்தி படம். கீழே சாக்பீஸில் 'வாய்மையே வெல்லும்.'

அறைக்குள் மேலும் பார்வையைச் சுழல விட்டேன். என் உள்ளம் ஒரு துள்ளுக் துள்ளியது. உமாஸ்ரீயும் இந்த வகுப்பிலேயே சேர்ந்திருக்கிறாள். நான் அவளைப் பார்த்த போது, அவளும் என்னைத் திரும்பிப் பார்த்தாள். கண்கள் கலந்து மெல்ல விடுவித்துக் கொண்டன. பின் பக்கம் யாரோ முறைக்கிற மாதிரியிருந்தது. சட்டென்று திரும்பிப் பார்த்தேன். இரண்டு வரிசைகள் தள்ளியமர்ந்து துரை என்னையே பார்த்துக் கொண்டிருந்தான்.

நேர்த்தியான உடையில் உயரத்தின் கம்பீரம் வெளிப்பட வைதேகி டீச்சர் எங்கள் வகுப்பறையில் நுழைந்ததும் நாங்கள் சந்தோஷத்தில் கூச்சலிட்டோம். சென்ற வருடம் மூன்றாம் பிளாக்கில் அவர் தான் எங்கள் நான்காம் வகுப்பு டீச்சர். இப்போது அவரும் மாற்றலாகி இங்கேயே வந்து விட்டார். பாடம் நடத்துகிற போது, நான் வைதேகி டீச்சரையே பார்த்துக் கொண்டிருப்பேன். எனக்கு அவரை ரொம்பவும் பிடிக்கும்.



ம. வே. சிவகுமார்

பள்ளியில் சேர்ந்து படிக்கிறோம் என்று பெயரேயொழிய நாங்கள் யாரும், பெண்கள் யாருடனும் பேசியதில்லை. பார்க்கிற போதெல்லாம் பரஸ்பரம் முறைக்கிறதே எங்கள் தகவல் பரிமாற்றமாய் இருந்தது. வகுப்பின் இடது பக்கம் பெண்களுக்குரியது. வலது பக்கம் பெஞ்சுகளில் நாங்கள். புதிய பையன்களின் பெயர்களை வைதேகி டீச்சர் கேட்டுக் கொண்டிருந்தார். அத்தனை முகங்களில் நான் உமாஸ்ரீயை மட்டும் பார்த்தேன். சாதாரண ஒரு நீலப் பாவாடை, மஞ்சள் வண்ணச் சட்டை, இரட்டைப் பின்னலில் ரிப்பன் கட்டி, காதுகளில் வளையங்கள் ஆட அவளைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போலிருந்தது.

மணியடித்தது. டீச்சர் வெளியே போனார். துரை என்னை நோக்கி ஓடி வந்து விரல்களை முஷ்டியாக்கி என் தாடையில் வலுவாக அடித்தான்.

துரை எப்போதும் இப்படித்தான். வார்த்தைகள் இல்லாமல், பார்க்கிற போதெல்லாம் அடிக்கடி அவனுடன் இது போல் நடக்கிறது. அவன் உமாஸ்ரீயின் வீட்டுக் கொல்லைப் புறத்தில் குடிசை போட்டு வசிக்கிற வேலைக்காரியின் மகன். அந்த வீட்டுக்கு எப்போதும் ஏவல்கள் செய்து வளர்கிறவன்.

உமாஸ்ரீ அவனுக்கு ஒரு இளவரசியைப்



போல! தினமும் பள்ளிக்கூட வாசல் வரைக்கும் அவளுடைய புத்தகப் பை, வாட்டர் பேக் மூட்டைகளை அவன்தான் சுமந்து வருவான். பதிலுக்கு நான்கு வார்த்தைகள் வருகிற வழியில் அவள் பேசுவாளாய் இருக்கும்.

''துரை!''

கேட்டருகில் ஒயிலாய் நின்று ஆள் காட்டி விரலை அவள் வளைப்பாள். மூட்டைகளை ஓடி வந்து அவன், அவளிடம் கொடுத்து விட்டு அவள் பார்வை படுகிற இடங்களில் நாள் முழுவதும் நிற்பான். அவனுடைய யூனிபார்ம் அழுக்காய் இருக்கும். அதிலே ஓரிரு பித்தான்கள் இராது. காய்ந்த தலை. இதற்குள் உழைப்பில் வலுத்த உடல். அவள் வீட்டில் அவன் தோட்ட வேலையும் செய்கிறான். காலில் செருப்புக் கூட கிடையாது. எனினும் அவன், அவளுக்குப் பாதுகாவலன். அவனது எல்லையில், தாடையில் அடிபடாமல் யாரும் அவளை நெருங்கி விட முடியாது.

சென்ற வருடம் அந்த நாள் அப்படியே நினைவிருக்கிறது. கரும்பலகையில் எழுத்துக்களை வைதேகி டீச்சர் நிரப்பி, அழிப்பதற்கு டஸ்ட்டர் தேடினார். ஓர் ஏழெட்டுப் பேர் புறப்பட்டுப் பக்கத்து வகுப்புக்கு ஓடினோம். டஸ்ட்டர் எடுத்துத் திரும்புகிற வழியில், அதே கண் மண் தெரியாத வேகத்தில் உமாஸ்ரீ என் மீது மோதிக் கொண்டாள். டஸ்ட்டர் கட்டை எகிறிப் பறந்தது. பொறி கலங்கிய நிலையில் நாங்கள் அப்படியே நின்றி ருந்தோம். அவள் என் கண்களை ஒரு முறை பார்த்தாள். நான் அப்போதிலிருந்து அவளைப் பதிலுக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

பள்ளியின் பிரார்த்தனைக் கூட்டங்களில் உமாஸ்ரீயும், இன்னும் இரண்டு பெண்களும் மைக்கருகில் நின்று பாடுவார்கள்.

''தாயின் மணிக் கொடி பாரீர்....''

அவளின் ஈர உதடுகளை நான் முதல் வரிசையில் நின்று பார்த்துக் கொண்டிருப்பேன். என் உணர்வுகளுக்குப் பெயர் இன்னதென்று எனக்குத் தெரியாது. ஆனால் அதுதான் எவ்வளவு இன்பமாய் இருக்கிறது? கள்ளமில்லாத என் உள்ளத்தில் கள்ளம் புகுந்தது. யாருக்கும் தெரியாமல் நான் உமாஸ்ரீயை நினைத்துக் கொண்டிருந்தேன்.

என் விஷமம் குறைந்ததென்ற கவலையில் அம்மா என்னை வைத்தியரிடம் அழைத்துப் போனாள். அத்தனை தொலைவு வந்ததற்கு அவரும் பல நிறங்களில் மருந்துகள் கொடுத்தார். சமயம் கிடைக்கிற போதெல்லாம் அவளைப் பார்க்க வேண்டும் என்று ஏன் இப்படித் தோன்றுகிறது? மருந்துகளைக் குடித்து விட்டு நான் யோசித்துக் கொண்டிருந்தேன்.

வகுப்பில் வைதேகி டீச்சர் ஓர் அறிவிப்புச் செய்தார். நகரின் பாதுகாவல் படை அதிகாரி கேப்டன் கோபாலன், வரும் ஞாயிற்றுக்கிழமையிலிருந்து அதிகாலை ஐந்து மணிக்கு மாணவர்களுக்குப் பள்ளி மைதானத்தில் உடற் பயிற்சிகள் சொல்லித்தர இசைந்திருக்கிறார். விருப்பமுள்ள மாணவர்கள் தங்கள் பெற்றோர்களின் அனுமதி பெற்று, இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மனம் சந்தோஷத்தில் இன்னும் ஒரு துள்ளல் துள்ளியது. கேப்டன் கோபாலன், உமாஸ்ரீயின் தந்தை. நிச்சயம் உமாஸ்ரீயும் அவருடன் வருவாள். உமாஸ்ரீயின் வீடு எங்கள் தெருவிலேயே நிறைய வீடுகள் தள்ளியிருந்தது. வாசலில் ஜீப் நிற்கும். கஞ்சி விரைத்த காக்கியில் கேப்டன் கோபாலன் ஏறிக் கொள்வார். ஆர்டர்லி சல்யூட் அடித்து வழியனுப்புவான்.

அப்பா கொஞ்ச நாட்கள் நகரின் நிர்வாக அலுவலகத்தில் இருந்தார். அப்போது நிதானமாய் பேண்ட், சட்டை அணிந்து ஆபீஸ் செல்வார். அப்புறம் அவரை சுரங்கப் பிரிவுக்கு மாற்றி விட்டார்கள். மாறி வரும் மூன்று ஷிப்டுகளில் அவர் வாழ்க்கை முறையே தாறுமாறாகி விட்டது. நூலேணியில் எத்தனையோ அடி ஆழம் இறங்கிச் செய்கிற வேலை. தலையில் பாதுகாப்புக்குத் தொப்பி. காலில் முழங்கால் வரை சேற்றுக்குள் ரப்பர் பூட்ஸ். மைன்ஸ் உடை, ஆபீஸ் உடை என்று முற்றிலும் மாறுபட்ட இரண்டு வேடங்களில் அப்பா. தினம் ஐந்து மணிக்கு விழிப்பதென்பது அவருக்கு ஒத்து வராது. எனினும் சமையலறையில் நான் பிடிவாதமாக நின்றதில் தயங்கிக் கொண்டே அம்மா கேட்டாள். அப்பா என்னைக் கூப்பிடச் சொன்னார். காதில் விழுகிற மறைவிலிருந்து நான் வெளிப்பட்டேன். விஷயத்தை என் வாயில் ஒரு முறை கேட்டார்.

''அவ்வளவு சீக்கிரம் முழிச்சிப்பியா?''

''உம்.''

அப்பா என்னைக் கண்களில் பார்த்தார். மனதின் உமாஸ்ரீயை எங்கே அவர் பார்த்து விடுவாரோ என்ற பயத்தில் அவசரமாய் நான் தலை கவிழ்த்துக் கொண்டேன்.

ஞாயிற்றுக் கிழமை காலை ஐந்து மணி. கதவுக்கு வெளியே மார்கழி காத்தி

ருந்தது.

''பத்திரமாப் போவியா?''

முதல் நாள் எடுத்து வைத்த பாலில் காப்பி கொடுத்து அம்மா கேட்டாள். ஒட்டக் கூத்தர் தெருவில் நான் ஓடிக் கொண்டிருந்தேன்.

காலையிருட்டில் பள்ளியின் பரந்த மைதானம். கேப்டன் கோபாலனைத் தவிர இரண்டே பேர்தான் வந்திருந்தார்கள். உமாஸ்ரீ. அவள் கூடவே இருக்கிற துரை. 'கடவுளே, என்னை ஏன் நீ துரையாகப் படைக்கவில்லை?'

''கொஞ்சம் நேரம் பார்க்கலாம்....'' காதோரத்தில் நரைத்த கேப்டன் கோபாலன் சொன்னார்.

நான் உமாஸ்ரீயைப் பார்த்தேன். அவள் அந்த நேரத்தில் மலர்கிற மலர்களைப் போல் இருந்தாள். எங்கே கேப்டன் கவனித்து விடுவாரோ என்று பயந்து கொண்டே இன்னும் ஒரு முறை பார்த்தேன். துரை என்னை நோக்கி நகர்ந்தான். முந்திக் கொண்டு இந்தத் தடவை நான் அவன் தாடையில் பலமாய் அடித்தேன்.

''டேய், டேய்... என்னது இது?''

கேப்டன் கோபாலன் பதற்றமாய் ஓடி வந்து இருவரையும் பிரித்து விட்டார். துரையின் நைந்த துணிகள் கிழிந்து விட்டன. என் மூக்கில் ஒரு கோடாய் இரத்தம் இறங்கியது. கேப்டன் கோபாலன் உமாஸ்ரீ, துரை மூவரும் புறப்பட்டு விட்டார்கள். கடைசி வரைக்கும் உடற் பயிற்சி கற்றுக் கொள்ள வேறு யாரும் வரவில்லை.

திரும்பி வரும் வழியில் பாலத்தருகில் அலுமினியப் பெயிண்ட் அடித்த மின்சாரப் பெட்டி. வீட்டிற்குப் போகப் பிடிக்கவில்லை. 'அபாயம்'. சிவப்பு நிறத்தில் மண்டை ஓடு எச்சரித்தது. பெட்டியைச் சுற்றி உட்காருகிற அகலத்தில் சிமெண்ட் பலகையிருந்தது. கொஞ்சம் போல் கிடைத்த உள்ளடங்கிய முந்திரி மரத்தின் நிழல். உமாஸ்ரீ, உமாஸ்ரீ என்று எவ்வளவோ நேரம் அங்கேயே உட்கார்ந்திருந்தேன். யாரோ கூப்பிடுகிற மாதிரியிருந்தது. அது வைதேகி டீச்சர் வீட்டுக் கொல்லைப் புறம். டீச்சர் என்னைப் பார்த்து விட்டார். நான் பயத்தில் கருங்கல் குத்த ஓடத் தொடங்கினேன்.

அனைத்தையும் மறந்து, அடுத்த நாள் பள்ளி முடிந்தது. துணிப்பையை சொக்கப்பனை கொளுத்தி இருட்டில் கங்கு சுற்றுவது போல் உற்சாகமாய்த் தலைக்கு மேல் சுற்றிக் கொண்டே ஓடி வந்தேன். வாசலில் இருந்த செருப்பைக் கண்டதும் திகைத்து நின்றேன். வைதேகி டீச்சர் செருப்பு.

முதல் நாள் நான் போன பிறகு டீச்சர் மின்சாரப் பெட்டியருகில் வந்து பார்த்திருக்

றார். அதன் ஒரு பக்கத்தில் கூர்மையான கல்லில் அலுமினியப் பெயிண்ட் உரித்து என்னை அறியாமல் உமாஸ்ரீ பெயரைப் பல முறை எழுதியிருக்கிறேன். கூடவே துரையின் பெயரையும் எழுதிக் குண்டன், தடியன் போன்ற என் வயதுக் கெட்ட வார்த்தைகள். அப்புறம் என் பெயர். உமாஸ்ரீயின் பெயருக்கு பக்கத்தில். டீச்சருக்குத் தூக்கி வாரிப் போட்டிருக்கிறது.

எனினும், ''அதிகம் கண்டிக்க வேண்டாம். விவரம் தெரியாமல் விளையாட்டாய்ச் செய்திருப்பான். கோபிக்க வேண்டாம். பக்குவமாய் எடுத்துச் சொன்னால் போதும்.''

''ஒரு நிமிஷம்...'' என்று அம்மா, டீச்சருக்குக் குங்குமம் எடுத்து வந்தாள். தோட்டத்தில் செம்பருத்திக் கிளை உடைத்துக் கொடுத்தாள். வெயிலுக்குக் குடை விரித்து, உயரத்தின் கம்பீரம் வெளிப்பட, நேர்த்தியாய் உடையணிந்த வைதேகி டீச்சர் சிரித்துக் கொண்டே புறப்பட்டுப் போனார்.

''முளைச்சு மூணு இலை விடல்லே. அதுக்குள்ள மானத்தை வாங்கப் பொறந்திருக்கு, சனியன்.''

பித்தளை மூடி உருண்டு விழுந்தது. நான் தலை குனிந்து அப்படியே நின்றிருந்தேன்.

''ஏன்டா கடங்காரா இப்படியெல்லாம் பண்றே? வரட்டும். எனக்குத் தெரியாது. உங்கப்பா கிட்டே சொல்லி நாலு செருப்படி விழுந்தாத்தான் உனக்குப் புத்தி வரும்.''

அம்மா கோபமாய் உள்ளே போனாள். இரவு ஷிப்ட் முடிந்து அப்பா வரும் போது நெடுநேரமாகி விட்டது. இருட்டில் காதுகளைத் திறந்து வைத்துத் தூங்குபவன் போல் படுத்திருந்தேன்.

அன்றைக்கோ, அப்புறமோ அம்மா விஷயத்தை அப்பாவிடம் சொல்லியிருக்கத்தான் வேண்டும். ஆய்ந்து, ஓய்ந்து வருகிற மைன்ஸ் வேலையில் என்னிடம் அவர் எதுவும் கேட்கவில்லை.

ஐந்தாம் வகுப்பு வேகமாய் ஓடி விட்டது. தீபாவளி, பொங்கல் என்று திரும்பிப் பார்த்தால் முழுப் பரீட்சை. பயத்தில் துடித்துப் படித்து முடிந்தது. இனி ரிசல்ட் வரும் வரை கவலையில்லை. லீவிற்கு எங்களைக் கூப்பிடச் சொல்லி சென்னையிலுள்ள மாமா பையனுக்குக் கடிதம் போட்டேன். பதிலுக்கு மாமியின் கைப்பட ஒரு கடிதம் வந்தது.

பெட்டி, படுக்கைகளுடன் நாங்கள் வாசலில் காத்திருந்தோம். அப்பா, டாக்ஸிக்குச் சொல்லி வரப் போயிருந்தார். அம்மா ஒன்று, இரண்டு என்று மூட்டைகளை எண்ணிக் கொண்டிருந்தாள். கேட்டைத் திறந்து அப்பா உள்ளே வந்தார். முகம் என்னவோ போல் இருந்தது.

''என்ன?'' என்றாள் அம்மா.

''கோபாலன் போயிட்டார்...''

''யாரு?''

''கேப்டன் கோபாலன்.''

''அய்யய்யோ....''

''புறப்படறச்சே சொல்ல வேண்டாம்னு பார்த்தேன்.''

''என்னவாம்?''

''ஹார்ட் அட்டாக்...''

''அய்யோ பாவம். அப்போ குவார்டர்ஸைக் காலி பண்ணனுமே?''

''உம். ஒரு மாசம் டைம் கொடுப்பா. அவா அண்ணாவோ யாரோ வந்திருக்கார். அவரோட போயிடுவானோ என்னமோ. நாம லீவ் முடிஞ்சு வர்றதுக்குள்ள காலி பண்ணிடுவான்னு தான் தோணறது.''

அப்பா என்னைப் பார்த்தார். நான் தலையைக் குனிந்து கொண்டேன்.


கேட்டுக்கு வெளியே டாக்ஸி வந்து நின்றது. அப்பாவும், அம்மாவும் இரண்டு, மூன்று நடைகளில் லக்கேஜ் அடுக்கினார்கள். மெல்ல நடந்து மூட்டைகளிடையே நான் ஜன்னல் அருகில் உட்கார்ந்து கொண்டேன். அப்பா, பூட்டை ஒரு தரம் இழுத்துப் பார்த்தார். பக்கத்து வீட்டில் அவ்வப்போது பார்த்துக் கொள்ளச் சொன்னார். டாக்ஸி சப்தமில்லாமல் புறப்பட்டது.

அதே தெருவில் நிறைய வீடுகள் தள்ளி வாசலில் ஜீப் நிற்கிற வீடு. கும்பலாய் ஆட்கள் வெளியே நின்றார்கள். டாக்ஸி வேகம் குறைந்தது. கடைசி முறை பார்ப்பதற்கு நான் ஒவ்வொரு முகமாய் உமாஸ்ரீயைத் தேடினேன். வெளிக்கதவின் அருகில் நின்று, டாக்ஸி திரும்புகிற வரைக்கும் துரைதான் என்னை முறைத்துக் கொண்டிருந்தான்.

போலீஸ் அதிகாரி: இந்த வீட்டிலே "ஒரு குண்டு" இருக்கிறதா போன்லே சொன்னாங்களே?

- மல்லிகை மன்னன்.





# வாக்குமூலம்

வித்தியாசங்களை முயன்றிருக்கும் இயக்குனர் உண்மையிலேயே துணிச்சல்காரர்தான்.

துணிச்சல் நம்பர் 1 : கதாநாயகியே இல்லாமல் படமெடுத்திருப்பது.

துணிச்சல் நம்பர் 2 : ஒரே ஒரு கதாநாயகனுக்குப் பதிலாக நாலு இளைஞர்களைச் சுற்றித் திரைக்கதையை அமைத்திருப்பது.

துணிச்சல் நம்பர் 3 : எல்லாரையுமே அறிமுக நடிகர்களாகப் புகுத்தியிருப்பது.

துணிச்சல் நம்பர் 4 : இந்தக் கதையைத் திரைப்படமாக ஆக்கியிருப்பது!

கதையைப் பற்றிக் குறிப்பிடும் போது, நெறி கெட்டுப்போனவர்களின், தரங்கெட்டு அலைந்தவர்களின் வாழ்க்கையைத்தான் 'வாக்குமூலம்' ஆக்கியிருப்பதாகவும், அவர்கள் வாழ்க்கைக்கும் ஒரு நெறியைச் சொல்லியிருப்பதாகவும் கூறுகிறார் இயக்குனர்.

யார் அந்த நெறிகெட்டுப் போனவர்கள்?

நாலு கல்லூரி மாணவர்கள். அவர்களில் ஒருவனது வீட்டு வேலைக்காரியிடம் அந்த நால்வரும் முறை கேடாக நடந்து கொள்ள முயல, அவள் இறந்து போய் விடுகிறாள். உடலை என்ன செய்வது என்று புரியாமல் தவித்து, முடிவில் வீட்டுத் தோட்டத்தில் புதைத்து விடுகிறார்கள். அதன் பின், அவளுடைய மரணத்துக்குத் தாங்கள் காரணமாகிவிட்டதை எண்ணித் தவித்து, பிரமை பிடித்து நடமாடி, அவர்களில் ஒருவன் அப்ரூவராக மாறிக் காட்டிக் கொடுத்து விடுவானோ என்று பயந்து, அவன் ஓடும் ரயிலிலிருந்து கீழே விழுந்து உயிரை விடும் சூழ்நிலையை மற்ற மூவரும் உண்டுபண்ணி, அதைத் தொடர்ந்து இன்னும் இருவர் லாரி மோதி உயிரிழக்க, நாலாமவன் தூக்குப் போட்டுக் கொண்டுவிடுகிறான். காலி.... சப்ஜாடா காலி!

இயல்பான வசனங்கள். பொருத்தமான படப் பிடிப்புக் கோணங்கள். விறுவிறுப்பான அறிமுக உத்திகள். புது முகங்களின் கடுமையான உழைப்பு. எல்லாவற்றுக்கும் மேலாக மிதக்க வைக்கும் இசையமைப்பு. இவ்வளவு இருந்தும் அடிப்படை அம்சத்தில் கோட்டை விட்டிருப்பதால், இயக்குனர் சுபாஷுக்கு சபாஷ் சொல்ல முடியவில்லை.

– சி. ஆர். கே.

# சிவகாமியின் சபதம்

### நாற்பத்திரண்டாம் அத்தியாயம்

## விஷக் கத்தி

குண்டோதரன் நீட்டிய கத்தியைச் சத்ருக்னன் வாங்குவதற்காகக் கையை நீட்டியபோது, "ஜாக்கிரதை! சத்ருக்னா! கத்தியை ஜாக்கிரதையாக வாங்கு!" என்றார் வஜ்ரபாஹுவின் வேஷத்திலிருந்த மகேந்திர பல்லவர். பிறகு குண்டோதரனைப் பார்த்து, "இவ்வளவு அஜாக்கிரதையாக இந்தக் கத்தியை மடியில் கட்டிக் கொண்டு வந்தாயே? இது நெஞ்சில் பதிய வேண்டிய அவசியமில்லை; இதன் முனை உடம்பிலே பட்டுச் சிறு காயம் ஏற்பட்டால் போதும்; இரத்தத்தில் விஷங் கலந்து ஆள் ஒரு முகூர்த்தத்தில் செத்துப் போவான்," என்றார்.

"ஐயோ!" என்றான் குண்டோதரன்.

"போகட்டும்! பிக்ஷுவை எங்கே விட்டுவிட்டு வந்தாய்? சீக்கிரம் சொல்லு!" என்று சக்கரவர்த்தி கேட்டார்.

குண்டோதரன் அவருடைய கேள்விக்கு மறுமொழி சொல்லாமல், "கடவுள்தான் காப்பாற்றினார்!" என்று கூறினான். அவனுடைய உடம்பு நடுங்கிற்று.

சத்ருக்னன் கோபமாக, "ஆம், குண்டோதரா! உன்னுடைய தாமதத்தினால் காரியம் கெட்டுப் போகாமல், கடவுள்தான் காப்பாற்றினார். பல்லவேந்திரர் கேட்பதற்கு மறுமொழி சீக்கிரம் சொல்லு. இத்தனை நேரம் நாங்கள் காஞ்சி மார்க்கத்தில் பாதி தூரம் போயிருக்க வேண்டும்," என்றான்.

குண்டோதரன் இன்னும் கலக்கம் தீராதவனாய், "என்ன சொல்லவேண்டும்?" என்று கேட்டான். சத்ருக்னனுடைய கையிலிருந்த கத்தியை நோக்கியபோது, அவனுடைய தேகமெல்லாம் மீண்டும் பதறி நடுங்கியது.

"நாசமாய்ப் போயிற்று! இன்றைக்கு உனக்கு என்ன வந்து விட்டது, குண்டோதரா? உடனே பிரபுவின் கேள்விக்கு மறுமொழி சொல்லு. இல்லாவிட்டால், இந்த விஷக்கத்தி உன் நெஞ்சில் பாயப் போகிறது!" என்று சத்ருக்னன் கத்தியை ஓங்கினான்.

"எஜமானனே! என் முட்டாள்தனத்துக்குத் தக்க தண்டனைதான். இந்த ஏழையின் உயிர் போனால் மோசம் ஒன்றுமில்லை. நஞ்சுண்ட கண்டரின் அருளினால் பல்லவ குமாரருக்கு ஒன்றும் நேராமல் போயிற்றே!" என்றான் குண்டோதரன்.

இதைக் கேட்டு, எதற்கும் கலங்காமல் மலைபோல் நிற்கும் வழக்கமுடைய மகேந்திர பல்லவர் கூடச் சற்று நடுங்கிவிட்டார்.

"குண்டோதரா! இந்த விஷக்கத்தி மாமல்லன் மேல் பாய்வதற்கிருந்ததா!"

"ஆம், பிரபு! ஐந்தாறு தடவை புத்த பிக்ஷு இந்தக் கத்தியை வைத்துக் கொண்டு, மாமல்லரின் முதுகை நோக்கிக் குறி பார்த்தார். அதைப் பார்த்துக் கொண்டு நான் சும்மாயிருந்தேன். தங்களுடைய கட்டளையினாலேதான்! இல்லாவிட்டால்?..."

அமரர் கல்கி

என்று குண்டோதரன் பற்களை 'நறநற' வென்று கடித்தான்.

உண்மையிலேயே, மாமல்லர் அன்று இரவு தப்பிப் பிழைத்தது தமிழகம் செய்திருந்த தவப் பயன் என்றுதான் சொல்ல வேண்டும்.

மகிழ மரத்தினடியில் மாமல்லரும் சிவகாமியும் அமர்ந்து, மதுரத் தமிழ் மொழியிலும் மௌன பரிபாஷையிலும் காதல் சம்பாஷணை நடத்திக் கொண்டிருந்த போது, அவர்கள் இருந்த பாறைக்குப் பின்னாலிருந்த புத்த பிக்ஷு விஷக் கத்தியைக் கையில் வைத்துக்கொண்டு குறி பார்த்த வண்ணமிருந்தார். ஆனால் எக்காரணத்தினாலோ எறிவதற்குத் தயங்கினார். மாமல்லரின் பக்கத்திலே சிவகாமி இருந்ததும், தப்பித் தவறிக் கத்தி அவள்மேல் விழுந்து விடுமோ என்ற எண்ணமும்தான் பிக்ஷுவுக்கு அத்தகைய தயக்கத்தை அளித்ததோ என்னமோ, யாருக்குத் தெரியும்?


பிறகு, சிவபெருமான் உவந்தணியும் ஆபரணமான நாகப் பாம்பு அங்கு வந்து சேர்ந்தது. சிவகாமியும் மாமல்லரும் மகிழ மரத்தடியிலிருந்து கிளம்பி, நிலா வெளிச்சம் பளிச்சென்று எரிந்த விசாலமான பாறையில் போய் உட்காருவதற்குக் காரணமாயிற்று.

புத்த பிக்ஷுவும் தாம் ஒளிந்திருந்த இடத்திலிருந்து வெளிக் கிளம்பி, வேறிடத்துக்குப் போய் மறைந்து கொண்டார்.


இதையெல்லாம் இன்னொரு பாறை மறைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த குண்டோதரனுடைய கை ஊறியது. பின்புறமாகச் சென்று புத்த பிக்ஷுவின் கழுத்தைப் பிடித்து நெரித்துக் கொன்றுவிட வேண்டுமென்ற அடங்காத ஆர்வம் அவனுக்கு உண்டாயிற்று. அந்த ஆர்வத்தை அவன் அடக்கிக் கொண்டு, பொறுமையுடன் இருந்ததன் காரணம், மகேந்திர சக்கரவர்த்தியின் கண்டிப்பான கட்டளைதான்.

அன்று மாலை சக்கரவர்த்தியும் சத்ருக்னனும் குண்டோதரனும் மரக்கட்டைத் தெப்பத்தில் வராக நதியைத் தாண்டிக் கரையில் இறங்கியபோது, சற்றுத் தூரத்தில் ஒரு பாறையின் மேல் புத்த பிக்ஷு நின்று சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். அப்போது சக்கரவர்த்தி குண்டோதரனைப் பார்த்துச் சொன்னார்: "குண்டோதரா! இத்தனை காலமாக நீ செய்திருக்கும் வேலையெல்லாவற்றையும் விட முக்கியமான வேலை, உனக்கு இப்போது தரப் போகிறேன். அதில் ஒரு அணுவளவு கூடப் பிசகாமல் சர்வ









ஒருவர்: அந்த வீட்டு வாசல்ல சின்னக் குப்பைத் தொட்டியும் பக்கத்து வீட்டு முன்னால பெரிய குப்பைத் தொட்டியும் வச்சிருக்காங்களே, ஏன்?

நண்பர்: சின்னக் குப்பைத் தொட்டி உள்ள வீடு சிறுகதை எழுத்தாளர் வீடு. பெரிய குப்பைத் தொட்டி உள்ள வீடு நாவலாசிரியர் வீடு!

— எஸ். முகம்மது யூசுப்.

ஜாக்கிரதையாய்ச் செய்து முடிக்க வேண்டும். இந்த பிக்ஷுவை ஒரு கண நேரங்கூட விடாமல் நீ பின் தொடர்ந்து போக வேண்டும். உன் கண்பார்வையிலிருந்து அவர் அகலுவதற்கு இடம் கொடுக்கக்கூடாது. நீ அவரைப் பின் தொடர்கிறாய் என்பது அவருக்குத் தெரியக்கூடாது. ஆற்றுக்கு அக்கரையில் எங்களுக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது. திரும்பிப்போய் அதை முடித்துவிட்டு, இதே இடத்திற்கு மறுபடியும் வந்து சேருகிறோம். இவ்விடத்தில் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம். சந்திரன் தலைக்குமேல் வரும்போது நீ இங்கே வந்து எங்களுக்குச் சமாசாரம் தெரிவிக்க வேண்டும். பிக்ஷு எங்கே போனார், என்னென்ன செய்தார் என்று தெரியப்படுத்த வேண்டும். ஆனால் அவர் முன்னால் மட்டும் நீ எதிர்ப்படவே கூடாது.''

இவ்விதம் கட்டளையிட்டு, ''நான் சொன்னதையெல்லாம் நன்றாய் மனத்தில் வாங்கிக் கொண்டாயா, குண்டோதரா! எல்லாம் தவறின்றிச் செய்வாயா?'' என்று சக்கரவர்த்தி கேட்டார்.

''அப்படியே செய்வேன், பிரபு!'' என்று ஒப்புக்கொண்டு, பிக்ஷுவைத் தொடர்ந்தான் குண்டோதரன்.

இதன் காரணமாகத்தான் பிக்ஷுவின் மேல் பொங்கி வந்த ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு, குண்டோதரன் பலமுறையும் சும்மா இருக்க வேண்டியதாயிற்று.

ஆயனரும் சிவகாமியும் மாமல்லரும் பாறைப் பிரதேசத்திலிருந்து கிராமத்தை நோக்கிப் புறப்பட்டபோது, அவர்களுக்குச் சற்றுப் பின்னால் பாதை ஓரத்து மரஞ்செடிகளிலும், புதர்களிலும் மறைந்து புத்த பிக்ஷு சென்றார். புத்த பிக்ஷு அறியாமல் அவரைப் பின் தொடர்ந்து குண்டோதரனும் போகலானான்.

இராமத்தின், முனையிலேயிருந்த கோயிலின் மதிலை நெருங்கியதும், மடத்து வாசலில் கூட்டமாக நிற்பவர்கள் யார் என்று பார்த்து வர ஆயனர் சென்றாரல்லவா? அப்போது சிவகாமிக்கும் மாமல்லருக்கும் அன்பு மொழிகள் பேசவும், பரஸ்பரம் பிரதிக்ஞை செய்து கொள்ளவும் மறுபடி ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அவர்கள் நின்ற இடம் கோயில் மதில் திருப்பத்தின் ஒரு முனை, அதே முனையின் மற்றொரு திருப்பத்தில் நின்ற புத்த பிக்ஷுவுக்கும் தமது கத்தி முனையைக் குறிபார்க்க அப்போது சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் குறிபார்த்த கத்தியை எறிவதற்கு மட்டும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஏனெனில், பிக்ஷுவின் கை எட்டக் கூடிய இடத்திலே சிவகாமியும் அவளுக்கு அந்தண்டைப் புறத்தில் மாமல்லரும் நின்று கொண்டிருந்தார்கள். சிவகாமியும் மாமல்லரும் இடம் மாறி நிற்கும் நேரத்தைப் பிக்ஷு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

கோயில் மதிலுக்கு எதிர்ப்புறத்திலேயிருந்த தோட்ட வேலிக்குப் பின்னால் மறைந்து நின்று, மேற்படி காட்சியைக் குண்டோதரன் பார்த்துக் கொண்டிருந்தான். இரண்டு மூன்று தடவை பிக்ஷு கத்தியை ஓங்கியதைப் பார்த்த பிறகு, இனிமேல் பொறுக்க முடியாதென்று குண்டோதரன் அவர்மேல் பாய்வதற்குச் சித்தமானபோது, நல்ல வேளையாக ஊர்ப் பக்கமிருந்து தளபதி பரஞ்சோதியும் மற்ற வீரர்களும் திடுதிடுவென்று வந்து விட்டார்கள். பிக்ஷுவும் உடனே நகர்ந்து பின்னால் போய் விட்டார்.

மாமல்லரைப் பரஞ்சோதி அழைத்துக் கொண்டு போனதையும் அவர்களுக்குப் பின்னால் ஆயனரும் சிவகாமியும் சென்றதையும் பார்த்துக் கொண்டிருந்தான் குண்டோதரன். சற்றுப் பின்னர் புத்த பிக்ஷு அதே மதில் முனைக்கு அருகில் வந்து நிற்பதையும் கண்டான்.

பின்னர், குண்டோதரன் சற்றும் எதிர்பாராத காரியம் ஒன்றைப் புத்த பிக்ஷு செய்தார். கோயில் பிராகாரத்துக்கு உட்புறமிருந்து வெளியே படர்ந்திருந்த மரக்கிளைகளை இலேசாகப் பிடித்துக் கொண்டு, மதிலின் மேல் ஏறி உட்புறம் குதித்தார்.

அடுத்த கணத்தில் குண்டோதரன் புத்த பிக்ஷு சற்று முன் நின்ற இடத்துக்கு வந்து சேர்ந்தான். ஒரு விநாடி நேரம் அவனுடைய நெஞ்சு தொண்டைக்கு வந்து விட்டது. ஏனெனில், அவன் நின்ற இடத்

துக்கு வெகு சமீபத்தில் ஒரு சிறு பாம்பு நெளிவதைக் கண்டான். அங்கிருந்து துள்ளி நகர்ந்து கொண்டு, மறுபடியும் பாம்பு இருந்த இடத்தைப் பார்த்தபோது, அவ னுக்குச் சிறிது வியப்புண்டாயிற்று. ஏனெனில், பாம்பு, அசையாமல் கிடந்த இடத்திலேயே கிடந்தது. மறுபடியும் உற்றுப் பார்த்தபின், 'களுக்' என்று தனக்குத் தானே சிரித்துக் கொண்டான். உண்மையில் அது பாம்பு இல்லையென்றும், நாகம் போன்ற பிடியமைந்த கத்தி என்றும் தெரிந்தது. அந்தக் கத்தியை விரைந்து எடுத்து மடியிலே கட்டிக் கொண்ட பிறகு, மதில்மேல் ஏறுவதற்காக அண்ணாந்து பார்த்தான்.

அச்சமயம் மதிலுக்கு அப்புறத்தில் மரக் கிளைகள் அசையும் சத்தம் உண்டாகவே, சட்டென்று ஒரு சந்தேகம் உதித்தது. உடனே மதில் முனையின் இன்னொரு பக்கத்துக்கு நகர்ந்து, சுவரோடு சுவராக ஒட்டிக் கொண்டு நின்றான். அவன் அப்படி நகர்ந்து நின்றது தான் தாமதம், புத்த பிக்ஷுவின் தலை, மதில் சுவர் மேலே காணப்பட்டது. பிக்ஷு வெளிப்புறம் இறங்குவதற்கு அதிக நேரம் ஆகவில்லை. இறங்கியவர் தரையிலே உற்றுப் பார்த்த வண்ணம் எதையோ தேடத் தொடங்கினார்.

அவர் எதைத் தேடுகிறார் என்பதை ஊகித்து உணர்ந்து கொண்ட குண்டோ தரன், சிறிதும் சத்தமில்லாதபடி மதில்மேல் ஏறிக் கோயிலுக்குள்ளே குதித்தான். அவன் குதித்த இடத்துக்கு வெகு சமீபத்தில் மதில் சுவரை ஒட்டிக் கோயில் மடைப்பள்ளி இருந்தது. மடைப்பள்ளிச் சுவருக்குப் பின் னால் அவன் மறைந்து நின்று கொண்டான்.

சற்று நேரத்துக்குப் பிறகு புத்த பிக்ஷு மறுபடியும் கோயில் பிராகாரத்துக்குள்ளே குதித்தார். குதித்த இடத்தில் பன்னீர் மரத் தடியில் குனிந்து தேடினார்.

அதிலும் பயனின்றி அவர் நிமிர்ந்த போது, அவருடைய மூச்சு நாகப் பாம்பின் சீறலைப் போல் தொனிப்பதைக் கேட்டு, அஞ்சா நெஞ்சமுடைய குண்டோதரன் கூட நடுங்கினான்.

புத்த பிக்ஷு பன்னீர் மரத்தடியில் சற்று நேரம் நிற்பதும், பிராகாரத்தில் கொஞ்ச தூரம் நடந்து சென்று, வெளிப் பக்கம் எட்டிப் பார்த்துவிட்டுத் திரும்புவதுமா யிருந்தார்.

இடையிடையே கோயிலுக்கு வெளியி லிருந்து போர் வீரர்களின் ஜயகோஷமும் கிராமவாசிகளின் ஆரவார முழக்கமும் கேட்டுக் கொண்டிருந்தன.

ஏறக்குறைய அர்த்தராத்திரி ஆன போது, சந்தடி அடங்கியது. கோயிலின் கர்ப்பக் கிருஹக் கதவுகளைச் சாத்தித் தாழிடும் சப்தம் கேட்டது. இதற்குப் பிறகு நாகநந்தியடிகள் மரத்தடியிலிருந்து எழுந்து கோயில் பிராகாரத்தைச் சுற்றி நடக்கத் தொடங்கினார்.

மடைப்பள்ளியின் கதவு திறந்திருப் பதைப் பிக்ஷு பார்த்து விட்டு உள்ளே நுழைந்ததைக் கண்டான் குண்டோதரன். சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தான். இரண்டே எட்டில் மடைப்பள்ளி வாச லுக்குச் சென்று கதவை லேசாகச் சாத்தி வாசற்புறத்துத் தாழ்ப்பாளை இழுத்துப் போட்டான்.

உடனே மதில் சுவர் ஏறிக் குதித்து வெளியில் வந்து, வராக நதியின் தோணித் துறையை நோக்கி விரைந்து சென்றான். படகுகள் கிளம்பிய பிறகே குண்டோதரன் தோணித்துறைக்கு வந்து சேர்ந்தான் என்பதை முன் அத்தியாயத்தில் பார்த் தோம்.

(தொடரும்)

இவர் : ''என்னது..! நீங்களே உங்க ளுக்கு வோட்டுப் போட்டுக்க லையா... ஏன்?''

வேட்பாளர் : ''அதிக தடவை 'இன்னஸ்'ல பேர் சுயேச்சையா நின்னு பார்த்தா, என்னை விட வாங்கலாம்னு நிறையப் பேர் ஜாம்பவான்கள் இருக்காங்க; அதான், ஒரு வோட்டுக் கூட வாங்காமல் சாதனை படைக்கலாம்னு பார்த்தேன்!''

- சீர்காழி. வி. ரேவதி.



# பார்வை

கண்ணுக்குத் தெரிந்தவரை எந்தப் புல்லும், பூண்டும் இல்லாத வெட்டவெளி - இந்த மாபெரும் ஆலமரத்தைத் தவிர - அரக்கனுக்குப் பிறந்த அழகிய குழந்தையைப் போல. இந்த ஆலமரத்தின் கீழே முடங்கிக் கொண்டிருக்கும் இவன் யார்? எண்ணெய் காணாத பரட்டைத் தலை, வாய் கூடத் தெரியாதபடி முகம் நிரை தாடியும் மீசையும். இவன் ஏன் இங்கே முடங்கிக் கிடக்கிறான்? பார்த்தால் பைத்தியக்காரன் மாதிரி இருக்கிறது. திரும்பிப் பார்த்தால் ஞானி போல் இருக்கிறான்.

இவன் சோறு தேடி அலைவதில்லை. எப்போதாவது யாராவது அந்த வழியே வந்தால், சாப்பிட அவனுக்கு ஏதாவது போட்டால், சாப்பிடுவான். இல்லாவிடில், எங்கும் நிறைந்திருக்கும் காற்றே....

இவனைத் தவிர,-இன்னொரு உயிரும் அங்கே வந்து தங்கும். அந்தக் கழுகின் பார்வை மிகக் கூர்மையானது. உணவுக்குப் பறந்து பறந்து தேடித் தின்று, பின்பு இந்த மாபெரும் ஆலமரத்தில் வந்து தங்கும் அந்த கழுகுக்கு, இந்தப் பைத்தியக்காரனைப் (ஞானி?) பார்த்து மிகவும் பொறாமையாக இருந்தது.

ஒரு நாள் திடீரென்று பல வண்டிகள் அங்கே வந்து ஆல மரத்துக்குச் சற்றுத் தள்ளி நிறையச் செங்கற்களை இறக்கின. ஒரு புறம் மணல் குவிந்தது. நூற்றுக்கணக்கான பேர் அங்கே அஸ்திவாரம் போட மண்ணைத் தோண்டிக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் போட்ட அஸ்திவாரத்திலேயே அது மிகப் பெரிய கட்டடம் என்று தெரிந்தது.

நம்முடைய பைத்தியத்துக்கு இந்தச் சத்தங்களும், மனிதர்களின் கூட்டமும் சற்றும் பிடிக்கவில்லை. ஆ! என்ன இது இவன் எழுந்து உட்கார்ந்து விட்டானே! கட்டடத்தில் வேலை செய்யும் ஆட்கள், தூரத்திலே, நிழலிலே அமர்ந்திருக்கும் அபூர்வ மனிதனைப் பற்றி வெவ்வேறு விதமாகப் பேசிக் கொண்டார்கள்.

ஆல மரத்தின் மேல் வந்து தினசரி உட்காரும் கழுகுக்குக் கூட இந்த ஆரவாரம் பிடிக்கவில்லை.

**ஜ.சாமிநாதன்**

நான்கு, ஐந்து வாரங்களில் கட்டடம் முதல் மாடி அளவுக்கு எழும்பியது. அது அழகாக அமைந்து இருப்பதைக் கண்டு, அதன் சொந்தக்காரரான செல்வந்தர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். அதுசரி, இந்தப் பைத்தியக்காரன் ஏன் 'ஹோ'வென்று சிரிக்கிறான். கழுகு தனது கூரிய பார்வையால் அவனைப் பார்த்தது. அவன் மனத்திலும் முதல் மாடி அளவு கட்டடத்தைக் கட்டி இருந்தான். அதற்கு வேண்டிய செங்கல்லும், மணலும் அவன் மனத்திலேயே இருந்தன. கழுகுக்கு இந்தப் பைத்தியக்காரத்தனத்தைக் கண்டு எரிச்சலும், சிரிப்பும் வந்தன.

எதிரே இருந்த கட்டடம் இரண்டாம் மாடி, மூன்றாம் மாடி என வளர்ந்தது. இந்தப் பைத்தியக்காரன் நிற்கவே ஆரம்பித்து விட்டான். உடம்பிலே புதுத் தென்பு.

கட்டடம் கடைசியாக நாலு மாடியாக எழுந்தது. இவன் முகம் இப்போது கல்யாண புருஷனைப் போல இருந்தது. கழுகோ கோபத்தாலும் கேலியாலும் தவித்தது. அவனை அப்படியே கொத்தி விடலாமா என்று கூட எண்ணியது.

அன்று இரவு.

இது என்ன? திடீரென்று அடிக்கும் இந்தக் காற்று ஊழிக்காற்றா? பெரிய மலைகளையொத்த மேகங்கள் வானத்தில் மாபெரும் பலத்தில் முட்டிக் கொள்கின்றனவா? இந்த மாபெரும் சண்டையைப் பொறுக்காது வானமே மண்ணில் பேயாய் வந்து 'ஹோ'வென்று அழுகிறதா? ஆல மரத்தின் கிளைகள் ஆடின. அதனடியே இருந்த நம்முடைய நாயகன் நடுங்கி, முகத்தைப் பொத்திக் கொண்டான். அவனுடைய உடல் பல ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தப் பேய் மழையில் நனைந்தது.

விடிந்தது. மழையும் நின்றிருந்தது.

அம்மா, இது என்ன? எதிரே உள்ள கட்டடம் மின்னலினும் சாட்டையடி பட்டு வெறும் கற்குவியலாக இருந்தது.

ஆலமரமும் சின்னாபின்னமுற்றிருந்தது. பிரம்மாண்டமான ராட்சதன் ஒருவனின் கரங்கள் துண்டிக்கப்பட்டது போல் அதன் கிளைகள் பல முறிந்து கிடந்தன. அந்தக் கிளைகள் ஒன்றின் அடியில் இவன்



கால்கள் சிக்கியிருந்தன. அவன் கண்களிலே நீர் பிரவாகமாக வழிந்தது.

கழுகு வந்து இதைப் பார்த்துத் திடுக்கிட்டது. 'ஐயோ, பாவம். இவனுக்கு இந்தக் கதியா' என்று வருந்தியது. 'பாவம், கால்களை நகர்த்த முடியாமல் தவிக்கிறானோ? ரொம்ப வலிக்கிறதோ?'

எதிரே உள்ள மாடி கட்டடத்தின் சொந்தக்காரன் வந்து ''ஐயோ, எல்லாம் போயிற்றே'' என்று கதறியழுதான்.

இவனும் 'ஹோ'வென்று கதறி அழ ஆரம்பித்தான். கழுகு உற்று நோக்கியது. அடப்பாவி, இவன் வலியால் அழ வில்லை. ஒரு கிளை முறிந்து விழுந்து இவனைத் தாக்கியிருந்தாலும் பலத்த அடி இல்லை. எலும்பு முறிவும் இல்லை! இவன் தன் மனத்தில் கட்டியிருந்த பல மாடிக் கட்டடமும் இந்தப் பேய் மழையில் இடிந்து விட்டதே என்றே அழுகிறான்! இதைக் கழுகு உணர்ந்தது. 'அட முட்டாளே அவன் காசு போட்டு அருமையாகக் கட்டிய கட்டடம் இடிந்து விட்டதே என்று உயிரே போகிற மாதிரி அழுகிறான். நீ மனத்தினாலேயே கட்டிவிட்டுப் பிறகு மனத்தினாலேயே அழித்துக் கொண்டாய். உன்னுடைய அழுகை பைத்தியக்காரத்தனமானது' என்று நினைத்துக் கொண்டே மேலே சென்றது கழுகு.

**மே**லே, மேலே, மேலே...

இப்போது கழுகு கீழே பார்த்தது. கட்டடக் குவியலும், ஆல மரமும் புள்ளிகளாகவே தெரிந்தன. ஆனால் கட்டடக்காரனின் அழுகையும் பைத்தியக்காரனுடைய அழுகையும் மெல்லக் காதில் விழுந்தது.

இது என்ன? இரண்டு அழுகையும், சோகமும் கழுகிற்கு ஒரே மாதிரியாக இருப்பது புரிந்தது. அப்படியானால் வித்தியாசம் இல்லையா என்ன? முதல் மாடியில் இருப்பவன் கீழே இருப்பவனைப் பார்த்து, 'நானே சூரியன் அருகில் இருக்கிறேன்' என்று சொல்வது போலவும், ஆஸ்திகன் நாஸ்திகனைப் பார்த்து, 'நானே கடவுள் அருகில் இருக்கிறேன்' என்று கூறிப் பெருமைப்படுவது போலவும்தானா இது?

## அருள்வாக்கு

**சா**ஸ்திரப் பிரகாரம் நடப்பது இந்தக் காலத்தில் சாத்தியமே இல்லை என்று நினைத்து விடக் கூடாது. வியாபார வேகத்தில் வளர்ந்து விட்ட லௌகிக நாகரிகத்தை விட்டு விட்டு, தேவைகளைக் குறைத்துக் கொண்டால், யாருமே இப்படி ஆசாரங்களை விட்டுப் பணத்துக்காகப் பறக்க வேண்டியதில்லை. பணத்துக்காகப் பறக் காத போது, பகவத் ஸ்மரணத்துக்கு நிறைய அவகாசம் கிடைக்கும்; வாழ்க்கையில் நிம்மதியும் திருப்தியும் சௌக்கியமும் தன் னால் உண்டாகும்.

கர்ம அனுஷ்டானங்களைச் செய்யப் பணவசதி வேண்டியதேயில்லை. ஆடம்பரமாகச் செலவு செய்து பூஜை செய்ய வேண்டும் என்பதில்லை. காய்ந்த துளசி தளமும், வில்வ பத்திரமும் பூஜைக்குப் போதும். நாம் சாப்பிடுகிற அன்னத்தையே நைவேத்தியம் என்று காட்டினால் போதும். 'விவாகமும் சாஸ்திர அநுஷ்டானம்தானே, அதற்கு ஏகமாய்ச் செலவாகிறதே!' என்று கேட்கலாம். ஆனால், இப்போது நடக்கிற ஆடம்பரம் எதுவுமே சாஸ்திர சம்மதமான விவாகத்துக்குத் தேவையில்லை. குறிப் பாக, இப்போது விவாகங்களில் மிகப் பெரிய செலவாக உள்ள வரதட்சிணைக்குச் சாஸ்திர சம்மதமே இல்லை. சாஸ்திர சம்மதமான கர்மங்களுக்குப் பணம் முக் கியமாக இருந்தால், பணக்காரர்களுக்கு மட்டும்தான் நம் மதம் உரித்தானது என்றாகி விடும். உண்மையில் அப்படி இல்லவே இல்லை.




அறம், பொருள், இன்பம், வீடு என்கிற நாலு வாழ்க்கைப் பயன்களில், இன்பத்தை மட்டும் தேடி, அதற்காகப் பொருளுக்கு அலைந்து கொண்டிருக்கிறோம். இதை மாற்றி வீட்டுக்காக (மோக்ஷத்துக்காக) அறத்தின் (தர்மம்) மூலம் பாடுபட வேண்டும். வாழ்க்கையை எளிதாக்கிக் கொண்டால், பொருளுக்காக அலைய வேண்டாம்; அறங்களை அப்போது பின் பற்ற முடியும். அறத்தின் பயனாகக் கிடைக் கிற பேரானந்தத்தையும் பெற முடியும்.

**– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.**



✱ ஆ. கிருஷ்ணசாமி



✱ எஸ். எஸ். மாரியப்பன்



✱ ஆர். ஸ்ரீகிருஷ்ணன்

# கல்வி பெறத் துடிக்கிறார்கள்;

●● கட்டட வேலை செய்து வந்த என் தகப்பனார் திடீரென்று மாரடைப்பால் காலமானது முதல் என் தாயார்தான் உழைத்து, என்னைப் படிக்க வைத்துக் கொண்டிருக்கிறார். பிளஸ் டூவில் 1200 க்கு 1016 மார்க் பெற்றுள்ளேன்...

- ஆ. கிருஷ்ணசாமி.

●● நான் பி. ஏ. பட்டப் படிப்பில் 69 சதம் பெற்றுள்ளேன். என் தகப்பனாருக்கு மாதம் ரூ. 140 மட்டுமே சம்பளம். நான் இருபது கி.மீ. தூரத்திலுள்ள கல்லூரிக்குச் சென்று படிக்கப் பேருந்துச் செலவே கட்டுப்படியாகவில்லை...

- எஸ். எஸ். மாரியப்பன்.

●● எனக்கு இப்போது உதவுங்கள். நான் படித்துப் பதவியில் அமரும் போது கல்கி கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளைக்கு என்னால் இயன்ற நன்கொடை அளித்து நன்றிக் கடன் தீர்ப்பதுடன் பிற ஏழை மாணவர்களுக்கும் உதவியவனாவேன்...

- ஆர். ஸ்ரீகிருஷ்ணன்.

இம் மாதிரி ஒன்றா? இரண்டா? ஆயிரக்கணக்கில் ஆண்டு தோறும் கடிதங்கள் குவிகின்றன. இப்படி வாழ்க்கையுடன் போராடி வெற்றி பெறத் துடிக்கும் மாணவர்களுக்கு உதவ வேண்டும் என்ற ஆர்வம் உங்கள் உள்ளத்தில் எழுமானால் உங்களால் இயன்ற பொருளுதவியைக் கல்கி நினைவு அறக்கட்டளைக்கு அனுப்பி வைக்கலாம். பொருளாதாரத்தில் பின்தங்கி ஆனால் படிப்பில் சிறந்து விளங்கும் மாணவ மணிகளுக்கு உதவ நீங்கள் அனுப்பும் நன்கொடை கைகொடுக்கும்.

நன்கொடைகளை டிராஃப்ட் அல்லது எம். ஓ. அல்லது காசோலை மூலம் KALKI KIRISHNAMURTHY MEMORIAL TRUST என்ற பெயருக்கு அனுப்பலாம். நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு உண்டு.


விலாசம் :
நெ. 1, ஐந்தாவது தெரு,
ஏரிவட்டம், நுங்கம்பாக்கம்,
சென்னை - 600 034.

## அறக்கட்டளை வழங்கும் உதவித் தொகை

கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை, கல்வியிற் சிறந்த ஆனால் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு நடப்பு கல்வி ஆண்டுக்கு (91 - 92) ரு.30,000 உதவித் தொகைகளாக விநியோகிக்கவிருக்கிறது. விண்ணப்பங்கள் பெறக் கடைசித் தேதி: 31.7.91. முழு விவரங்களுக்குக் கல்கி 30.6.91 இதழ் காண்க.

கி. ராஜேந்திரன்,
(ஆசிரியர் கல்கி)
நிர்வாக அறங்காவலர்.

# கருணை கொண்டு உதவுங்கள்!



◆ ஆதிமூலம் தீட்டிய இயற்கைக் காட்சி ஓவியம்

# நவீன ஓவியங்கள் வெறும் கிறுக்கல்களா?

**கார்ட்டூன் சித்திரங்கள் எப்படிக் காட்சிக்கு அப்பாற்பட்ட சில விஷயங்களைச் சொல்லுகின்றனவோ, அப்படி, அல்லது அதை விட அதிகமாகவே நவீன ஓவியங்களும் சிற்பங்களும் சில விஷயங்களைச் சொல்லுகின்றன...**



◆ தட்சிணாமூர்த்தியின் கலைப் படைப்பில் சிற்பத் தலை...

'நீங்கள் பார்க்க விரும்புவது ஒரு பெண்ணைத்தான் என்றால், எதற்காக என் ஓவியத்தைப் பார்க்க வேண்டும்? ஒரு பெண்ணையே நேரடியாகப் பார்த்து விடலாமே!' என்றார் பிக்காஸோ.

ஒரு பெண்ணின் முகத்தை அல்லது ஓர் இயற்கைக் காட்சியை அப்படியே தத்ரூபமாக வரைந்து காட்டுவதற்கு ஓர் ஓவியன் எதற்கு? இன்றைய நவீன கேமராக்கள் ஓர் ஓவியனை விடத் தத்ரூபமாகப் படம்பிடித்துக் காட்டி விடுமே!

ஆக, ஓவியம் என்பது வெறும் புகைப்படம் அல்ல. அதற்கும் அப்பால் உள்ளவற்றைப் புலப்படுத்த வேண்டும்.


வெறும் கண்களுக்குத் தெரிகிறவற்றைக் கருப்பொருளாகக் கொண்டு, புறக்கண் களுக்குத் தெரியாதவற்றைப் புலப்படுத்த வேண்டும். இந்த வகையைச் சார்ந்தவை தான் நவீன ஓவியங்களும் சிற்பங்களும். இதையே வேறு வார்த்தைகளில் சொல்லுவ தென்றால், இன்றைய நவீன ஓவியங்களும் சிற்பங்களும் உருவம் சாராது, உணர்வு சார்ந்தே இருக்கின்றன. அதனால்தான் இவை, ஒரு சராசரி மனிதனுக்குப் புரி யாமல் புருவத்தை உயர்த்த வைக்கின்றன.

இங்கு வெளியாகியுள்ள ஆதிமூலம் வரைந்த ஓவியத்தைப் பாருங்கள். இது அருவவகை இயற்கைக் காட்சி ஓவியம் (Abstract Landscape Painting ). மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் பார்வையாள னைச் சிரமப்படுத்துகிற ஓவியம்தான் இது. ஆயினும் இதைக் கூர்மை யாகப் பார்த்தால், இதில் தீட்டப்பட்டுள்ள வண் ணங்கள் ஒன்றைச் சார்ந்து மற்றொன்றாய் - ஒன்றோ டொன்று ஒத்துப்போகும் வழியில் - அமைந்திருப் பது தெரியும். இது ஓர் இயற்கைக் காட்சியிலுள்ள தோற்றம் - அதன் பின் னணியில் அமைந்துள்ள வண்ண உணர்வை வெளிக் காட்டுகிறது!

இன்னும் கொஞ்சம் கூர்மையாகப் பார்த்தால், இந்த ஓவியத்தில் ஒளியும் நிழலும் சமவேகத்தில் ஒன்றையொன்று எதிர்த் துப் பூடகமாய் விரவியுள்ளதைக் காண லாம். இயற்கைக் காட்சியொன்றின் பசுமை யான மலர்ச்சியும் புத்துணர்ச்சியும்தான், இப்படிப் பூடகமாக - ஒளியும் நிழலுமாகக் காட்டப்பட்டுள்ளன. சுருக்கமாகச் சொல்வ தென்றால், நாம் அனைவரும் வழக்கமாகப் பார்க்கும் மலை, கடல், ஆறு, சோலை போன்ற இயற்கைக் காட்சியைத்தான், அந்தக் காட்சியின் உருவம் தவிர்த்த - காட்சியின் பின்னுள்ள வண்ண ஒளி, நிழல் உணர்வுகளின் சாரத்தை ஓவியமாகத் தீட்டி யுள்ளார் ஆதிமூலம்.

ஓவியர் சிஜேன் (Cezanne) சொல் கிறார் : ''ஒன்றைப் பார்த்துக் கண்ணை (மனக்கண்ணை) மூடிக் கொண்டு அடிமை போலக் காப்பியடிப்பது ஓவியமில்லை. பல்வேறு உறவுகளிடையே காணப்படும் கலை - நவீன ஓட்டத்தைக் கண்டுபிடிப்ப தென்பதே ஓவியம் தீட்டுவது!''

இப்படிப்பட்ட ஓவியங்களை முழு மையாகக் கண்டுணர்ந்து ரசிப்பதற்கு, ஓர் ஆத்மார்த்தமான ஈடுபாடும் ஆர்வமும் தேவை. எப்படி வார்த்தைகள் ஏதுமற்ற இசையை - ராக ஆலாபனையைக் கேட்டு ரசிப்பதற்குப் பயிற்சியும் ஆத்மார்த்தமான ஆர்வமும் ஈடுபாடும் தேவையோ, அப்படி.



✱ சர்பரிராய் சௌத்ரி உருவாக்கிய சிற்பம்: பெண்மையின் நளினம்....

நவீன ஓவியங்களைப் போன்றவை தான் நவீனச் சிற்பங்களும். கோயில்களில் காணப்படும் 'யாழி' சிற்பங்களைப் பாருங்கள்... அப்படியொரு மிருகம் இருந் திருக்குமா? இருந்திருக்க முடியுமா? ஆனா லும் கோயில்களில் அவற்றைச் செதுக்கி



✱ மருதுவின் ஓவியத்தில் ஒரு வேகம்....

யிருக்கிறார்களே நம் முன் னோர்கள்... ஏன்? பல்வேறு மிரு கங்களுக்குள்ள தனித்தனியான சக்தி களையெல்லாம் ஒன்றுதிரட்டி, ஓருருக் கொடுத்தால் எப்படி யிருக்கும் என்று நம் பண்டைய கலைஞர்கள் தங்கள் மனக் கண்ணில் பார்த்திருக்கக்கூடும். அதன் வெளிப்பாடு தான் 'யாழி' போன்ற பல் வேறு வகைப்பட்ட சிற்பங்களாக இருந்திருக் கும்!

இங்கே வெளியாகியுள்ள, தட்சிணா மூர்த்தியின் படைப்பான சிற்பத் 'தலை'யும் சர்பரி ராய் சௌத்ரி உருவாக்கியுள்ள 'ஒருக்களித்துப் ப்டுத்துள்ள பெண்'ணின் சிற்பமும் எதை உணர்த்துகின்றன? சிற்பத் 'தலை'யைப் பொறுத்தவரை அதுவொரு சிற்பப் படைப்பு; தமிழ் மண்ணின் கலைப் பாரம்பரியம் தொனிக்கும் ஒரு சிற்பப் படைப்பு. ஒருக்களித்துப் படுத்துள்ள பெண்ணின் சிற்பத்தைக் கூர்ந்து பார்த்தால், அது பெண்மையின் நளினத்தைச் சொல்லு கிறதென்பதை உணரலாம்.

நவீன ஓவியங்களானாலும் சரி, சிற் பங்களானாலும் சரி, அவற்றின் ஆதார வரைபட நிலையிலேயே வேகம் அதிகம். இங்கு வெளியாகியுள்ள மருதுவின் படத் தில் வெறும் கோடுகளைக் கொண்ட நிலை யிலேயே - அந்த வேகத்தைப் பார்க்கலாம்.

ஆக, இன்றைய நவீன ஓவியங்களும் சரி, சிற்பங்களும் சரி அவையெல்லாம் உருவம் சார்ந்த நிலையிலிருந்து முற்றிலு மாக விடுபட்டு, உருவம் தாண்டிய சில விஷயங்களைச் சொல்லுபவையே. அவற்றை ரசிப்பதற்கு நமக்கும் உருவங் களை விலக்கி விட்டுப் பார்க்கிற பக்குவமும் பார்வையும் வர வேண்டும்.

- விட்டல்ராவ்

50

வாசகர் யோசனை:
க. மாதவன்,
மதுரை - 11.



# போயஸ் கார்டனில் ஒரு போட்டோ

சென்னை ஹோலி ஏஞ்சல்ஸ் பள்ளியில் நடந்த விழாவில் ஒரு நாலு வயதுக் குழந்தை நடனமாடியது. அந்த நிகழ்ச்சிக்காக குழந் தைக்குத் தைக்கப்பட்ட விசேஷ உடை மிக அழகாய் இருந்ததால், அதன் அம்மா, அந்த உடையில் குழந்தையை ஒரு போட்டோ எடுக்க விரும்பினார். ஸ்கூலுக்கு எதிரிலிருந்த ஸ்டுடி யோவுக்கு அழைத்துக் கொண்டு போய், போட்டோ எடுத்துக் கொண்டார்.

சிலநாட்களுக்குப் பின், புகைப்படக்காரர், குழந்தையின் படத்தை மிகப் பெரியதாய் புளோஅப் செய்து, தங்க நிற ஃப்ரேம் போட்டு, குழந்தையின் அம்மாவிடம் கொடுத்து 'அது தன் அன்பளிப்பு' என்ற போது, அம்மாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

புகைப்படக்காரரே விளக்கம் சொன்னார் : ''உங்கள் குழந்தையின் படத்தை பிரின்ட் போட்டு அனைத்திந்திய போட்டோ போட்டிக்கு அனுப்பினேன். முதல் பரிசு கிடைத்தது.''

அன்று தங்கப் பதக்கம் பெற்றுத் தந்த குழந்தை இன்று தமிழ் நாட்டின் முதலமைச்சர். அந்த போட்டோ இன்றும் கூட போயஸ் கார்டனில் இருக்கிறது.

ஆதாரம் : மணிமேகலை பிரசுர வெளி யீடான புரட்சிச் செல்வி ஜெயலலிதா.

தகவல் : ஜவேலி.

டாக்டர் பதில்கள்:

★ எஸ். நாரம்புநாதன், கரண்டை.

**கைவிரல்களை மடக்கிச் சொடக்குப் போடுவதால் விரல்களுக்குப் பாதிப்பு ஏதேனும் ஏற்படுமா?**

✱✱ டாக்டர். வ. நம்பி, சென்னை - 4.

அப்படி ஒன்றும் பாதிப்பு ஏற்படாது. ஆனால் விரல்களைச் சொடக்குப் போடுவதால் பயனும் கிடையாது. ஆனால் அது போல் கழுத்து எலும்புகளை நெட்டி முறிப்பது மிகவும் ஆபத்தானது. கை - கால் நரம்புகளைப் பாதிக்கும்.

**பாமாயில் மனித உபயோகத்துக்கு ஏற்றதே அல்ல. அது இயந்திரங்களுக்கே ஏற்றது என்கிறார்களே - உண்மையா?**

கொழுப்புச் சத்து அதிகம் உள்ளவர்களுக்கு, பாமாயில் மேலும் தீங்கு விளைவிக்கும். அதனால் தவிர்ப்பது நல்லது.

★ பி. முனுசாமி, பெங்களூர் - 21.

**ஆஸ்த்துமா என்பது எப்படி வருகிறது? இதன் அறிகுறிகள் என்ன? இதை ஆரம்பத்திலேயே மீண்டும் வராமல் தடுக்க முடியாதா?**

ஆஸ்த்துமாவில் பல வகைகள் உண்டு. அலர்ஜியால் வரலாம். அல்லது சிலருக்குப் பரம்பரையாகவும் வரலாம். ஆஸ்த்துமா அதிகமாக வராமல் பார்த்துக் கொள்ளலாம்; அடியோடு போய் விடும் என்று சொல்லுவதற்கில்லை. சில மருந்துகள் ஆஸ்த்துமாவை அடியோடு போக்கி விட்டது போல் தோன்றச் செய்யும். ஆனால் அம் மருந்துகள் உடலுக்கு நல்லவை அல்ல. அதனால் வியாதியை விட, வைத்தியம் மோசமாகி விடும் அபாயம் உண்டு. எனவே ஆஸ்த்துமாவை முழுவதுமாகக் குணப்படுத்த முடியாது என்பதைப் புரிந்து கொண்டு, அதன் கடுமையைக் குறைக்க மட்டுமே டாக்டரை அணுகவும்.

★ எம். கண்ணன், பெங்களூர் - 48.

**சிசேரியன் மூலம் பிறக்கும் குழந்தைகள், நார்மல் டெலிவரி ஆகும் குழந்தைகளை விடப் புத்திசாலிகளாக இருப்பதாக ஒரு செய்தி வெளியாகி இருக்கிறது. இயற்கையான பிரசவத்தின் போது குழந்தையின் தலை அழுத்தத்துக்கு உள்ளாவதே காரணம் என்று இச் செய்தி சொல்லுகிறது. இது உண்மையா?**

# பாமாயில் உடம்புக்கு நல்லதுதானா?

✱✱ டாக்டர் ரேவதி அனந்த் - சென்னை - 18

இது உண்மையே அல்ல. இயற்கைப் பிரசவத்தினால் மூளைப் பாதிப்பு குழந்தைக்கு நிச்சயம் உண்டாகாது. கர்ப்பவாசம் முழுமை அடைந்து பிரசவ நேரத்தின் போது தேவைப்படுமானால் மட்டுமே சில சமயம் குழந்தை எளிதாக வெளியே வர அவுட்லெட் ஃபோர்செப்ஸ் கருவியை உபயோகிக்கிறோம். இதனாலும் ஆபத்து ஏதும் இல்லை. சரியாகக் கவனிக்கப்படாத பிரசவமாக, குழந்தையின் தலை அளவுக்கும் தாயின் கூபக எலும்புக்கும் அதிக அளவு வித்தியாசம் இருந்து, குழந்தை அடைபட்டு அவதியுறும் போது மட்டுமே பிரெயின் டேமேஜ் ஏற்பட வாய்ப்பு உண்டு. இந்நாளில் இதை முன்கூட்டியே டாக்டர்கள் உணர்ந்து முன்னெச்சரிக்கையுடன் செயல்பட வசதி இருக்கிறது. இயற்கை ரீதியாக, நன்றாக வலி எடுத்துப் பிறக்கும் குழந்தைகள் புத்திசாலிகளாகவே இருக்கின்றன. சிசேரியன் குழந்தைகள் மட்டுமே சிறந்த புத்திசாலியாக இருக்க முடியும் என்ற எண்ணமே அபத்தமானது. தாய்க்கோ சேய்க்கோ மருத்துவ ரீதியாகத் தேவைப்பட்டால் மட்டுமே சிசேரியன் செய்ய வேண்டும்.

தொகுப்பு : எஸ். வி. என்.



# மாமியார் என்னும் பதவி


லட்சுமி அம்மாளுக்கு ஒரே டென்ஷனாய் இருந்தது. இருக்காதா பின்னே? முதல் முதலாக மாமியாராகப் போகிறாள் அல்லவா?

பார்க்கப் போனால் 'மாமியார்' பதவி கிடைத்து, பத்து வருடங்களுக்கு மேலாகப் போகிறது. ஆனால் அதெல்லாம் பெண்களைத் திருமணம் செய்து கொடுத்து, மாப்பிள்ளைகள் வந்ததால் கிடைத்த உப்புச் சப்பில்லாத மாமியார் பதவி! இப்போது கிட்டப் போவதுதான் உண்மையான மாமியார் ஸ்தானம்! அதாவது, மாட்டுப் பெண்ணை ஆளப் போகும் மாமியார் பதவி!

சீதா, ராதா, கீதா என்ற மூன்று பெண்களுக்குப் பின் லட்சுமி அம்மாள் தவமிருந்து பெற்ற பிள்ளை கிருஷ்ணனுக்குத் தான் இப்போது திருமணம்!

திருமணத்துக்கு இன்னும் இரண்டே வாரங்கள்தான் இருந்தன. வீடு கல்யாணக் களை கட்டி விட்டது. பெண்களும் மற்ற உறவினர்களும் ஒவ்வொருவராகக் குடும்பத்துடன் வரத் தொடங்கி விட்டனர். அப்படி, இப்படி என்று ஒவ்வொருவராக, 'மாமியாராக நடந்து கொள்வது எப்படி?' என்பது பற்றி ஒரு புத்தகம் போடுமளவுக்கு லட்சுமி அம்மாளுக்குப் புத்திமதிகளை வாரி வழங்க ஆரம்பித்து விட்டனர்.

''நீ ரொம்ப ஸாஃப்டும்மா; இப்படியிருந்தா வர்ற மருமக உன்னை மதிக்க மாட்டா...'' என்றாள் பெரிய பெண் சீதா...



''நீ ரொம்ப ஸாஃப்டும்மா; இப்படி எல்லாம் இருந்தா வர்றவ உன்னை மதிக்க மாட்டா... மாமியாரா, லட்சணமா, நம்ம சீதா மாமியாராட்டம் கொஞ்சம் அதிகாரத் தோரணையோடு இரு...'' பெரிய பெண் சீதா பிள்ளையார் சுழி போட்டாள்.

அவள் திருமணமாகி முதல் மூன்று மாதங்கள் மாமியாருடன் கூட்டுக் குடும்பமாய் வசித்து விட்டு, அப்புறம் ட்ரான்ஸ்ஃபர் என்ற போர்வையில் கணவனுடன் பெங்களூருக்குப் பறந்தவள்தான்! இப்போது மூன்று வருடத்துக்கொருமுறை மாமியார் வீட்டுக்கு வந்தாலே பெரிய விஷயம்!

''ஆமாம்! அதுவும் இந்தப் பொண்ணு வேலைக்கு வேற போறாளாமே! நீ கிச்சன்ல புகுந்தியானா அவ்வளவுதான். உன்னை முழு நேரச் சமையல்காரி ஆக்கிடுவா....''

டில்லியிலிருந்து வந்திருந்த இரண்டாவது பெண் ராதா சேர்ந்து கொண்டாள். டில்லி வெயிலும் குளிரும் ஒத்துக் கொள்ளாது என்று மாமியார் மாமனாரைச் சீர்காழியிலேயே வைத்திருப்பவள் அவள்!

''அதெல்லாம் சீதா மாமியாராட்டம் முதல்லேயே கறாராய்ப் பேசிண்டுடு... சமையல் வேலை முழுதும் அவதான் செய்யணும்னு! இத்தனை நான் உழைச்சது போதும்... இனிமேலாவது ஹாய்யா ரெஸ்ட் எடுத்துக்கோ!'' சிக்மகளூர் சித்தி சிறிய லெக்சரடித்தாள்.

''குழந்தை குட்டின்னு பொறந்தா ஆயா உத்யோகம் வேறு சேர்ந்துக்கும்; இப்ப நான் இல்லையா, சம்பளம் இல்லாத ஆயாவா...'' அகமதாபாத்திலிருந்து வந்திருந்த அத்தை அங்கலாய்த்தாள்.

'பாங்க்' வேலைக்குப் போகும் மருமகள் அவளுக்கு! ''உங்க சீதா மாமியார் மாதிரி 'குழந்தைகளை எல்லாம் ஓடி ஆடிப் பாத்துக்கற வயசில்ல எனக்கு. அதுக்கு ஒரு ஆயாவைப் போடு'ன்னு கண்டிஷனாச் சொல்லிடு...''

''உடம்பு ச ரி யி ல் லை ன் னு அவ சொன்னா, உருகிடாதே! நிஜமா ஜுரமடிக்கறதான்னு பாத்துட்டு, அப்புறம் வேலை செய்... சும்மா தலைவலி, கால் வலி, கை வலின்னா நம்பிடாதே! பெரும்பாலும் மாய்மாலமாத்தானிருக்கும்! என்னவோ முதுகுவலி முதுகுவலின்றாளேன்னு பரிதாபப்பட்டு நான் சமைக்கப் போக, இப்போ மாசத்துல முப்பது நாளும் அவளுக்கு முதுகுவலிதான்...'' - பெரியம்மா பெருமூச்செறிந்தாள்.

''பேசாம, நம்ம சீதா மாமியார் மாதிரி, அவளுக்கு உடம்புன்னா உடனே உனக்கும் உடம்புன்னு போர்வையை இழுத்துப் போத்திண்டு படுத்துடு! அப்ப வேற வழியில்லாம அவளே எழுந்து சமைப்பா; இல்லை உன் பிள்ளை பாத்துக்கறான்...'' சீதா அறிவுரையைத் தொடர்ந்தாள்.

''ஆனா அவனுக்குச் சமையல்னா என்னன்னே தெரியாதேடீ...'' லட்சுமி அம்மாள், உண்மையிலேயே அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் என்ன செய்வதென்று விசனப்பட்டாள்.

''அதெல்லாம் அம்மாவுக்குச் செய்யிறதுன்னா எந்தப் பிள்ளைக்கும் வணங்காது; பெண்டாட்டிக்கு உடம்பு முடியலைன்னா விழுந்தடிச்சுண்டு செய்வான்கள்...'' ராதா நொடித்தாள்.

''அப்புறம் இதையும் முதல்லியே சொல்லிடு... என் பொண்கள்ளாம் லீவுக்கு இங்கே வருவா; அப்போ நீ பாட்டுக்குப் பொறந்தாத்துக்குக் கிளம்பிடக் கூடாது, இங்கே இருந்து எல்லாரையும் ஒழுங்காக் கவனிக்கணும்னு...'' பாட்டி இடைச்செருகலாய்ச் சொல்லி வைத்தாள்.

''ஆமாமாம், அப்பப்ப எங்களைப் பத்தி எல்லாம் ஏதாவது பெருமையாச் சொல்லிண்டிரு.. அப்பத்தான் எங்களை மதிப்பா; இல்லைன்னா தனக்கு நிகர் யாருமில்லைன்ற நினைப்பாயிருக்கும்...'' சீதா கொசுறாக உபதேசித்தாள். இப்பவும் சீர்காழி போனால் என் நாத்தனார் புராணந்தான் கேக்கணும்... எனக்கானா வருஷத்துல ஒரு மாசம்; சீதாவுக்குப் பாவம் தெனம் இந்த ரோதனைதான்...''

''பக்கத்துலேயே பொறந்தகம்னு சும்மா சும்மா வீட்டுக்குக் கிளம்பிடப் போறா! சீதா மாமியாரைப் பாரு... கல்யாணம்னாக் கூட இரண்டு நாள் முன்னாடி தான் அனுப்பறா..'' - இது சீதா.

''அடிக்கடி சினிமா, டிராமா, ஃப்ரெண்ட்ஸுன்னு அவா ஜாலியாக் கிளம்பிண்டு உன்னை வீட்டுல 'வாட்ச்மேன்' வேலை பார்க்கச் சொல்லப் போறா. உஷாரா இரு; நீயும் கூடுமானவரை 'இந்த டிராமா எனக்குப் பிடிக்கும், அந்த ஃப்ரெண்டு எனக்குத் தெரிஞ்சவன்னு கூடவே கிளம்பிடு; இல்லைன்னா என்னை மாதிரித்தான் ஆகணும். சிவா விஷ்ணு

ஜெயஸ்ரீராஜ்



''ஜோசியரே... என் காதல் கைகூடுமான்னு கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்களேன்...''

''எதிர்ப்பே இருக்காது... பெண் வீட்டில் இருந்து முழு ஒத்துழைப்புக் கிடைக்கும்.''

''ரொம்ப தாங்க்ஸ் மாமா... நீங்களே ஒரு முகூர்த்த நாளும் பார்த்துச் சொல்லிடுங்களேன்.''

- திருத்துறைப்பூண்டி எஸ். கந்தசாமி.

ஆலயத்தைத் தவிர எனக்குப் போக்கிடம் கிடையாது; மாட்டுப் பெண் மெட்ராஸையே ஒரு சுத்துச் சுத்துவா...'' - மாம்பலத்திலிருந்து வந்திருந்த மாமி, தன் வாழ்க்கை அனுபவத்திலிருந்து கற்ற பாடத்தைப் போதித்தாள்.

ஆளுக்கொரு உபதேசம் செய்து, இயற்கையிலேயே தணிந்த சுபாவம் கொண்டுள்ள லட்சுமி அம்மாளை, கொஞ்சமேனும் மாமியார்த்தனத்துடன் நடந்து கொள்ளத் தயார் செய்து கொண்டிருந்தனர்.

''நாங்க ஏதோ கொஞ்சம் சொல்றோம்; நாளைக்கு கீதா வந்தா நன்னாச் சொல்லிக் கொடுப்பா; வருஷக்கணக்கா படகாமணி மாமியாரோட குப்பை கொட்றாளே...''

ஒருவழியாக இந்தப் பேச்சு முற்றுப் பெற்று கல்யாண ஜவுளியில் திசை திரும்பியது.

மறுநாள் கீதா வந்து சேர்ந்தாள். அவளைச் சுற்றி, மாமியார் கொடுமைகளைக் கேட்கும் ஆர்வத்துடன் ஒரு கூட்டம் கூடியது.

'ரொம்ப டயர்டா இருக்கு; கொஞ்சம் படுத்துண்டு ரெஸ்ட் எடுத்துக்கறேன். அப்புறமாப் பேசலாம்'' என்று கீதா சொல்லவும் மற்றவர்கள் ஷாப்பிங் கிளம்பிச் சென்றனர்.

எதிர்பார்த்தது போல, தூங்கி எழுந்ததும் கீதா, லட்சுமி அம்மாளிடம் சென்றாள். ''கங்கிராட்ஸ்மா... மாட்டுப் பெண் வரப் போறா... மாமியாராகத் தயாராயிட்டியா?'' என்று ஆரம்பித்தாள்.

இவளிடமிருந்து பெரிய உபதேசத்தை எதிர்பார்த்த லட்சுமி அம்மாள், தயாராக ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்து விட்டாள்.

''இதோ பாரும்மா... அவ உனக்கு ஒரே மாட்டுப் பொண்ணு... அவகிட்ட அன்பா ஆதரவா நடந்துக்க; எங்களைப் பத்தின பெருமை எல்லாம் அனாவசியமாப் பீத்தாதே! முடிஞ்சவரைக்கும் அவளுக்கு உதவி செய்; உடம்பு சரியில்லைன்னா பரிவாக் கஞ்சி வெச்சுக் குடு; ஆபீஸிலிருந்து வந்தா ஒரு காப்பி போட்டுக் குடு; ஏதாவது சினிமா, டிராமான்னு நீயே அனுப்பி வை; மாசத்துல ஒரு நாளோ ரெண்டு நாளோ, வெளியில சாப்பிடச் சொல்லு; அவ அம்மா வீட்டுக்கு மாசத்துல ஒன்னு ரெண்டு வர்ட்டி அனுப்பி வை...''

அவள் சொல்லச் சொல்ல, லட்சுமி அம்மாளுக்கு மயக்கம் வரும்போலிருந்தது. தனிக் குடித்தனம் எனும் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பவர்கள் எல்லாம் தன்னைச் சர்வாதிகாரியாக மாறச் சொல்கிறார்கள். ஒரு சர்வாதிகாரி மாமியாரிடம் மாட்டிக் கொண்டு ஆயிரம் அல்லல்படும் இந்தப் பெண், தன்னை அன்புருவாக மாறச் சொல்கிறாளே!

''என்னம்மா? நான் சொல்றது ஆச்சரியமா இருக்கா? தினமும் நான் ஆபீஸிலிருந்து களைப்பா வீடு திரும்பும் போது, யாராவது ஒரு வாய் காப்பி தர மாட்டாளான்னு தோணும்; அத்தனை வேலையும் தனியாச் செய்யிறச்ச 'கல்லுப் பிள்ளையாராட்டம் உக்காந்திருக்காளே! இவ கூட மாட உதவி செய்யக்கூடாதான்னு இருக்கும்; என்னிக்காவது சினிமா டிராமான்னு கிளம்பினா நானும் வரேன்னு ஒட்டிக்கிறவளைப் பார்த்தா எரிச்சல் வரும்; அவ பெண்ணின் பெருமைகளை அடிக்கடி பீத்திக்கறச்ச, இவ ஊமையாயிடக் கூடாதான்னு தோணும்; குழந்தை எத்தனை அழுதாலும் நானோ ஆயாவோதான் தூக்கணும்னு, தன்பாட்டுக்குப் புத்தகம் படிச்சுண்டிருக்கறவளைக் கண்டா 'சீ'ன்னு போயிடும்; நீ இப்படி எல்லாம் நடந்துண்டா, வர்ற பொண்ணும் உன்னைப் பத்தி இப்படித்தானே நினைப்பா? தலைவிதியேன்னு ரெண்டு பேரும் சேர்ந்திருக்கறதை விட, அன்போடயும் பாசத்தோடயும் இணைஞ்சிருந்தா அது அழகு...''

கீதா இப்படிச் சொல்லச் சொல்ல லட்சுமி அம்மாள் நெகிழ்ந்து போனாள்.

# தங்கப் பதக்கமும் நந்தி விருதும்



'சம்சாரம் - அது - மின்சாரம்' படத்துக்குத் தங்கப் பதக்கத்தை ஜனாதிபதியிடமிருந்து பெற ஆயிரம் கற்பனைகளுடன் டெல்லி பறந்து சென்றேன். என் மனைவியுடன் என் தாயாரையும் உடன் அழைத்துச் சென்றேன்.

விழா அன்று காலை பரிசு பெறப் போகிறவர்களை மட்டும் ஒருமுறை அந்த விழா அரங்குக்கு வரச் சொல்லி இருந்தார்கள். அங்கு நடந்த அத்தனையும் எனக்குப் படு விநோதமாக, வேடிக்கையாக இருந்தது.

ஜனாதிபதியாக ஒரு பெண்மணி, பாதுகாப்பு அதிகாரிகள் போல நடந்து வந்த சிலருடன் அரங்கினுள் நுழைய, நாங்கள் எல்லாம் எப்படி எழுந்து நின்று, எப்படி எங்கள் இருக்கையில் இருந்தே பணிவுடன் நமஸ்கரித்தோம் என்று இப்பொழுது நினைத்தாலும் சிரிப்பு வருகிறது. அது மாலை நடக்கவிருக்கும் நிகழ்ச்சிக்குக் காலையில் ஒத்திகையாம்.

அந்தப் பெண், ஜனாதிபதி இருக்கையில் அமர, நாங்களும் அமர, கிட்டத்தட்ட மாலையில் நடக்கவிருக்கும் நிகழ்ச்சி, காலையில் நடித்துக் காட்டப்பட்டது.

மேடையில் ஒரு பெண்மணி ஒவ்வொரு பெயராகப் படிக்க, நாங்கள் எப்படி மேடை ஏறிச் செல்ல வேண்டும், எவ்வளவு தூரம் தள்ளி நின்று பரிசுப் பொருளை எப்படி வாங்க வேண்டும், பரிசுப் பொருளை வாங்கியவுடன் எப்படி நன்றி சொல்லி, எப்படி அவருக்குப் பின் புறத்தைக் காட்டாத வகையில் நடந்து, மேடையை விட்டு வெளியேற வேண்டும் என்றெல்லாம் கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் ஒத்திகை.

''ஜனாதிபதிக்கு எவரும் எந்தக் காரணத்தைக் கொண்டும் கைகொடுக்க முயற்சி செய்யக் கூடாது'' என்று பல தடவை மேடையில் சொல்லிச் சொல்லி பயமுறுத்தினார்கள். செக்யூரிடி வேடம் தரித்தவர்கள் ஒரிஜனல் செக்யூரிடியை விட அதிகமாகப் பயமுறுத்தும்படி இருந்தார்கள்.

ஆக, பரிசுப் பொருளை வாங்கப் போவதில் இருந்த ஆனந்தத்தை விட, அதை அவர்கள் சொன்ன முறையில், சரியானபடி வாங்கிக் கொண்டு வந்து சேர வேண்டுமே என்ற டென்ஷன்தான் அதிகமாக இருந்தது.

மாலையில் குறித்த நேரத்தில், குறித்த பாதை வழியாக ஜனாதிபதி வந்தார். நாங்களும் சொல்லித் தரப்பட்டபடி டென்ஷனுடன் எழுந்து நின்று மரியாதை செலுத்தினோம். ஒரு வேடிக்கை என்னவென்றால் காலையில் ஒத்திகைக்கு வராத என் தாயாரும், என் மனைவியும் எங்களை விட இயற்கையாக எழுந்து நின்று மரியாதை செலுத்திக் கொண்டு இருப்பது தூரத்தே தெரிந்தது. (ஆம்! அவர்களைத் தனியாகவும் எங்களைத் தனியாகவும்தான் உட்கார வைத்து இருந்தார்கள்). ஆக, அவர்கள் மரியாதை நிஜமான மரியாதை.

**விசு**



◆ 'சம்சாரம், அது மின்சாரம்' படத்தில் ஒரு காட்சி



## ஆகாசத் தாமரை - எதார்த்தமான கதை!

O ''ஆகாசத் தாமரை'' தொடர்கதை விறு விறுப்புக் குறையாமல், 24 வாரங்கள் எங்கள் மனத்தில் அலையாய் அடித்து, இவ் வாரம் ஓய்வது சோகமாக இருந்தாலும், எதார்த்த மாக எழுதி, இயற்கையான முடிவையே தந்துள்ளார் இந்திரா பார்த்தசாரதி.
மொரப்பூர், ச. உமர்கான்.

O இலட்சியம் என்ற நோக்கமே இல்லாமல் படைக்கப்பட்ட ''துருவ்'' - கடைசியில் ''துருவ்வை'' மட்டுமே கதையின் இலட்சியத்துடன் இணைத்தது புதுமை.
தஞ்சாவூர், செல்லக்கண்ணன்.

O ஆகாசத் தாமரை ஒரு வித்தியாசமான தொடர்கதை! தமது படைப்புக்கள் ஒவ்வொன்றையும் புதுமையாக அல்லது புரட்சிகரமாக எழுதிடும் இந்திரா பார்த்தசாரதியின் இந்தத் தொடரும் ஒரு புதுமையான தொடர் கதைதான். பாராட்டுக்கள்!
பெங்களூர், ப. மூர்த்தி.

O சமூகப் பிரக்ஞையுடன் கூடிய ஒரு தொடரை மிக நேர்த்தியாக இருபத்து நான்கு வாரம் கொண்டு சென்றார் இ. பா. ஆகாசத் தாமரையில் துருவ் - சந்தியா கதாபாத்திரம் எளிதில் மறக்கக்கூடியவையல்ல... கதைக்கு உயிரோட்டமாய்ப் படம் வரைந்த 'மாருதி' யையும் பாராட்டியே ஆக வேண்டும்!
மேல்பட்டி, எல். மாறன்.

O இந்திரா பார்த்தசாரதி 'ஆகாசத் தாமரை' மூலம் மெல்லிய மன உணர்வுகளை இதமாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்; உயிரோட்டமான கதை.
மேலகிருஷ்ணன்புதூர்,
ஆர். கே. லிங்கேசன்.

O 'மனித சுபாவத்தை மாற்ற முடியாது. புத்தர் முயன்றார் தோற்றார்; ஏசு முயன்றார் தோற்றார்; காந்தி முயன்றார் தோற்றார்' என்னும் வரிகள் என் நெஞ்சை விட்டு அகலவில்லை. எத்தனை சத்தியமான வார்த்தைகள்.
பெங்களூர், என். கே. ஈசுவரி.

காலையில் எங்களுக்கு ஓர் ஒத்திகை தரப்பட்டு விட்டதால் எங்கள் மரியாதை நிழலான மரியாதை என்பதை உணர்ந்தேன். ஜனாதிபதி அவர்களும் அவர்களது பக்கம்தான் அதிக நேரம் கைகூப்பி நமஸ்கரித்தார். எங்கள் பக்கம் அதிகம் திரும்பவில்லை!

வழக்கமான மேடைப் பேச்சு ஆரம்பித்தது. பரிசை வாங்க வந்தவர்களும், அவர்கள் உறவினர்களும் நண்பர்களும் எந்தக் காரணத்தைக் கொண்டும் எழுந்து செல்ல மாட்டார்கள்; அப்படியே எழுந்து செல்ல முயன்றாலும் ஜனாதிபதிக்காக அரங்கத்தைச் சுற்றி நின்று கொண்டு இருக்கும் செக்யூரிடி, யாரையும் நடுகுடு பாதியில் எழுந்திருக்க அனுமதிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையிலும் தைரியத்திலும் மேடையில் சிலர் வெளுத்து வாங்கிக் கொண்டிருப்பதாக நினைத்து, அறுஅறு என அறுத்துக் கொண்டிருந்தார்கள்! (இங்கும் சில 100வது நாள் விழாக்களில் இந்த மாதிரி பிரஹஸ்பதிகளைக் காணலாம்).

ஜனாதிபதி பேசி முடித்தவுடன் பரிசு வழங்கும் நிகழ்ச்சி ஆரம்பித்தது. எனக்குக் கை கால்கள் உதற ஆரம்பித்தன. ஜனாதிபதி அவர்களுக்கு மூன்று அடி தள்ளி நின்று பரிசு வாங்க வேண்டும் என்று கறாராகச் சொல்லி இருந்தார்களே, அந்த இடத்தில் ஒரு கோடாவது போட்டிருக்கலாமே, மூன்று அடி இடைவெளி என்பது தப்பித் தவறி இரண்டே முக்கால் அடியாகக் குறைந்து விட்டால், 'இவன் வேறு ஏதோ நோக்கத்தோடு ஜனாதிபதியை நெருங்குகிறான்' என்று கருதி ஏதாவது ஒரு மூலையில் இருந்து ஒரு செக்யூரிடி நம்மைச் சுட்டு விட்டால்... விபரீதக் கற்பனைகள்! கிட்டத்தட்ட ''ஏன்டா பரிசு வாங்க வந்தோம்'' என்ற நினைக்கும் அளவுக்கு வந்து விட்டேன்.

முதலாவதாக ஓர் அஸ்ஸாம்காரர் அழைக்கப்பட்டார். மனிதர் என்னை விடத் தொடை நடுங்கி போலும். அவர் மேடை ஏறியது... நடந்தது... ஜனாதிபதியை நெருங்கியது... கை கால்கள் தந்தியடிக்க அவர்முன் நின்றது... ஜாக்கிரதையாக ஆறு அடி இடைவெளி விட்டு நின்றார்!

ஜனாதிபதி பரிசைக் கொடுத்து விட்டுக் கையை நீட்டினாரே பார்க்க வேண்டும்! அஸ்ஸாம் மனிதர் காலையில் ஒத்திகை கொடுத்தவர்களைத் திரும்பி ஒரு பார்வை பார்த்துத் திருதிருவென்று விழித்தார். 'கையைக் கொடுக்கக் கூடாது என்று எங்களுக்குச் சொன்னீர்களே! ஜனாதிபதிக்குச் சொல்லவில்லையா? இப்பொழுது நான் என்ன செய்வது?'

ஜனாதிபதி விட்டாரில்லை. சிலரது

கைகுலுக்கி , சிலரைக் கட்டிப் பிடித்து, சிலருடன் மேடையிலேயே பேசி, சிலரை மாற்றுப் பக்கம் இழுத்து, போட்டோவுக்குப் போஸ் கொடுக்கச் செய்து... அந்த ஜனாதிபதி நிஜமான ஜனாதிபதி. காலையில் ஒத்திகைக்கு வந்த ஜனாதிபதி வெறும் நிழலே!

ஆந்திர அரசிடம் இருந்து என்னுடைய முதல் படத்துக்கு 'நந்தி' அவார்டு வாங்க ஹைதராபாத் சென்றது இன்னொரு வித சுவாரஸ்யம்.

ஏர்போர்ட்டிலிருந்தே எனக்காகத் தனியே ஒரு கார். தவிர என்னுடன் வர அரசாங்க ஊழியர் ஒருவரும் நியமிக்கப் பட்டிருந்தார். பரிசு பெறும் ஒவ்வொருவருக்குமே இந்த மாதிரி ஏற்பாடாம்!

எனக்கு ஆந்திராவில் நிறைய நண்பர்கள் உண்டு. அவர்களில் ஒருவரது கார் ஏர்போர்ட்டுக்கு வந்திருந்தால் நான் அரசாங்கக் காரில் ஏறாமல் என் நண்பரின் காரிலேயே ஏறுவதாகச் சொல்லி விட்டு ஏர்போர்ட்டில் இருந்து கிளம்பினேன். எனக்காக ஒதுக்கப்பட்ட காரில், அந்த ஊழியரும் என்னை ஓட்டலுக்குப் பின் தொடர்ந்தார்.

பின்னர் 30 கி.மீ. தொலைவில் இருந்த ஓர் உறவினர் வீட்டுக்குச் சென்று விட்டு மாலையில் விழாவுக்குச் செல்ல அரை மணி நேரம் 'டைம்' வைத்து ஓட்டலுக்குத் திரும்பினேன். நடுவில் நடந்த பிரஸ்மீட், லஞ்ச் எதிலும் கலந்து கொள்ளாததால் அதிருப்தி அடைந்திருந்தாலும், அதைக் காட்டிக் கொள்ளாமல் அந்த அரசாங்க ஊழியர் இன்முகத்துடன் எனக்காகக் காத்திருந்தார்.

விழாவில் முதல்வர் ராமராவ் பிரம்மாண்டமான மேடையில், மிகப் பெரிய ஜனசமுத்திரத்துக்கு நடுவே, அட்டகாசமான நந்தி விருது வழங்கினார். விழா முடிந்ததும் நான் ஓட்டலுக்குத் திரும்பத் தயாரானேன். ஓடோடி வந்தார் அந்த ஊழியர். ''சார் பிரஸ்மீட், லஞ்ச் இதைத் தான் மிஸ் பண்ணிட்டீங்க. இரவு ஸி.எம். டின்னர் இருக்கிறது. அதையும் மிஸ் பண்ணிடாதீங்க'' என்று கெஞ்சாத குறையாகக் கேட்டார். நான் அவரிடம் வெளிப்படையாகவே சொன்னேன்:

''சார்! நான் தமிழில் எழுதிய ஒரு கதை தெலுங்கில் எடுக்கப்பட்டு, சிறந்த கதைக்கான விருது எனக்குக் கிடைத்திருக் கிறது. எனக்குச் சந்தோஷம். ஆனால் அந்தத் தெலுங்கு நடிக - நடிகையர்கள், தொழில் நுட்பக் கலைஞர்கள் கூட்டத்தில் என்னை யாருக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை. எனக்கு அதில் வருத்தமில்லை. ஆனால்



தெரியாத அந்தக் கூட்டத்தில் தர்மசங்கடமாக உணர்ந்து உணவு அருந்துவதை விட, நான் வெளியே ஏதேனும் ஒரு ஓட்டலில் மனைவியுடன் சேர்ந்து சந்தோஷமாக உணவு அருந்த விரும்புகிறேன். உங்களுக்கு ஏதாவது ஆட்சேபணை இருக்கிறதா?''

மனிதர் என்னை வலுக்கட்டாயமாக இழுத்துக் கொண்டு போனார். நானும் வேண்டா வெறுப்பாக மனைவியுடன் அங்கு சென்று பஃபே டின்னரில் எங்களுக்கு வேண்டியதைத் தட்டில் போட்டுக் கொண்டு, ஒரு மூலையில் உணவருந்திக் கொண்டிருந்தோம்.

ஒருசில நிமிஷங்கள் சென்றிருக்கும். முதல்வர் ராமராவ் அவருக்கே உரித்தான வகையில் பஞ்சக்கச்ச நுனியைப் பையில் சொருகிக் கொண்டு கையில் ரசகுல்லா வாளியுடன் எங்களை நோக்கி நடந்து வந்தார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ரசகுல்லாவை அவர் கையாலேயே என் தட்டிலும், என் மனைவி தட்டிலும், போட்டார். நான் வாயடைத்து நின்றேன்.

கட்டைக் குரலில், தெளிவான தமிழில், நிறுத்தி நிதானமாக என் மனைவியிடம் சொன்னார்: ''பரிசு வாங்க உங்கள் கணவருடன் நீங்களும் வந்தது எனக்கு ரொம்ப மகிழ்ச்சி. அவசரப்படாமல் இருந்து சாப்பிடுங்கள். வேறு ஏதாவது வேணுமா? கொண்டு வரவா?''

அன்று முதல் என்ன பரிசு வாங்கினாலும் அது ஆந்திர தேசத்துப் பரிசு போல ஆகாது என்று என் மனைவி ஓயாமல் சொல்லிக் கொண்டு இருக்கிறாள்!

அந்த அரசு ஊழியர் என் மனநிலையை எடுத்துக் கூறியதில் ராமராவ் என்னை அணுகினாரா, அல்லது அவராகவே வந்தாரா? - தெரியாது. எவ்வாறானாலும் அவரது பெருந்தன்மை என்னை அசரவைத்து விட்டது. நிழலான ராமராவைப் பலமுறை சினிமாவில் பலவிதமாக நாம் பார்த்திருக்கிறோம். அன்று நிஜமான ராமராவைச் சந்தித்தேன்.

(நிழல்கள் தொடரும்)

பரிசு

ரூ. 40,000


# கல்கி பொன்விழா நாவல் போட்டி

| | |
|---|---|
| சரித்திர நாவலுக்குப் பரிசு (சுமார் 52 இதழ்கள்) | ரூ. 20,000/— |
| சமூக நாவலுக்குப் பரிசு (சுமார் 26 இதழ்கள்) | ரூ. 10,000/— |
| மர்ம நாவலுக்குப் பரிசு (சுமார் 12 இதழ்கள்) | ரூ. 5,000/— |
| விஞ்ஞான நாவலுக்குப் பரிசு (சுமார் 12 இதழ்கள்) | ரூ. 5,000/— |

**முடிவு தேதி: ஆகஸ்டு 31, 1991**

- இதற்கடுத்த பத்து மாதங்களில் நாவல்களின் பரிசீலனை முடிந்து கல்கி பொன்விழாச் சிறப்பிதழில் முடிவு வெளியாகும். பரிசு பெற்ற நாவல்களுள் ஒன்று அதே சிறப்பிதழில் ஆரம்பமாகும். அதாவது 1992 ஆகஸ்டு முதல் வார இதழ்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படும் இதர நாவல்களுக்கு வழக்கமான சன்மானம் அளிக்கப்படும்.
- நடுவர் குழு நாவல்களைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய நாவல்களைத் தேர்ந்தெடுக்கும்.
- கல்கி பொன் விழா நாவல் போட்டிக்கு அனுப்பப்படுவதாகத் தெளிவாகக் குறிப்பிடுதல் அவசியம்.
- பிரதி வாரமும் படத்துடன் சேர்த்துக் கல்கியில் 4 — 5 பக்கங்களுக்கு மேற்படாதபடி அத்தியாயங்களின் அளவை நிர்ணயிப்பது நல்லது.
- கடிதப் போக்குவரத்து கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத நாவல்களைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலைகள் இணைக்க வேண்டும்.
- அப்படித் திருப்பி அனுப்பவே அவசியம் நேராதபடி அற்புதமான நாவல்களை எழுதி அனுப்பிக் கல்கி பொன்விழா ஆண்டினைச் சிறப்பிக்குமாறு எழுத்தாளர் பெருமக்களை வேண்டுகிறோம்.

— ஆசிரியர், கல்கி, சென்னை — 600 032.



# பணம் சம்பாதிப்பது எப்படி?

எதிர் காலத்தைப் பற்றிய கவலை இல்லாமல் மனிதனால் இருக்க முடியுமா? அதற்காகப் பணம் சேர்ப்பதாகச் சிலர் சொல்வார்கள். நியாயம்தான். ஆனால் எதிர் காலத்தைப் பற்றிய கவலையில், நிகழ் காலத்தையே பலர் கொன்று போடுவது நியாயமே அல்ல. பலர் நிகழ் காலம் என்பதையே அனுபவிப்பதில்லை... இது பெரும் பாவம். ஒவ்வொரு விநாடியும் கடவுள் நமக்குக் கொடுத்த கொடை! ஒவ்வொரு விநாடியும் வாழ வேண்டியது நமது கடமை. நாளைக்கு வாழ வேண்டும் என்பதற்காக இன்றைக்குச் 'செத்து'க் கிடக்க முடியாது.

அவர் ஒரு பணக்காரர். திரைகடல் ஓடியும் திரவியம் சேர்ப்பது அவரது பரம் பரைப் பழக்கம் - அல்லது பாரம். அந்தக் காவிரிப்பூம் பட்டினத்துக் காசுக்காரருக்குக் கடவுளே பிள்ளையாக வந்தான். பெரிய நோய்க்குப் பெரிய மருத்துவர் வர வேண்டி இருக்கிறது!

இந்தப் பணம் சேர்க்கும் வியாதி பிள்ளைக்கும் வரவேண்டும் என்று அவருக்கு ரொம்பவும் ஆசை. வியாபாரம் செய்ய மருதவாணன் என்ற அந்தப் பிள்ளையை அயலூருக்கு அனுப்பினார் அப்பா!

பிள்ளையோ அப்பாவுக்கு அன்பளிப்பாக ஒரு பெட்டியை அனுப்பினார். திறந்து பார்த்தால்.... காதில்லாத ஊசி ஒன்று.... ஊசியை விடக் கூராகக் காதுகளைத் தைக்கும் வாசகம் ஒன்று.... ''காதற்ற ஊசியும் வாராது காண் உம் கடை வழிக்கே...''

பொறி கலங்கியது... நேராகவே நெஞ்சில் தைத்தன அந்தவரிகள். துறவு உணர்வு உறவு பூண்டது! சேர்த்த பொருளை அள்ளிக் கொடுத்துப் புண்ணியம் சேர்க்கக் கூட விரும்பாமல், கஜானாவைத் திறந்து

சுகி சிவம்

போட்டு விட்டுப் புறப்பட்டார்.

பூட்டி வைத்திருந்தால் கொள்ளையடித்த பாவம் மற்றவர்க்கு வரும் என்ற கவலையோ என்னவோ... கஜானாவைத் திறந்து போட்டு விட்டுப் போனார். அந்தப் பட்டினத்தார்.

இதற்காகப் பட்டினத்தாரைப் போல எல்லோரும் பரதேசியாகப் புறப்படுங்கள் என்று நான் சொல்லவில்லை! நூறு மதிப்பெண்ணுக்குக் குறிவைத்தால்தான் எழுபது, எண்பது மதிப்பெண்ணாவது கிடைக்கிறது. பட்டினத்தாரைக் குறிக்கோளாக வைத்தால்தான் பணத்துக்காகப் பாவம் செய்யாத சராசரிப் பண்பாவது நமக்கு வரும்.

பொருள் ஒன்றையே குறிக்கோளாக உள்ளவர்கள் எல்லாத் தவறுகளுக்கும் தயாராகி விடுகிறார்கள். 'நாய் விற்ற காசு குரைக்கவா போகிறது' என்று தாங்களே சத்தமாகக் கூச்சல் போட்டு நாய்களைப் பெருமைப் படுத்தி விடுகிறார்கள்!

பணம் பல சமயங்களில் மனித இயல்புகளையே கொச்சைப் படுத்திவிடுகிறது. கங்கை ஆற்றங்கரையில் நாள்தோறும் இராமகிருஷ்ணர் உலவும் போது, ஒரு பிச்சைக்காரன் அவரை எழுந்து நின்று வணங்குவது வழக்கம்.

அன்று ஓர் ஆச்சர்யம். குருதேவர் வரும் சமயம் அவன் பணிவுடன் வணங்கவும் இல்லை! எழுந்து நிற்கவும் இல்லை. இருந்த இடத்தில் இருந்தபடி அலட்சியமாக நலன் விசாரித்தான். குருதேவருடன் வந்தவர்களுக்கு அவன் நடவடிக்கைகளுக்கு காரணம் புரியவில்லை!

குருதேவர் சிரித்துக் கொண்டு சொன்னார்: ''இன்று அவன் தேவைக்குமேல் பிட்சை கிடைத்துவிட்டது. கையில் கொஞ்சம் காசு கூடச் சேர்ந்து விட்டது. அது அவனைப் படாத பாடுபடுத்துகிறது!''

''முந்திரிமேல் காணி மிகின் தன்னை இந்திரனாக எண்ணிவிடும்'' என்ற பழையோர் மொழி நூற்றுக்கு நூறு உண்மை.

அறம், பொருள், இன்பம் என்று வழிமுறை வைத்து, அறவழியில் தான் பொருள் சேர்க்க வேண்டும் என்றும் அந்தப் பொருளைக் கொண்டே இன்பம் துய்க்க வேண்டும் என்றும் முறை வைத்தனர் முன்னோர். இதை மறக்கக் கூடாது.

பணத்தைவிடக் குணம் முக்கியம். குணத்தைத் தரும் மனம் முக்கியம். பணத்திற்காக என்னவேண்டுமானாலும் செய்யலாம் என்ற கருத்து உருவாகாதபடி வாழ்க்கையை அமைப்பது அவசியம்.

அவர் ஒரு நல்ல அரசர். 'அரசர்'

என்பதைப் பதவியாக ஒரு போதும் அவர் நினைத்ததில்லை. பணியாகவே கருதினார். மக்களை ஆளுகிறோம் என்ற மமதை இல்லாமல் மக்களுக்குத் தொண்டு செய்யும் முதல் வேலைக் காரனாகத் தம்மைக் கருதினார்.

வரிப்பணத்தை எச்சரிக்கையாகச் செலவு செய்ய எண்ணினார். விரயம், ஆடம்பரம், விழாச் செலவு, விருந்து வேடிக்கைகள் என்று வீண் செய்யக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். எளிய சிக்கன வாழ்க்கையை ஒருமாதம் நடத்த என்ன செலவு ஆகும் என்று கணக்கிட்டு மாதச் சம்பளமாக அதனைப் பெற்று வந்தார்.

ஒருநாள்... பண்டிகை கொண்டாட வேண்டிய அவசியம் வந்தது. மனைவி - அதாவது அரசி - அரசரிடம் கூடுதலாகப் பணம் கேட்டார். புத்தாடைகள் உடுத்த, இனிப்புகள் செய்யக் கூடுதல் பணம் தேவை என்றார். மன்னர் மறுத்துவிட்டார். வரிப்பணத்தில் இந்த ஆடம்பரங்கள் அவசியம் இல்லை என்றார்.

பண்டிகை நாள்.... காலை உணவோடு இனிப்புகள் வந்தன! குழந்தைகள் புத்தாடையில் உலவின! மன்னருக்கு ஆச்சர்யம். 'இதற்கெல்லாம் பணம் எங்கிருந்து வந்தது?' - மனைவியைக் கேட்டார்.

கடந்த ஒரு வருடமாக நீங்கள் மாதம் தோறும் செலவுக்காக அனுமதித்த தொகையில் கொஞ்சம் கொஞ்சம் மீதம் வைத்திருந்தேன். அப்படிச் சேமித்த பணத்தில் இந்த இனிப்புகளும் புத்தாடையும் தயாராயின'' என்று தயங்கிக் கொண்டே சொன்னார் அரசியார்.

''எவ்வளவு மீதம் வைத்திருந்தாய்?'' அரசர் துளைத்தார். தொகையை (மறைக்காமல்) சொன்னார் தேவியார்.

அரசர் மந்திரியை அழைத்தார். ''அடுத்த மாதத்திலிருந்து என் சம்பளம் குறைக்கப்பட வேண்டும்.''

''ஏன்?'' - பதறினார் அமைச்சர்.

''மாதச் செலவுக்கு நான் கொடுத்த தொகையில் மீதம் வைக்க என் மனைவியால் முடிகிறது என்றால், என் தேவைக்கு மேல் சம்பளம் பெற்ற குற்றம் நிரூபிக்கப்பட்டது. எனவே என் சம்பளம் குறைக்கப்படட்டும்'' என்றார் அரசர். மனைவி மீதப்படுத்திய தொகையைப் பன்னிரண்டால் வகுத்து அதனை மாதச் சம்பளத்தில் குறைக்க உத்தரவிட்டார்.

இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை! இப்படியும் இருந்திருக்கிறார்கள் என்று சொல்கிறேன்!

(இன்னும் சொல்வேன்)

# தி.மு.க. இனி என்ன செய்ய வேண்டும்?

O வி. சத்யநாராயணன், சென்னை - 4.

? 'எழுத்துக்களை நேசியுங்கள், எழுத்தாளர்களை வேண்டாம் (நான் உட்பட)' என்று கூறும் மேத்தாதாசன் பற்றி...?

! அப்புறம் ஏன் இவர் இப்படிப் பெயர் வைத்துக் கொள்ள வேண்டும்?



O ஹெச். மோகன், மன்னார்குடி.

? நடிகை ஜெ - எதிர்க்கட்சித் தலைவர் ஜெ - முதல்வர் ஜெ - ஒப்பிடவும்.

! சக்ஸஸ் - ஃபிளாப் - பொறுத்திருந்து பார்ப்போம்!

O வி. ராஜா, சட்டநாதபுரம்.

? தேர்தல் முடிவுகளை அடுத்து கருணாநிதி இனி என்ன செய்வார்?

! கதை - வசனம் பக்கம் கவனம் திரும்பும்!

O அ. க. கிருஷ்ணன், சென்னை.

? தேர்தல் முடிவுகளிலிருந்து தமிழக மக்கள் கற்றுக்கொள்ள வேண்டியது என்ன?

! வதந்திகளை நம்பாதீர்கள்!

O ஏ. எம். பழனிசாமி, போத்தனூர்.



? பாரத ரத்னா விருது காலம் கடந்து பெறுவதில் நன்மை அதிகமா? விரைவில் பெறுவதில் நன்மையா?

! செத்துப் போன பிறகு வழங்கினால், 'என்னை அவமானப்படுத்துவது போல் இருக்கிறது வேண்டாம்' என்று மறுத்துச் சொல்ல முடியாது. பாவம், பட்டேல்!

O மீ. தமிழ் ஷாஜ ஹான், கம்பம்.

? தி. மு. க. மீண்டும் மக்கள் மனத்தில் இடம் பெற என்ன செய்ய வேண்டும்?

! காங்கிரஸ் தோழமைக் கட்சியானதால் ஒரு நல்ல எதிர்க் கட்சியாகச் செயல்பட முடியாது. எனவே தி. மு. க. சட்டமன்றத்தில் பிரவேசிக்க முடியாவிட்டாலும் அதற்கு வெளியே இருந்தபடியே சிறப்பான எதிர்க் கட்சியாகப் பணியாற்ற முடியும் என்று காண்பிக்க வேண்டும். அதையும் ஜனநாயக மரபுகள் மீறாமல் அஹிம்சா முறையில் செய்து காட்ட வேண்டும். இல்லையெனில் வெறுப்பே மேலும் அதிகமாகும்.



O எஸ். நீலா ஈஸ்வரி, பந்தல்குடி.

? பிரதமர் சந்திரசேகருக்கு மக்களிடம் செல்வாக்கு இல்லாமல் போனது ஏன்?

! ஒரு புயல் அடிக்கும் போது கோபுரத்தின் உச்சியில் போய் உட்கார்ந்து விடும் ஒரு துண்டுக் காகிதமோ, இலைச் சருகோ தன்னை ராஜாளிக்கு ஒப்பாக நினைத்துக் கொண்டால் அது யார் பிசகு?



O எஸ். ஜெயராமன், சென்னை - 15 ★

? வாழப்பாடியார் வதந்தி பரப்புவதாக எழுதிய நீங்கள், பத்திரிகைகள் பரப்பும் வதந்தி குறித்து ஆவேசம் காட்டாதது ஏன்?

! இதோ காட்டி விடுகிறேன். பத்திரிகைச் சுதந்திரம் என்பது பொறுப்புணர்வுடன் இணைந்தது. பொறுப்பின்றிப் பத்திரிகைகள் எழுதுவதால்தான் பல சந்தர்ப்பங்களில் ஆட்சியாளருக்குப் பத்திரிகைச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறது. எனவே வதந்தி பரப்பும் பொறுப்பற்ற பத்திரிகைகள்தாம் பத்திரிகைச் சுதந்திரத்தின் முதல் எதிரிகள். இப்படி நான் சொல்வதால் பத்திரிகைகளை அரசு சென்ஸார் செய்வதை ஆதரிப்பதாக அர்த்தம் பண்ணிக் கொள்ளக் கூடாது. முட்கள் குத்துகின்றன என்று கிளைகளை வெட்டப் போனால் மரமே பட்டுப் போகும். இன்னொன்று: நல்ல பத்திரிகைகள், மோசமான பத்திரிகைகள்

# நீங்கள் கேட்டவை - தராசு

உலகின் எந்தப் பாகத்திலும் உண்டு. ஒரு வித்தியாசம் : மேல் நாடுகளில் பரபரப் பூட்டும் பத்திரிகைகளை மக்கள் ஒரு கிக்குக் காகப் படிப்பார்கள்; நம்ப மாட்டார்கள். இங்கே கல்வி அறிவு கம்மியானதால் நம்பி விடுகிறார்கள். எனவே இங்கு பத்திரிகை நடத்துவோருக்குக் கூடுதல் பொறுப் புணர்வு தேவை.

O **என். எடிசன், நெல்லை.**

*? போதிய உறுப்பினர் இல்லாது மைனா ரிட்டி ஆட்சி அமைத்துள்ள காங்கிரஸ், ஜனதா தளத்தின் துணையை நாடுகிறதே, சரியாகுமா?*



! ஜனதா தளம், ஜன மோர்ச்சாவுக்கும் காங்கிரஸுக்கும் இடையே அப்படியொன்றும் கொள்கை யளவில் பெரிய வித்தியாசமில்லை. காங்கிரஸ் கட்சி ராஜீவின் இரும்புப் பிடியில் இருந்தது. ராஜீவுக்கும் இவர்களுக்கும் இடையே போஃபோர்ஸ் போன்ற அம்சங்களில் ஏற்பட்ட மோதல்கள்தான் முக்கியம். தனிநபர் எதிர்ப்புத்தான் பிரதானம். அதனால், காங்கிரஸிலிருந்து பிரிந்து வந்தவர்கள், இப்போது காங்கிரஸுக்கு ஆட்சி கவிழாமல் இருக்க, இயன்ற அளவு ஆதரவு தருவதாகக் கூறுவதில் வியப் பொன்றுமில்லை. மேலும், இன்னொரு தேர்தல் வருவதை இப்போதைக்கு யார் தான் விரும்புகிறார்கள்? எனவேதான், எதிர்ப்புப் பணியை பி. ஜே. பி. யின் ஏக போக்கிய மாக்கி விடாமல் நாங்களும் எதிர்க்கட்சியாக இருக்கிறோம்; அதே சமயம் நல்ல திட்டங்களுக்கு ஆதரவும் தருகி றோம் என் கின்றனர் வி. பி. சிங்கும் அவரது சகாக்களும்.

O **துரை நாராயணன், திருவெண்ணெய் நல்லூர்.**

*? தலையங்கத்தில் பி. ஜே. பி.யின் பின்னடைவு எதிர்பார்த்ததுதான் என எழுதப்பட்டுள்ளது. சென்ற தேர்தலில் 86 பி. ஜே. பி. எம்.பிக்கள். இப்போது 119. அயோத்திப் பிரச்னையால்தான் பின்னடைவு என்று தலையங்கம் குறிப்பிடுகிறது. அயோத்தியை வைத்துத்தான் இன்று உ.பி.யில் பி.ஜே.பி. ஆட்சி அமைகிறது. இது எப்படி பின்னடைவாகும்?*

! 1. மத்தியில் ஆட்சி அமைக்க முடியும் என்று உறுதியாக நம்பி வந்த நிலையிலிருந்து பின்னடைவு. 2. தென்னகத்தில் கணிசமான வெற்றி பெற முடியும் என்ற நிலையில் பின்னடைவு. 3. மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், ஹிமாசலப் பிரதேசம் ஆகியவற்றில் பி. ஜே. பி. ஆட்சியிருந்தும் அங்கேயெல்லாம் பின்னடைவு. இம்மூன்றில் மொத்தமுள்ள 69 எம். பி. தொகுதிகளில் சென்ற தேர்தலில் கைப்பற்றியவை 47. இம்முறை கைப்பற்றியவை 26. 4. அயோத்தி பிரச்னையில் நேரடியான தொடர்புள்ள உ.பி.யில் பி. ஜே. பி. வெற்றி பெற்றதில் வியப்பில்லை. ஆனால் அந்தப் பிரச்னையில் பி. ஜே. பியினால் இதர மாநிலங்களில் ஆதரவைப் பெற முடியவில்லை என்பதோடு, ஏற்கெனவே இருந்த ஆதரவும் குறைந்து போயிற்று. இவையெல்லாம் பின்னடைவு இல்லாமல் வேறென்ன? உ. பி. வெற்றியையும் மக்களவை எண்ணிக்கையையும் மட்டும் கருத்தில் கொண்டு, 'ரத யாத்திரை சரி' என்ற முடிவுக்கு பி. ஜே. பி. தலைவர்கள் வருவார்களேயானால் அவர்களுக்காக வருத்தப்பட வேண்டியது தான். ராமஜன்மபூமி விஷயத்தில் நிதானம் காட்டுவதே விவேகமாய் இருக்கும்.

O **வண்ணை கணேசன், சென்னை - 11.**

*? புதிய பிரதமருக்கு நீங்கள் கூறுவது என்ன?*



! தேர்தல் முடிவுகளின் அடிப்படையில், மாற்றுக் கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆட்சிக் கலைப்புச் செய்யாதீர்கள். முன்னர் பலர் செய்த தவறுகளிலிருந்து படிப்பினை பெற வேண்டுமே தவிர, அவற்றை முன்னுதாரணமாகக் கொண்டு செயல்படாதீர்கள்.

* ரூ. 20 பரிசு பெறுபவர் :
எஸ். ஜெயராமன்,
17, சோமு செட்டித் தெரு,
5 வது சந்து, இராயபுரம்,
சென்னை - 13.

# மழலையின் பிறந்தநாள்!









**"என்றைக்கும் இல்லாம இன்றைக்குப் பால் நிறம் 'பளிச்'சுன்னு இருக்கே! என்னப்பா விஷயம்?"**

**"ஹி... ஹி.. இன்றைக்குச் 'சொட்டு நீலம்' ரெண்டு சொட்டு அதிகமாக விழுந்திடுச்சம்மா!"**

**- பந்தல்குடி, எஸ். நீலா ஈஸ்வரி.**

O O O O O




O நண்பர் ஒருவருடைய வீட்டிற்குப் போயிருந்த போது, சாப்பிட்டு விட்டுத்தான் போக வேண்டும் என்று சொல்லவே, நான் பேண்ட்டோடு தரையில் உட்கார்ந்து சாப்பிட வசதிப்படாது என்பதால், நண்பரின் வீட்டிலிருந்த ஒரு லுங்கியைக் கட்டிக் கொண்டு தரையில் உட்காரப் போனேன். அப்போது... நண்பரின் தம்பி, "அண்ணே! அண்ணே! தரையிலே உட்காராதீங்க; பாய் விரிக்கறேன்" என்றான்.

நான், "இது நம்ம வீடு. நம்ம வீட்டிலே தரையிலே உட்காருவதற்கு என்ன; பாய் எதற்குப்பா?" என்றபடியே மீண்டும் தரையில் உட்காரப் போனேன். நண்பரின் தம்பி, விடாமல், "அண்ணே! வீடு நம்மளோடதுதான்; ஆனால் புது லுங்கி என்னோடதாச்சே" என்று சொல்ல, குபீர்ச் சிரிப்புத்தான் போங்கள்.

- சென்னை -28, ஜி. டி. ராஜா.

O O O O O



**"ஒற்றைக் கண் ஆசாமியை ஏகமா விளம்பரப்படுத்தி ஸி.பி.ஐ. தேடறதனால உங்க பிசினஸ் டல்லடிக்குதா? அதெப்படி? என்ன பிசினஸ் பண்றீங்க?"**

**"ஜிப்பா!"**

***- திருச்சி - 1, சம்பத்குமாரி.***

O O O O O

ஐம்பது வயதைத் தொட்டுக் கொண்டிருக்கும் எனது மாமா எப்போதும் தலைமுடிக்கு "டை" அடித்து ட்ரிம்மாகக் காட்சியளிப்பார்.




ஒரு நாள் அவருடைய சாயம் போன தலையைக் காட்டி, ''என்ன மாமா! தலையெல்லாம் வெளுத்திருக்க மீசை மட்டும் கறுப்பாயிருக்கே'' என்று கிண்டலடிக்க,

''ஓ! அதுவா... தலையை விட மீசைக்குப் பதினெட்டு வயசு குறைச்சலில்லையா? அதுதான்'' என்றாரே பார்க்கலாம்!

- திருச்சி - 1, அ. இராசரத்தினம்.

O O O O O

''தலைவரே! உங்க பிறந்த நாளை எதிர்க்கட்சிக்காரங்களும் கொண்டாடுறாங்க!''

''அப்படியா? ரொம்பச் சந்தோஷம்!''

''சந்தோஷமா? 'ஊழலின் பிறந்த நாள்'னு போஸ்டர் அடிச்சுல்ல ஒட்டுறாங்க.''

- சிவசைலம், பி. ஜி. பி. இசக்கி.

O O O O O

O புதிதாக வாங்கி வந்த மடிக்கும் ஹேண்ட் பேக்கைத் தூசாகாமல் இருப்பதற்காக அம்மா அதை ஒரு சிறிய பாலிதீன் பையில் போட்டு வைத்திருந்தாள். ஒரு நாள் ஊருக்குப் போவதற்காக அதை வெளியில் எடுத்துப் பிரித்து அதனுள் துணிகளை அடுக்கிக் கொண்டிருந்த போது, என் பெரிய தங்கை தமாஷாகத் தம்பியிடம், ''பாரு அம்மா இவ்ளோ பெரிய பேக்கை இந்தச் சின்னப் பையில போட்டு வச்சிருக்காங்க'' என்றாள்.

உடனே, என் சிறிய தங்கை அலட்சியமாக,




''இது என்ன பெரிய விஷயம்? இவ்வளவு பெரிய உன்னை ரொம்பச் சின்ன வயித்துல வச்சிருந்தாங்களே, அதைச் சொல்லு!'' என்று கூற ஒரே சிரிப்புத்தான்!

- நாட்டார்மங்கலம், எஸ். சிவானந்தவல்லி.

O O O O O

''என்னங்க! தலைவருக்கு நார் நாரா மாலை போடறாங்க?''




''ரோஜாப் பூ மாலைதாங்க. செக்யூரிடிகாரங்க 'செக்', பண்ணின பிறகு இவ்வளவுதான் மிஞ்சியிருக்கு!''

- சென்னை - 40,
மீனாட்சி வைத்தியநாதன்.

O O O O O

'' 'சின்ன வேலைல இருக்கான்'னு சொல்லி, முதலில் ஒதுக்கித் தள்ளிய அதே பையனை, இப்போ மாப்பிள்ளை ஆக்கிக்கணும்னு, ஒரே துடியாத் துடிக்கிறீங்களே... ஏன்...?''




''சின்ன வேலைல இருந்தாலும் மாப்பிள்ளைப் பையன் பிழைக்கத் தெரிந்தவன்...!''

''எப்படிச் சொல்றீங்க?''

''மாப்பிள்ளை என்கிட்டேயே வந்து, ''மாமா, நீங்க வரதட்சணையா எங்க அப்பாவுக்குக் கொடுக்க வேண்டிய பணத்துல, எனக்குத் தனியா ஒரு ஐயாயிரம் வெட்டுங்க. கல்யாணத்தை சிம்பிளா முடிச்சிடறேன்'னு பேரம் பேசறான்னா பார்த்துக்குங்க...!''

- சென்னை - 10, எல். ஆர். ராஜபாஸ்கர்.

**சிரிக்க வையுங்கள்;
சிங்கப்பூர் செல்லுங்கள்!**



# பதவி இருக்கப் பிரமாணம் எதற்கு?

பதவிப்பிரமாணம் செய்து வைப்பது என்பது அவ்வளவு சுலபமான விஷயமல்ல என்பதை டி.வி.யில் எல்லாருமே பார்த்திருப்பீர்கள். மாநில மொழியில் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப் போகிற, பிற மாநிலத்திலிருந்து வந்த கவர்னருக்கு முதல் நாள் இரவே லேசான ஜுரம் வந்து விடுவது வழக்கம்! மந்திரி சபைப் பட்டியலில் குறைந்த பேர்கள் இருந்தால் ஜுரத்தின் வேகம் சற்றுக் குறையலாம். பட்டியல் நீள நீள ஜுரவேகம் கூடும்.

மாநில மொழிகள் பல்வேறு ஆளுனர்களால் சின்னாபின்னமாக உருக்குலைக்கப்படுவதைத் தவிர்க்க, ''பதவிப் பிரமாண டியுடோரியல் என்று மாநில கவர்னர்களுக்கு ஒரு பயிற்சி முகாம் ஏற்படுத்தலாமே?'' என்று என் நண்பர் யோசனை கூறினார்.

மிமிக்ரி குரல் கொடுப்பவர்களின் உதவியை நாடலாமே என்று இன்னொருத்தர் சொன்னார். அதாவது தமிழக கவர்னர் பேச வேண்டிய பதவிப் பிரமாண வாக்கியங்களை, பல்குரலில் பேசக்கூடிய கலைஞர் ஒருத்தரை விட்டுக் கவர்னர் குரலில் பேசவைத்துப் பதிவு செய்து விடுவது. ஒலி நாடாவை ஓடவிட்டு விட்டுக் கவர்னர் வாயசைத்துக் கொண்டிருந்தால் போதும். தமிழ் தப்பிப் பிழைத்து விடும். இதே உத்தியைப் பிறமாநில கவர்னர்களும் பின்பற்றினால் அந்தந்த மாநில மொழிகளும் குதறப்படாமல் தப்பிவிடும்!

கவர்னர் பதவிப் பிரமாணச் சொற்களைத் தமிழிலே சொல்லும் போது அவர் அருகிலிருந்து கொண்டு பக்கவாத்தியக் காரரர்கள் வயலின், தபலா அல்லது மிருதங்கம் வாசிக்கலாம். கவர்னரின் உச்சரிப்பு தெளிவாக மற்றவர்கள் காதில் விழாமல் தடுக்க இது ஒரு சிறந்த உத்தி. பதவி ஏற்கும் அமைச்சர் காதில் விழாமல் போய்விடுமே என்று கவலை வேண்டாம். அவர் கையில்தான் அச்சடித்த தாள் இருக்

விஷ்ராம்

கிறதே. அவர் பாட்டுக்குப் படித்து முடிக்கலாம்.

நமது ஜனாதிபதி மத்திய மந்திரிகளின் பதவிப் பிரமாணத்தின் போது ஒரு முறையைக் கையாண்டார். அதுவும் சிறப்பான முறைதான். பிரமாணத்தின் போது 'மே' என்று ஓர் எழுத்தை மட்டும் சொல்லி நிறுத்திக் கொண்டார். கடகட வென்று மந்திரிகள் மற்ற வாக்கியங்களை ஒப்பித்து விட்டுத் தப்பித்துக் கொண்டனர். தமிழிலும் அது மாதிரி ஆரம்ப எழுத்தைச் சொல்லி விட்டுக் கவர்னர் ஜாலியாகச் சும்மா இருக்கலாம். ஆனால் அது நடக்கிறகாரியமா? ஹூஹும்! தமிழ்ப் பற்று யாரைவிட்டது.

மொழி பெயர்ப்பாளர்கள் மூலம் பதவிப் பிரமாணம் நடத்தலாம். கவர்னர் தமக்கு நன்கு உச்சரிக்கத் தெரிந்த தாய் மொழியில் பதவிப் பிரமாண வார்த்தைகள் ஒவ்வொன்றையும் அழுத்தமாக உச்சரிக்க, மொழி பெயர்ப்பாளர் அதை அவர் சார்பில் மொழி பெயர்த்து மாநில மொழியில் சொல்ல, அமைச்சர் அதைத் திருப்பிக் கூறி பதவிப் பிரமாணம் ஏற்கலாம். நேரம் வீணானால் ஆகிவிட்டுப் போகிறது. அப்படி வேறு என்ன தலைபோகிற காரியம் அமைச்சர்களுக்கோ அல்லது நமக்கோதான் இருக்கிறது. டீவியிலும் இதைவிடப் பிரமாத சுவாரஸ்யமாக எ தை க் கா ட் டி விடப்போறார்கள்?

இன்னொரு யோசனை: கவர்னருக்கு வெற்றிலை போடும் வழக்கம் இல்லாவிட்டாலும் கூடப் பதவிப் பிரமாண தினத்துக்கு முந்தின இரவு, புதுச் சுண்ணாம்பு தடவி ஒரு பீடா போட்டுக் கொண்டு விட வேண்டும். ''கவர்னருக்கு வாயெல்லாம் புண்! வாயே திறக்க முடியவில்லை. மாசிக்காய் அடக்கிக் கொண்டிருக்கிறார்! ஆகவே கவர்னர் பதவிப் பிரமாணப் பத்திரத்தை வெறுமனே கையால்தான் தொட்டுத் தருவார்!'' என்றால் பிரச்னை தீர்ந்துவிடும். தமிழும் பிழைத்துவிடும்.

இப்படியெல்லாம் கிண்டல் பண்ணக் கூடாது; தமிழ் மொழி தெரியாத ஒரு கவர்னர், தமிழ் பேச முற்படுவதைப் பாராட்ட வேண்டும்; அதிலும் தமிழை ஆங்கிலத்தில் எழுதி வைத்துப் படித்தார் என்றால் அவருக்குள்ள தமிழ் ஆர்வத்தை மெச்சுவதற்கு வார்த்தைகளே இல்லை, அவரென்ன வேறு பல தலைவர்கள் போல் 'வ.....ண.....க்.....கே.....ம்'.... 'வாழ்க' என்று ஓரிரு வார்த்தைகள் மட்டுமா சொன்னார். துணிச்சலுடன் முழுப்பதவிப் பிரமாணத்தையும் உச்சரித்திருக்கிறாரே!'' என்றெல்லாம் எதிர் வாதம் கிளம்பும். எனவே இந்தச் சாராரைத் திருப்திப்படுத்த ''ஃபன்டாஸ்டிக்! டாப்டக்கர்! வெளுத்து வாங்கிட்டீங்க! கொன்னுப்புட்டீங்க!'' என்று தூய தமிழில் கவர்னருக்குப் பாராட்டுத் தெ ரி வி த் து விட்டால் போகிறது!

எல்லாவற்றையும் விட முக்கியமான விஷயம், ஆளுனரும் சரி, அமைச்சர்களும் சரி, பதவிப் பிரமாணம் செய்வித்ததையும் எடுத்துக்கொண்டதையும் ஒரு கெட்ட கனவு போல் வெகு சீக்கிரம் மறந்து விடவேண்டும் என்பதுதான். அப்படி மறந்தால்தானே அவர்கள் தவறுகளும் குற்றங்களும் இழைக்க, பத்திரிகைகளும் எதிர்க் கட்சியினரும் எதிர்ப்புக் குரல் கொடுக்க, அரசியல் சூடு பிடிக்கும்? இல்லாதுபோனால் அரசியல் அழுது வடியும் அல்லவா? யாருக்கு வேணும் உப்புச் சப்பற்ற அரசியல்!

---

## ஃபிரிஜ் பரிசு : கூப்பன் நெ : 12

சுலபமாகப் பரிசைத் தட்டிச் செல்ல ஒரு வாய்ப்பு! 'நேற்று வரை நந்தவனம்' தொடர் கதையைக் கவனமாகப் படித்தால் இந்த வாரம் நாங்கள் அதில் வேண்டுமென்றே செய்துள்ள ஒரு தவறு சட்டெனத் தெரிந்து விடும்! இப்படி ஒவ்வொரு வாரமும் வெளியாகும் ஒரு தவறை அந்தந்த வாரக் கூப்பனில் எழுதிப் பத்திரமாக வைத்திருங்கள். தொடர் முடிவுறும் வாரத்தில் திருத்தம் எழுதப்பட்ட எல்லாக் கூப்பன்களையும் எங்களுக்கு அனுப்புவதோடு, கதை பற்றிய 5 - 10 வரி விமர்சனத்தையும் எழுதியனுப்புங்கள். யார் அதிக அளவில் தவறுகளைக் கண்டுபிடித்துத் திருத்தியிருக்கிறாரோ அவருக்கு ஃபிரிஜ் பரிசு! ஆறுதல் பரிசுகளும் உண்டு.

தவறு : ______________________ திருத்தம் : ______________________

# கருப்புப் பணம்

**கருப்புப் பணத்தைக் கண்டுபிடித்த வேட்டைகளில் ஒன்றை விவரிக்கிறார் மூத்த வருமானவரி அதிகாரி ஒருவர்:**

நகரின் செழிப்பான பகுதியில் ஒரு தெருவிலிருக்கும் அந்த பங்களாவுக்குச் சென்ற போது காலை மணி சுமார் பத்து இருக்கலாம். ஒரு அசிஸ்டெண்ட் டைரக்டர், பதினேழு ஆபீசர்கள், ஐந்து இன்ஸ்பெக்டர்கள், சில கிளார்க்குகள் என்று ஒரு குழுவாகச் சென்றிருந்தோம்.

இது மாதிரி ரெய்டு போகும் சமயங்களில் வீட்டுக்கு எத்தனை கேட்டுகள் இருக்கின்றன என்பதை முன்கூட்டியே பார்த்துத் தெரிந்து கொண்டு விடுவோம். சில வீடுகளில் மூன்று கேட்டுகள் கூட இருக்கும். எல்லா கேட்டுகளிலும் எங்கள் அதிகாரிகளை நிறுத்தி விட்டுத்தான் வாரண்டுடன் உள்ளே செல்வோம். இரண்டு மூன்று தளங்கள் உள்ள மாடி வீடாயிருந்தால் எல்லாத் தளங்களிலும் எங்கள் ஆட்களை நிற்க வைத்து விடுவோம்... இது மூன்று மாடி வீடு.

அவர் பெரிய இரும்பு வியாபாரி மட்டுமல்ல; ரியல் எஸ்டேட் பிஸினசிலும் ஈடுபட்டிருந்தார். அதனால் எங்கள் வழக்கப்படி அவரது பிஸினஸ் தொடர்பான இடத்திலும் எங்கள் அதிகாரிகள் அதே சமயத்தில் சோதனை பண்ணத் தயாராகப் போய் விட்டார்கள். வீடுகளுக்கு இது போல ரெய்டு போகும் போது, பெண்மணிகளைச் சோதனையிடப் பெண் அதிகாரிகளையும் அழைத்துச் செல்லுவோம்.

அவர் மனைவி டாக்டரிடம் அப்பாயிண்ட்மெண்ட் இருப்பதைச் சொன்னவுடன், அதைச் சரிபார்த்து அவரை அனுப்பி விட்டோம். பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளையும் அவர்கள் பைகளைப் பரிசோதித்த பிறகு செல்ல அனுமதித்து விட்டோம்.

ஹாலை ஒட்டிய அறையில் ஓர் இரும்பு அலமாரி சுவரோடு பதிக்கப்பட்டிருந்தது. அதன் சாவியைக் கேட்ட போது, 'அதைத் திறக்க முடியாது!' என்றார் அவர்.

'ஏன் திறக்க முடியாது?'

'அதன் சாவி தொலைந்து போய் விட்டது!'

மற்ற இடங்களை எல்லாம் தீவிரமாகச் சோதனை போட்டு, அதிகாரிகள் குறிப்பு எடுத்துக் கொண்டிருந்தார்கள். மாலை நான்கு மணி ஆகி விட்டது. அதுவரை சாவியை அவர் தரவேயில்லை. திரும்பத் திரும்பச் சாவி தொலைந்து விட்டது என்றே சொல்லிக் கொண்டிருந்தார். அவர் மறுக்க மறுக்க எங்களுக்குச் சந்தேகம் வலுத்தது.

இந்த மாதிரி சமயங்களில் நாங்கள் பூட்டு - சாவிக்காரரை அழைத்து, ஒரு மாற்றுச் சாவி தயாரிக்கச் சொல்லித் திறப்பது வழக்கம்.

அதன்படியே ஒரு சாவியைத் தயார் பண்ணி அந்த அலமாரியைத் திறந்தோம். எங்களுக்கு ஒரே ஏமாற்றம். அதில் துணிமணிகள் தவிர வேறு ஒரு மண்ணும் இருக்கவில்லை! ஆத்திரமாக வந்தாலும் அடக்கிக் கொண்டோம்.

'எல்லா அலமாரிகளையும் பார்த்தாயிற்று; புறப்படலாம்' என்ற முடிவுக்கு வந்த போது சட்டென்று ஒரு சிந்தனை! மொத்தம் நாங்கள் திறந்து பார்த்த அலமாரிகளை எண்ணினோம். அவர் எங்களிடம் தந்திருந்த சாவிக் கொத்தில் சாவிகளை எண்ணினோம். மூன்று அதிகம்!

சாவிக் கொத்தைக் கையில் சுழற்றிக் கொண்டே எங்கள் குழுவின் இளம் அதிகாரி ஒருவர், நமுட்டுச் சிரிப்புடன் அவரை அணுகினார்.

''சேத்ஜி! இன்னும் மூன்று அலமாரிகள் பாக்கி. அவை எங்கே? காட்டுகிறீர்களா?''

முகத்தில் வெறுப்பு பளிச்சென்று தெரிய, அவர் எங்களைக் கீழ்த் தளத்துக்கு அழைத்துக் கொண்டு போனார்.

இதுவரை ஏமாற்றமே அடைந்திருந்த நாங்கள் இங்கேயாவது ஏதேனும் கிடைக்குமா, என்ற எதிர்பார்ப்புடன் அவரைப் பின்பற்றினோம்.

முதல் அறையிலேயே அடுத்தடுத்து மூன்று இரும்பு அலமாரிகள்.

சாவியை அவர் குறிப்பிட, முதல் அலமாரியைத் திறந்தவுடன், உள்ளே முழுக்க முழுக்க எவர்சில்வர் பாத்திரங்கள்தாம். ஒரே ஏமாற்றமாகப் போய்

# வேட்டை

விட்டது. இரண்டாவதைத் திறந்து பார்த்தால், அதிலும் ஒரேயடியாகப் பழைய பாத்திரங்கள் மயம்! இதற்கா இவ்வளவு பெரிய ரெய்டு பார்ட்டியுடன் வந்தோம்?

மூன்றாவதைத் திறந்தால் - அது காலி! எங்கள் ஏமாற்றம் உச்சத்தை அடைந்தது!

சட்டென்று ஒரு பொறி தட்டியது. இத்தனை அலமாரிகளைத் திறந்தும் தப்புத்தண்டாவாக ஏதும் சிக்காது போனாலும், ஒவ்வொரு அலமாரியிலும் ஏதேனும் துணிமணியோ, பாத்திரமோ, புத்தகங்களோ அடுக்கியிருந்தது. இது மட்டும் காலியாக இருப்பானேன்? தீவிரமாகச் சோதித்தோம்! பார்த்தால்...

அது அலமாரியே அல்ல!


கீழே - அண்டர் கிரவுண்டுக்கு ஓர் ஆள் தாராளமாக உள்ளே நுழைந்து செல்லக்கூடிய அளவுக்கு வாயில் போன்ற அமைப்பு! அலமாரித் தட்டுக்களை எளிதாக நீக்கி விட்டு முதலில் ஓர் அதிகாரி உள்ளே இறங்கினார். பிறகு இரண்டு மூன்று பேர் இறங்கி, வெளியே வரும்போது கற்றை கற்றையாகக் கரன்சி நோட்டுக்களோடு வந்தார்கள்!

மொத்தம் சுமார் நாற்பது லட்ச ரூபாய்க்கு மேல் இருந்தது. கூடவே 'இரண்டாம் கணக்கு' எழுதப்பட்ட அக்கவுண்ட் புத்தகங்கள். அதாவது உண்மையான வருமானம் பதிவு செய்யப்பட்ட புத்தகங்கள்!

சேட்ஜி பெரிதாகப் பெருமூச்சு விட்டபடி பறிமுதலாகும் பல்வேறு மதிப்புள்ள கரன்சி நோட்டுக்களை ஏக்கத்துடன் பார்த்தார். அவரிடம் மிஞ்சியது நாங்கள் பறிமுதல் செய்ததற்கு அத்தாட்சியாகத் தந்த பட்டியல் மட்டுமே!

- சித்தார்த்





# ஒரு கட்டடம் காணாமல் போகிறது!

சமஸ்கிருதத்தின் மேல், பம்பாய்த் தொழிலதிபர் ராமானுஜ அய்யங்காருக்கு மிகவும் ஈடுபாடு. அந்த மொழியின் வளர்ச்சிக்குத் தம்மால் இயன்ற ஏதேனும் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் ஓர் அறக்கட்டளை அமைத்தார். நண்பர்களுடன் கலந்தாலோசித்த போது, 'பெரிய அளவில் சமஸ்கிருதப் பல்கலைக் கழகம் ஒன்றை அமைத்தாலென்ன' என்ற கருத்து எல்லோரிடமிருந்தும் வரவே, அந்த எண்ணத்தைச் செயல்படுத்தத் துவங்கினார். பல்கலைக் கழகம் அமைக்க அவர் தேர்ந்தெடுத்த இடம் மதுராந்தகம்.

மதுராந்தகம் ஏரிக்குப் பக்கத்தில் பொச்சேரி என்னும் கிராமத்திற்குச் செல்லும் சாலையை ஒட்டி 36 கிரவுண்டு நிலத்தை வாங்கினார். கட்டட வேலைகள் மட மடவென ஆரம்பிக்கப்பட்டன. ஒரு வழிபாட்டு அரங்கத்தையும் பதினெட்டு அறைகளையும் கொண்ட கட்டடம் 79 இல் கட்டி முடிக்கப்பட்டது.

ஆனால், பல்கலைக் கழகம் அங்கே துவங்கப்படவில்லை. வருடங்கள் ஆக, ஆக கட்டடத்தில் உள்ள கதவுகள் ஜன்னல்கள் எல்லாவற்றையும் சமூக விரோதிகள் திருடிக் கொண்டு போய் விட்டார்கள். இப்போது செங்கற்களையும் திருடத் துவங்கியிருக்கிறார்கள். அந்தக் கட்டடத்தில் 'நிழலான' காரியங்களுக்கும் பஞ்சமில்லை! நாம் சென்ற போது, வழிபாட்டு அரங்கத்தில் ஜரூராக சீட்டுக் கச்சேரி நடந்து கொண்டிருந்தது.

அந்தக் கட்டடம் ஏன் பாழாகிக் கொண்டிருக்கிறது? சமஸ்கிருதப் பல்கலைக் கழகம் ஏன் வரவில்லை?

மதுராந்தகத்தில் ஏற்கெனவே செயல்பட்டு வரும், அகோபில மடம் சமஸ்கிருதக் கல்லூரியின் முதல்வரான வாசுதேவாச்சாரியாரைச் சந்தித்தோம்.

''மதுராந்தகத்தில் ஏற்கெனவே, சமஸ்கிருதக் கல்லூரி, வேத பிரபந்த பாடசாலை, மற்றும் ஓரியண்ட் உயர்நிலைப் பள்ளி ஆகியவை செயல்பட்டுக் கொண்டிருப்பதால் தான், ராமானுஜ அய்யங்கார் பல்கலைக் கழகம் கட்ட மதுராந்தகத்தைத் தேர்ந்தெடுத்தார். எங்கள் கல்லூரி 41 ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டது. எனக்கு முன்

முதல்வராக இருந்த ராமசாமி அய்யங்கார், சமஸ்கிருதப் பல்கலைக் கழகத்தைக் கட்டும் பணியில் மிக ஆர்வமாக உழைத்தார். ஆனால் வேக வேகமாகக் கட்டடம் கட்டினார்களே தவிர, அதன் பின்னர் செய்ய வேண்டிய தொடர்ச்சியான பணிகள் நடைபெறவில்லை. இதற்குக் காரணம் ராமானுஜ அய்யங்காருக்கு ஏற்பட்ட நிதிச்சிக்கல் தான்!''

''சமஸ்கிருதப் பல்கலைக் கழகம் துவங்கப்படாத நிலையில் அந்தக் கட்டடம் பாழாகாதவாறு, வேறு வகையில் பயன்படுத்திக் கொண்டிருக்கலாமே!''

''எங்கள் அகோபில மடத்துக்குச் சொந்தமாக மதுராந்தம் நகரிலேயே நிறைய நிலம் முன்பு இருந்தது. அதில் பல்கலைக் கழகத்திற்குக் கட்டடம் கட்டியிருக்கலாம். ஊருக்குத் தொலைவில் கட்டினார்கள். கட்டடம் கட்டப்பட்ட பிறகு அகோபில மடம் ஜீயர் அங்கு சிறிது நாட்கள் தங்கியிருந்தார். பின்னர் ஒரு தனியார் பள்ளி நிர்வாகம் கொஞ்ச காலம் அந்தக் கட்டடத்தைப் பயன்படுத்திக் கொண்டிருந்தது. ஊருக்கு ஒதுக்குப்புறமாக இருந்தபடியாலும், பாதுகாப்பு இல்லாததாலும், அந்தப் பள்ளியும் இடத்தைக் காலி செய்துவிட்டது. அதன் பின்னர் யாரும் அந்தக் கட்டடத்தைப் பயன்படுத்தவில்லை. இப்போது அரசுத்துறை உட்பட, பலர் அந்தக் கட்டடத்தை உபயோகித்துக் கொள்ள விரும்பினாலும், பல்கலைக் கழக டிரஸ்ட் யாருக்கும் கொடுக்க விரும்பவில்லை. காரணம், தேவைப்படும் போது காலி செய்ய மாட்டார்கள் என்ற பயம் தான்!'' என்றார் அவர்.

சமீபத்தில் மதுராந்தகம் வந்த ராமானுஜ அய்யங்கார் ''பல்கலைக் கழகத்திற்கான வேலைகள் மீண்டும் ஆரம்பமாக இருக்கின்றன'' என்ற மகிழ்ச்சியான செய்தியைச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறாராம். அதுவரை குறைந்தபட்சம் காவல் போட்டு, லட்சக்கணக்கில் செலவு செய்து கட்டிய கட்டடத்தில் எஞ்சியுள்ளதும் காணாமல் போவதைத் தடுத்தால் நன்றாக இருக்கும்.

– தில்லப்பா

படங்கள் : ராஜன்

வாசகர் யோசனை :
ஜெ. பத்மா,
மதுராந்தகம்.




''தேர்தல் பிரசாரத்தின் போது ஒரு வேட்பாளர் முழுக்க முழுக்கப் பாதுகாப்போடு இருப்பது என்பது கடினம். ஏனெனில் அந் நேரத்தில் மக்களோடு அவர் கலந்து உறவாட வேண்டியது கட்டாயமானது. அதையும் மீறி அவர் பிழைத்திருந்தால் அது அவரது அதிர்ஷ்டம்!'' – சுடப்பட்டு இறப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன் ராபர்ட் கென்னடி கூறியது.

– வி. ந. ஸ்ரீதரன்.

## குழந்தை மேதை குஞ்சப்பா

'யோ'



**ஆசிரியர் பக்கம் :**

# 'நாகநந்தி' ராமமூர்த்தி

கல்கி அவர்களே, ''நான் நாகநந்தி கேரக்டரை உங்களுக்காகத்தான் உருவாக்கினேன் போலிருக்கு!'' என்று கூறிப் பாராட்டும் அளவுக்குச் சிறப்பாக நடித்தவர், டாக்டர் ராமமூர்த்தி.

அந்தக் கதாபாத்திரத்தில் நடிக்கப் போக, அவரை அதுவரை 'டாக்டர் ராமமூர்த்தி' என்று அழைத்து வந்தவர்களெல்லாம் 'நாகநந்தி ராமமூர்த்தி' என்றே குறிப்பிட ஆரம்பித்து விட்டனர்!



பின்னால் டி. கே. எஸ். சகோதரர்கள் சிவகாமியின் சபதத்தை அரங்கேற்ற முற்பட்ட போது, ராமமூர்த்தியிடம், ''உங்களைப் போன்று அந்த அளவுக்குச் சிறப்பான நாகநந்தியை உருவாக்குவது எங்களுக்குக் கஷ்டம்,'' என்று மனம் திறந்து சொன்னார்கள். ''மகேந்திரன், மாமல்லன், சிவகாமி - இவர்களுக்குத்தான் முக்கியத்துவம் தந்து நாடகத்தை மிளிரச் செய்ய வேண்டும்'' என்று கூறி, அதன்படி செய்து காட்டி வெற்றியும் பெற்றார்கள்.

'இவ்வளவு பெரிய, சிக்கலான கதையை அரங்கேற்ற முடியுமா?' என்று தயங்காது, துணிந்து முன்வந்து, முதன் முதலாகச் சிவகாமியின் சபதம் நாடகத்தை வெற்றிகரமாக நடத்திக் காட்டியது ஒருபுறமிருக்க, டாக்டர் ராமமூர்த்தி அங்கம் வகித்த கிருபா அமெச்சூர்ஸ் குழு, வசூல் தொகையில் ஒரு பைசா பாக்கியில்லாமல் அத்தனையையும் நற்பணிகளுக்கு - குறிப்பாக ராமகிருஷ்ணா மிஷனுக்கு - அளித்தது. பெண் நடிகர்களுடன் சேர்ந்து நடிக்கக் கூடாது என்று அந்த நாடகக் குழுவினருக்கு அன்று இருந்து வந்த ஒரு கோட்பாடு காரணமாக, சிவகாமியாக இன்னொரு ராமமூர்த்தி நடித்தார். இவர் இன்ஜினீயர் ராமமூர்த்தி! சிறப்பாக நடனமாடியும் பாவபூர்வமாக நடித்தும் ரசிகர்கள் உள்ளங்களை உருக்கி விடுவார். கிருபா அமெச்சூர்ஸில் அங்கம் வகித்த எல்லோருமே வக்கீல்கள், டாக்டர்கள், இன்ஜினீயர்கள், உயர் அதிகாரிகள். நாடகக் கலை அவர்களுக்குப் பொழுது போக்கு அல்ல; உயிர்மூச்சு! பொதுப் பணி அவர்களின் இதய வேட்கை! இதனாலெல்லாம் கவரப்பட்ட கல்கி, அக்குழுவைச் சேர்ந்த ராகவாச்சாரி, வரதராஜன் முதலிய அனைவரிடமும் பேரன்பு கொண்டு தேனீர் விருந்து அளித்துக் கௌரவித்தார்.

ராமமூர்த்தி நாகநந்தியாக மட்டுமின்றி, வேறு பல நாடகங்களில் ராவணனாக, கபீர் தாஸராக எல்லாம் தோன்றி அசத்துவார். 'கணீர்' என்ற அவர் குரல், அரங்கின் மூலை முடுக்கெல்லாம் எதிரொலிக்கும். மற்ற நடிகர்களை உத்தேசித்துத் தான், 'மைக்'!

டாக்டராக இருந்து சம்பாதித்ததை நாடகக் கலை வளர்ச்சிக்குப் பகிர்ந்து கொண்டு, நாடகக் கலை மூலம் கிடைத்த பணத்தைப் பொது நலப் பணிகளுக்குக் கொடுத்த ராமமூர்த்தி, நடிக்க முடியாத வயதை எட்டிய போது பஜனைக் கலையை உரியவரிடம் முறையாகக் கற்றுக் கொண்டு பஜனை செய்ய ஆரம்பித்தார்! அதன் மூலம் இறையுணர் ஊட்டியதுடன் தட்டு வசூலை நற்பணிகளுக்கே அளித்தார்.

அண்மையில் காலமான டாக்டர் ராமமூர்த்தியின் வாழ்க்கை, மனம் வைத்தால் நாம் எல்லோருமே ஏதேனும் ஒருவிதத்தில் சமுதாயப் பணியாற்ற முடியும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர்: சீதா ரவி.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. தொலைபேசி: ஆசிரியர் குழு அலுவலகம்: 2344145; சர்குலேஷன் மானேஜர்: 2344190; விளம்பரம் — சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/-; விமானத் தபால்: ரூ. 350/-.



காளிடூன்
நல்ல நட்புங்கறதுக்கு நல்ல
உபமானம் சொல்லணும்னு,
கிளப் சோடா தான் ஞாபகம் வந்து!
CLUB SODA
கிளப் சோடா
பொங்கும் புதுமை மிக்கது.
KALI MARK
இது ஒரு
காளி மார்க்
தயாரிப்பு
ADWAVE/KALI/4208 TAM